# தமிழ்நாடு ஓய்வூதியர் நண்பன்

TAMILNADU OYUVOOTHIAR NANBAN TAMIL MONTHLY

VOLUME - 11 மலர் : 11 JUNE- 2024 Annual Subscription - Rs.200 விலை : ரூ.15.00
ISSUE NO - 09 இதழ் : 09 ஜுன் - 2024 ஆண்டு சந்தா - ரூ.200 Price : Rs.15.00




தோற்றம்

18-07-1936

மறைவு

12-05-1996

அரசு அலுவலர்கள், ஓய்வூதியர்கள் / குடும்ப ஓய்வூதியர்களுக்கு எண்ணிலடங்கா சலுகைகளை பெற்றுத்தந்த தானைத் தலைவர் அமரர் திரு.சிவ இளங்கோ அவர்களின் 88வது (18/7/2024) பிறந்த தின விழாவினை மாவட்டங்கள் / வட்டக் கிளைகள் தோறும் மிக சிறப்பாக கொண்டாடுவோம்

# திருப்பூர் மாவட்ட செயற்குழு கூட்டம்


















# தமிழ்நாடு ஒய்வூதியர் நண்பன்

**தமிழ்நாடு ஒய்வூதியர் சங்கம்**
(பதிவு எண் 84 / 2010)
தமிழ் மாத இதழ்
ஆசிரியர் :

**கோ. சீதாராமன்**
மாநிலத் தலைவர்

வெளியீடு
**சிவ. இளங்கோ இல்லம்**
அஞ்சல் முகவரி
எண்.7, நீலி வீராசாமி தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை–600 005.

ஆசிரியர் குழு

**கோ. சீதாராமன்**
**சி.மருதை**
**அ.சந்திரபோஸ்**
**எஸ். காளிங்கராயன்**
**என். பக்தவத்சலம்**
**வை.ஆறுமுகம்**

புரவலர் (ஆயுள்) கட்டணம் ரூ. 1,500/–
மூன்றாண்டு சந்தா ரூ. 500 /–
ஆண்டு சந்தா – ரூ. 200/–
தனி இதழ் – ரூ. 15/–

அச்சிடுவோர்

ஸ்ரீ முருகன் பிரின்டர்ஸ்,
நம்பர்–7/1, பூ பேகம், 3வது தெரு,
பார்டர் தோட்டம், மவுண்ட் ரோடு, சென்னை–2.


# தலையங்கம்



மாநிலத் தலைவர் **கோ.சீதாராமன்**

**அன்பார்ந்த பாசமிகு ஓய்வூதியர் சொந்தங்களே!**

வணக்கம். 13.05.2024 அன்று நமது சங்க மாநிலமையத்திற்கென சொந்தமாக ஓர் அசையா சொத்தினை (காலிமனை) உருவாக்கி, முறையாக பத்திரப்பதிவு செய்துள்ள நிலையில், அடுத்த கட்டமாக அவ்விடத்தில், ஓர் எழில்மிகு கட்டிடத்தினை உருவாக்கிட மாநில மையம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. கட்டிடத்திற்கான திட்டமிடல் மற்றும் செலவின மதிப்பீடுகளை (Plans & Estimates) தயாரித்து, விரைவில் நடத்திட உள்ள நமது சங்க மாநில செயற்குழுவில் முழுமையாக ஆய்வு செய்து, ஏகமனதான முடிவினை மேற்கொள்ள அனைவரும் ஒத்துழைப்பு நல்கிட வேண்டும்.

நாடாளுமன்ற தேர்தல் முடிவுகள், ஆளுகின்ற அரசிற்கு பெருத்த மகிழ்வினை அளித்திருக்கின்ற நிலையில், நடைபெற்று வரும் சட்டமன்றக் கூட்டத்தொடரில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், தேர்தல் அறிக்கையில் உறுதியளிக்கப்பட்ட கோரிக்கைகளான, 70 அகவை முடித்துள்ள ஓய்வூதியர்கள் / குடும்ப ஓய்வூதியர்களுக்கு கூடுதல் ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம், பழைய ஓய்வூதியத் திட்டத்தினை மீண்டும் நடைமுறைப்படுத்துதல், அங்கன்வாடி / சத்துணவு உதவியாளர்களுக்கு நியாயமான ஓய்வூதியம் போன்ற நமது நியாயமான வாழ்வாதார கோரிக்கைகள் மீது சாதகமான அறிவிப்பினை வெளியிடுவார் என முழுமையாக நம்புகிறோம்.

தற்போது நடைமுறையில் உள்ள ஓய்வூதியர்கள் / குடும்ப ஓய்வூதியர்கள், மருத்துவ காப்பீடு திட்டத்தில் உள்ள குறைபாடுகளை அவ்வப்போது, காலமுறை கோரிக்கை விண்ணப்பங்களை தமிழக அரசிற்கும், கருவூல கணக்குத்துறை ஆணையர் அவர்களுக்கும் சமர்ப்பித்து, உண்மையான ‘‘காசில்லா மருத்துவம்’’ அளித்திட

வேண்டும் என வலியுறுத்தியதன் பயனாக, அரசாணை எண்.130, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் (EAPI-1) துறை, நாள்.07.06.2024ன்படி ஓய்வூதியர்கள் / குடும்ப ஓய்வூதியர்கள், மருத்துவ காப்பீடு அட்டையினைப் பயன்படுத்தி, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகள் / மாவட்ட தலைமையிட மருத்துவமனைகளில் மருத்துவ சிகிச்சை மேற்கொள்ளலாம் என்ற அரசின் ஆணை நமது கோரிக்கைக்கு கிடைத்துள்ள வெற்றியாக இருந்தாலும், இத்திட்டமும் முழுமையாக பயன்படும் வகையில், நடைமுறைப்படுத்தப்படுவதையும் உறுதிப்படுத்திக் கொண்டு, தேவையெனில் அதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்பதையும் தெரிவித்திட விரும்புகிறோம்.


1924 ஆம் ஆண்டிலேயே அரசால் அங்கீகரிக்கப்பட்ட பாரம்பரியமிக்க தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் மாநிலத் தலைமைப் பொறுப்பினை (23 ஆண்டுகள்) ஏற்று ஒப்பாரும் மிக்காரும் இல்லாத செயல்பட்ட தானைத்தலைவர் அமரர் சிவ.இளங்கோ அவர்களால் பெற்றுத் தரப்பட்ட வியக்கத்தக்க வாழ்வாதார உரிமைகளை நன்றியுடன் நெஞ்சில் நிறுத்தி, தானைத் தலைவரின் 88வது பிறந்த நாளினை (18.07.2024) அனைத்து மாவட்ட, வட்டங்களிலும் கொண்டாடிட ஏற்பாடு செய்து, பொது வாழ்வில் நம்மைப் போன்றவர்களுக்கு சரியான முகவரியினை ஏற்படுத்தித் தந்திட்ட தலைவருக்கு ''புகழ் அஞ்சலி''நிகழ்ச்சியினை தவறாது நடத்தி, அதன் விவரங்களை மாநில மையத்திற்கு (புகைப்படத்துடன்) அனுப்பி வைத்திட வேண்டப்படுகிறது.

மாவட்ட மையங்களுக்கென ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்டிருந்த மாநில மைய கட்டிட நிதியினை இன்னமும் முழுமையாக செலுத்தாத மாவட்ட மையங்கள் இதன் மீது தனிக்கவனம் செலுத்தி அத்தொகையினை இனியும் தாமதிக்காமல் மாநில மைய வங்கிக் கணக்கில் செலுத்தி, விவரம் தெரிவித்திடவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

சங்கத்திற்கு வலுவினை ஏற்படுத்தும் உறுப்பினர் சேர்க்கை, மாத இதழ் சந்தாதாரர் சேர்க்கைப் பணிகளில் மாவட்ட மையங்கள் தனிக்கவனம் செலுத்தி, நமது ஒன்றுபட்ட சக்தியினை வெளிப்படுத்தி வெற்றி காண்போம்!

''ஒற்றுமையே நமது நிரந்தர பலம்''

(கோ.சீதாராமன்)



**மாநிலத்தலைவர்**

| |
|---|
| இதழில் வரும் செய்திகள் அனைத்தும் ஆசிரியர் குழுவின் முடிவுக்கு உட்பட்டது |

## தமிழ்நாடு ஓய்வூதியர் நண்பன் இதழுக்கு

(புரவலர் நிதி ஆயுள் முழுவதும் ) ரூ.1500/– ஆண்டு சந்தா (12 மாதங்கள் ரூ. 200/–), 3 ஆண்டு சந்தா ரூ. 500/– நிதி அனுப்புவோர் தங்களுடைய வங்கி கேட்பு வரைவோலை – காசோலை மூலம், தங்களுடைய இல்ல / இருப்பிட முகவரியை தெளிவாக எழுதி, கீழ்க்கண்ட மத்திய சங்க முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி அன்புடன் வேண்டுகின்றோம். பண விடைத்தாள் (M.O.) மூலம் அனுப்புவதை தவிர்த்தல் நன்று.

மாநிலத் தலைவர், தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கம் – சென்னை ("State President - Tamilnadu Pensioners' Association" Chennai) என்ற பெயரில் வங்கி கேட்பு வரைவோலை – காசோலைகளை கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி அன்புடன் வேண்டுகின்றோம். (அல்லது) RTGS மூலமாகவும் அனுப்பலாம்.

**BANK OF INDIA** TRIPLICANE BRANCH
4/289, Bharathi Salai, Triplicane, Chennai-5.
**S.B. A/c No. 802010110009349** Tamilnadu Pensiones Association
IFSC code No. : BKID 0008020 Customer ID : 185301750

நேரிடையாக வங்கிக்கு அனுப்பிவைக்கும்படியும் அதன் ஜெராக்ஸ் நகல் எடுத்து அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கும்படியும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும் எந்த நோக்கத்திற்காக (Purpose) பணம் செலுத்தப்படுகிறது என்ற விபரத்தினையும் விரிவாக தெரியபடுத்தவும்.

**கோ.சீதாராமன்**, மாநிலத் தலைவர்
தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கம் ''சிவ. இளங்கோ இல்லம்''
7, நீலி வீராசாமி தெரு, திருவல்லிக்கேணி – சென்னை – 600 005.
**Cell: 9444302896/80562 44463**

**– மாநில மையம்**

# கேள்வி – பதில்

## பதிலளிப்பவர்

திரு. **R. சபாபதி,** M.A., M.Com., M.B.A., B.G.L., D.L.L.A.L.D.C.A.C.J.

கருவூலத்துறை இணை இயக்குநர் (ஓய்வு)

**கேள்வி 1 :** பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை வழங்கப்படுமா ?

**திரு.ஆர்.ஆரவாமுதன், கோயம்புத்தூர்**

**பதில் :** பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பணியாளர் ஓய்வு பெற்றதும், ஏற்கனவே செலுத்திய தொகை, அதற்குரிய வட்டி, அரசின் பங்குத்தொகை அதற்குரிய வட்டியுடன் வழங்கப்படும். பிடித்தம் செய்யப்பட்ட தொகை மத்திய அரசின் அறிவிப்பின்படி, நியமிக்கப்பட்ட நிதி மேலாளரிடம் இத்தொகை செலுத்தப்பட்டு, புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்படாததால், ஓய்வூதியம் வழங்கப்பட மாட்டாது.

பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தில் பணி ஓய்வு பெற்றவர்களுக்கு பணிக்கொடை வழங்க தமிழ்நாடு அரசு ஆணை ஏதும் பிறப்பிக்கவில்லை. எனவே, பணிக்கொடை வழங்கப்பட மாட்டாது. மத்திய அரசு ஊழியர்களுக்கு பணிக்கொடை வழங்க மத்திய அரசு ஆணை பிறப்பித்துள்ளது. எனவே, மத்திய அரசு ஊழியர்களுக்கு பணிக்கொடை வழங்கப்பட்டு வருகிறது.

**கேள்வி 2 :** நானும், எனது மனைவியும் அரசுப்பணியாற்றி ஓய்வு பெற்று ஓய்வூதியம் பெற்று வருகிறோம். எங்கள் இருவரின் ஓய்வூதியத்திலிருந்தும் மருத்துவக் காப்பீட்டு சந்தாத் தொகை தலா ரூ.497/– மாதா மாதம் பிடித்தம் செய்யப்படுகிறது. இது சரியா ?

**திரு.எஸ்.புருஷோத்தமன், ஈரோடு**

**பதில் :** கணவன் மற்றும் மனைவி ஆகிய இருவரும் ஓய்வூதியம் பெற்று வரும் நிலையில், ஒருவர் மட்டும் மருத்துவ காப்பீட்டு சந்தா தொகை செலுத்தினால் போதுமானதாகும். இருவர் ஓய்வூதியத்திலிருந்தும் சந்தாத் தொகை பிடித்தம் செய்யப்படும் விபரத்தை தெரிவித்து, ஓய்வூதியம் வழங்கும் கருவூலத்திற்கு விண்ணப்பம் அளித்து, ஒருவருடைய ஓய்வூதியத்திலிருந்து மட்டும் பிடித்தம் செய்யவும், மற்றொருவரின் ஓய்வூதியத்திலிருந்து பிடித்தம் செய்வதை நிறுத்தும்படியும் கோரி பயன் பெறலாம்.

**கேள்வி 3 :** நான் துணை வேளாண்மை அலுவலராகப் பணியாற்றி 31.10.2008 அன்று பணி ஓய்வு பெற்று, ஓய்வூதியம் பெற்று வருகிறேன். எனது பென்சன் புத்தக நகலினை அனுப்பி வைத்துள்ளேன். எனக்கு சரியான வீதத்தில் ஓய்வூதியம் வழங்கப்படுகிறதா ?

**திரு.எம்.குருசேகரன், சென்னை-108**

**பதில் :** தங்களுக்கு குறைவான வீதத்தில் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. தாங்கள் பணி ஓய்வு பெற்ற 31.10.2008க்குப் பிறகு பிறப்பிக்கப்பட்ட ஒரு நபர் குழு அரசாணை எண். 257, நிதி (ஊ.கு.)துறை, நாள். 26.08.2010ல் துணை வேளாண்மை அலுவலர் பதவியின் ஊதியம் ரூ.9300 – 34800 + தர ஊதியம் ரூ.4400/–லிருந்து ரூ.9300 – 34800 + தர ஊதியம் ரூ.4700/– ஆக 12.12.2007 முதல் கருத்தியலாகவும், 01.08.2010 முதல் பணப்பயனுடனும் உயர்த்தி அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த அரசாணையின்படி, தங்களுக்கு ஊதிய மறுநிர்ணயம் செய்து, திருந்திய ஓய்வூதிய கருத்துரு சென்னை மாநில கணக்காயருக்கு அனுப்பி வைத்து பணப்பயன் வழங்கப்படவில்லை. உரிய விண்ணப்பங்கள் தயார் செய்து இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது. இந்த விண்ணப்பங்களை தாங்கள் இறுதியாக பணியாற்றிய அலுவலகத்தில் அளித்து சென்னை மாநில கணக்காயருக்கு அனுப்பி வைத்து அதிக ஓய்வூதியப் பணப்பயன்களும், ஓய்வூதிய நிலுவைத்தொகையும் பெற்று பயன் பெறலாம்.

**கேள்வி 4 :** ஓய்வூதியரின் திருமணமாகாத மகள்/விதவை மகள்/விவாக ரத்தான மகள் ஆகியோருக்கு குடும்ப ஓய்வூதியம் எவ்வளவு கிடைக்கும் ?

**திரு.சி.சடகோபன், திருவாரூர்**

பதில் : முதன் முதலில் பிறப்பிக்கப்பட்ட அரசாணை எண்.325, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள்.28.11.2011 மற்றும் அரசாணை எண்.165, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள்.21.05.2012 ஆகியவற்றின்படி அரசு ஊழியரின் கடைசி மாத ஊதியத்தில் 30 சதவீதம், குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்பட்டது. ஆனால் அதற்குப் பிறகு, பிறப்பிக்கப்பட்ட அரசாணை எண்.29, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள்.31.01.2013ல் குறைந்தபட்ச குடும்ப ஓய்வூதியம் ரூ.3050/– ஆக குறைக்கப்பட்டது. தற்பொழுது குறைந்தபட்ச அடிப்படை குடும்ப ஓய்வூதியம் ரூ.7850/– அகவிலைப்படி மற்றும் மருத்துவப்படி வழங்கப்படுகிறது.

**கேள்வி 5 :** நான் 3.12.2022 அன்று பணி ஓய்வு பெற்று, ஓய்வூதியம் பெற்று வருகிறேன். நான் பணி ஓய்வு பெற்ற பொழுது கம்யூடேசன் செய்யவில்லை. விருப்பமில்லை என்று தெரிவித்து விட்டேன். தற்பொழுது கம்யூடேசன் தொகை பெற விரும்புகிறேன். தற்பொழுது கம்யூடேசன் தொகை பெற இயலுமா ?

**திரு.வி.கோவிந்தராஜ், கிருஷ்ணகிரி**

**பதில் :** தற்பொழுது கம்யூடேசன் தொகை பெற இயலும். பணி ஓய்வு பெற்ற பொழுதே கம்யூடேசன் செய்ய வேண்டிய கட்டாயம் இல்லை. ஓய்வு பெற்று சில ஆண்டுகள் கடந்த பின்னரும், ஓய்வூதியத்தை கம்யூடேசன் செய்யலாம். பணி ஓய்விற்குப் பின்னர் கம்யூடேசன் செய்தால், பெறும் மொத்த தொகை வயதிற்கு ஏற்ப குறைந்துவிடும்.

**கேள்வி 6 :** நான் சிறப்பு நிலை A.N.M. ஆகப் பணியாற்றி 31.07.2002 அன்று பணி ஓய்வு பெற்று ஓய்வூதியம் பெற்று வருகிறேன். எனது பென்சன் புத்தக நகலினை இணைத்து அனுப்பி வைத்துள்ளேன். எனக்கு சரியான வீதத்தில் ஓய்வூதியம் வழங்கப்படுகிறதா ?

**திருமதி.என்.நாகமல்லிகா, பெரம்பலூர்**

**பதில் :** தங்களுக்கு ஓய்வூதியம் குறைவாக வழங்கப்பட்டு வருகிறது. அரசாணை எண்.297, நிதி (ஊ.கு) துறை, நாள். 26.08.2010ன்படி, (நகல் இணைக்கப்பட்டுள்ளது) A.N.M.பதவிக்கான ஊதியம் ரூ.5200–20200 + தர ஊதியம் ரூ.2000/– லிருந்து ரூ.5200–20200+தர ஊதியம் ரூ.2400/– ஆக 01.01.2006 முதல் முதல் கருத்தியிலாகவும், 01.08.2010 முதல் பணப்பயனுடனும் உயர்த்தி அரசாணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. எனவே, தாங்கள் 01.08.2010 முதல் அதிக ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதிய நிலுவைத்தொகை பெறுவதற்கு இயலும் வகையில், அரசாணை 235/பத்தி (vi) மற்றும் அரசாணை 313/பத்தி 5(2)ன் கீழ் விண்ணப்பங்கள் தயார் செய்து இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது. இந்த விண்ணப்பங்களை தாங்கள் இறுதியாகப் பணியாற்றிய அலுவலகம் மூலம் கருவூலத்திற்கு அனுப்பி வைத்து, அதிக ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதிய நிலுவைத்தொகை பெறலாம்.

**கேள்வி 7 :** எனது உறவினர் 9 ஆண்டுகள் 03 மாதங்கள் 12 நாட்கள் பணியாற்றி ஓய்வு பெற்றார். அவர் ஓய்வூதியம் பெறாமல் காலமாகிவிட்டார். அன்னாரது மனைவிக்கு குடும்ப ஓய்வூதியம் கிடைக்குமா ?

**திரு.ஆர்.அமிர்தராஜன், விருதுநகர்**

**பதில் :** தங்கள் உறவினர் பத்து ஆண்டுகளுக்குக் குறைவாகப் பணியாற்றியுள்ளதால் ஓய்வூதியம் பெறவில்லை. தங்கள் உறவினரின் மனைவிக்கு குடும்ப ஓய்வூதியம் பெற விதிமுறைகளில் இடம் இல்லை. குடும்ப ஓய்வூதியம் பெற இயலாது.

**கேள்வி 8 :** எனது உறவினருக்கு தண்டனையாக இரண்டு ஆண்டுகளுக்கு மாதம் ரூ.500/– வீதம் ஓய்வூதியம் குறைக்கப்பட்டுள்ளது. அன்னாருக்கு அகவிலைப்படி முழுமையாக கிடைக்குமா ? அல்லது குறைக்கப்பட்ட ஓய்வூதியத்திற்கு கிடைக்குமா ?

**திரு.எஸ்.மாதையன், பொள்ளாச்சி**

**பதில் :** குறைக்கப்பட்ட ஓய்வூதியத்திற்குத்தான் அகவிலைப்படி கிடைக்கும். இரண்டு ஆண்டு காலத்திற்கு அடிப்படை ஓய்வூதியம் ரூ.500/– குறைக்கப்பட்டு மீதமுள்ள ஓய்வூதியத்திற்குத்தான் அகவிலைப்படி கிடைக்கும். எனவே இரண்டு ஆண்டு காலத்திற்கு மாதம் ரூ.500/– ஓய்வூதியம் மற்றும் அகவிலைப்படி இழப்பு ஏற்படும்.

**கேள்வி 9 :** நான் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) ஆக பணியாற்றி, 31.12.1999ல் பணி ஓய்வு பெற்று ஓய்வூதியம் பெற்று வருகிறேன். எனது பென்சன் புத்தக நகலினை இணைத்து அனுப்பி வைத்துள்ளேன். எனக்கு சரியான வீதத்தில் ஓய்வூதியம் வழங்கப்படுகிறதா ?

**திரு.எம்.மணிவாசகன், தூத்துக்குடி**

**பதில் :** தங்களுக்கு ஓய்வூதியம் குறைவாக வழங்கப்பட்டு வருகிறது. அரசாணை 235/ பத்தி 2 (vi) மற்றும் அரசாணை 313/பத்தி 5(2)ன் கீழ் 01.01.2007 மற்றும் 01.10.2017 முதல் அடிப்படை ஓய்வூதியம் முறையே ரூ.10500/– மற்றும் ரூ.28050/– வழங்கப்பட வேண்டும். உரிய விண்ணப்பங்கள் தயார் செய்து அனுப்பி வைக்கப்படுகிறது. இந்த விண்ணப்பங்களை தாங்கள் இறுதியாக பணியாற்றிய மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மூலம் கருவூலத்திற்கு அனுப்பி வைத்து அதிக ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதிய நிலுவைத்தொகை பெற்று பயன் பெறலாம்.

## கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி:


திரு.**ஆர். சபாபதி,** M.A.,M.Com., M.B.A., B.G.L., D.L.L.A.L. D.C.A.C.J.

கருவூலத்துறை இணை இயக்குநர் (ஓய்வு)

எண். 1 முதல் தெரு, K.M.G. நகர், தலத் தெரு அஞ்சல், காரைக்கால் மாவட்டம் – 609 605.

கைபேசி எண்கள் : 96556 18699 / 94861 16037


பத்திரிக்கை செய்தி

### அரசு ஊழியர் ஓய்வூதியதாரர்கள்

# புதிய மருத்துவக் காப்பீட்டு வழிகாட்டு நெறிமுறைகள்!

### தமிழக அரசாணை வெளியீடு!!

**சென்னை, ஜூன்.12**

தமிழ்நாடு அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியர்களுக்குபுதியமருத்துவக்காப்பீடு திட்டம் செயல்படுத்துவது தொடர்பானவழிகாட்டுநெறிமுறைகள்அரசாணை வெளியிடப்பட்டது. இது குறித்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவின்படி, தமிழ்நாடு அரசுஊழியர்கள்மற்றும்ஓய்வூதியர்களுக்கு புதிய மருத்துவக்காப்பீடுதிட்டம் 2021 மற்றும் 2022 செயல்படுத்துவதுதொடர்பானவழிகாட்டு நெறிமுறைகளை மருத்துவம்மற்றும்மக்கள்நல்வாழ்வுத்துறையால்ஆணைபிறப்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் அரசு ஊழியர்களுக்கு 01.07.2021 முதல் 30.06.2025 வரையிலும், ஓய்வூதியர்களுக்கு 01.07.2022 முதல் 30.06.2026 வரையிலும் தொடர்ந்து 4 ஆண்டுகள் மருத்துவக் காப்பீடு திட்டத்தை அமல்படுத்த உத்தர விடப்பட்டுள்ளது.

அரசு ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர், ஓய்வூதியர்களுக்கு அரசு மருத்துவமனைகளில்கட்டணமில்லாமல்சிகிச்சைபெற ரூ.5 லட்சம் மற்றும் சில குறிப்பிட்ட நோய்களுக்கு ரூ.10லட்சம்வரைமருத்துவ உதவி பெற வழிவகை செய்கிறது.

புதிய மருத்துவக் காப்பீடு திட்டத்தில் உள்ள அரசு ஊழியர்கள், ஓய்வூதியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர்,தமிழகத்தில் உள்ள அரசு மருத்துவமனைகளில் கட்டணமில்லாமல் மருத்துவ சிகிச்சை பெறமுடியும்.

சிகிச்சை பெற விரும்புவோர், மருத்துவக் காப்பீடு திட்ட அடையாள அட்டையுடன், சம்பந்தப்பட்ட அரசு மருத்துவமனையில் இதற்கென பணியில் இருக்கும் ஒருங்கிணைப்பு அலுவலரை அணுக வேண்டும்.

அரசு மருத்துவமனைகளில் சிகிச்சைக்கான முன் அனுமதி பெற்ற பின்னர், சிகிச்சையை தொடங்க வேண்டும் எனினும், எதிர்பாராத சூழல் ஏற்பட்டால், மருத்துவ சிகிச்சையை உடனடியாகதொடங்கி, பின்னர் 48 மணி நேரத்துக்குள் முன் அனுமதி மற்றும் தேவையானஇதரஆவணங்களைப் பெற வேண்டும்.

இத்திட்டத்தின் சிறப்பு அம்சங்களாக கட்டணமில்லா மருத்துவ சிகிச்சை, ரூ 5 லட்சம் வரை மருத்துவ சிகிச்சைக்கான செலவு, சில குறிப்பிட்ட வகையான நோய்/சிகிச்சைகளுக்கு ரூ.10 லட்சம் வரை மருத்துவ உதவி பெறலாம், 203 நோய்கள் மற்றும் அறுவை சிகிச்சைகளுக்கு இத்திட்டத்தின்மூலம்பயன் பெறலாம்,அரசுமருத்துவமனைகளிலுள்ள அனைத்து கட்டண படுக்கை பிரிவுகளில் இத்திட்டத்தின் மூலம் சிகிச்சை பெறலாம் போன்ற வசதிகள் உள்ளது.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

**GOVERNMENT OF TAMIL NADU**

**ABSTRACT**

New Health Insurance Scheme for Employees and Pensioners - To facilitate cashless treatment in Government institutions under this Scheme - General and Financial guidelines - Orders - Issued.

**HEALTH AND FAMILY WELFARE (EAPI-1) DEPARTMENT**

**G.O.(Ms) No.130** **Dated:07.06.2024**

குரோதி, வைகாசி–25
திருவள்ளுவர் ஆண்டு – 2055

**Read:**

1. G.O.(Ms) No.160, Finance (Salaries) Department, Dated:29.06 2021.
2. G.O.(Ms) No.204, Finance (Health Insurance) Department, Dated:30.06.2022. :
3. From the Project Director, Tamil Nadu Health Systems Project letter No. 10283/TNHSP/ins/2022, dated 13.03.2024.

**ORDER:**

In the Government orders first and second read above. orders were issued for implementation of New Health Insurance Scheme, 2021 for Employees for the period of four years from 01.07.2021 to 30.06.2025 and New Health Insurance Scheme, 2022 for Pensioners for the period of four years from 01.07.2022 to 30.06.2026 to provide cashless medical assistance upto Rs.5.00 Lakh in a block of four years to the Government Employees and their family members and Pensioners/Family Pensioners and also to provide medical assistance up-to Rs.10.00 lakh for specific illnesses.

2. In the letter third read above, the Project Director, Tamil Nadu Health Systems Project has submitted the General and Financial guidelines for implementing the New Health Insurance Scheme and requested the Government to approve the draft General and Financial guidelines for New Health Insurance Scheme for employees and pensioners under cashless treatment in Government institutions under the control of Director of Medical Education and Research and Director of Medical and Rural Health Services.

3. The Government have carefully examined the proposal of the Project Director, Tamil Nadu Health Systems Project and decided to accept the same. Accordingly, the Government approves the General and Financial guidelines annexed to this Government order for New Health Insurance Scheme for employees and pensioners undergoing cashless treatment in Government institutions under the control of Director of Medical Education and Research and Director of Medica! and Rural Health Services.

4. This orders issues with the concurrence of Finance Depariment, vide its U.O.No.5375793/Finance (HI-1)/2023-21, dated 25.04.2024.

{BY ORDER OF THE GOVERNOR)

**GAGANDEEP SINGH BEDI**
ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT

## ANNEXURE

**G.O.(Ms).No.130, Health and Family Welfare (EAPI-1) Department, Dated:07.06.2024 HEALTH INSURANCE SCHEME FOR EMPLOYEES AND PENSIONERS FOR IMPLEMENTATION IN GOVERNMENT HOSPITALS**

**1. BRIEF ABOUT GOVERNMENT EMPLOYEES' NEW HEALTH INSURANCE SCHEME 2021:**

(i) **Introduction:** New Health Insurance Scheme implemented in 2008 has been extended from 01.07.2021 for four years through United India Insurance Company Limited, Chennai

(ii) **Beneficiaries:** The Scheme covers about 10 lakh Employees of Government Departments, Local Bodies, Public Sector Undertakings, Statutory Boards and State Government Universities, willing State Government Organizations/Institutions along with their dependent family members.

(iii) **Special Features:**

a) Cashless medical assistance;
b) Quantum of assistance enhanced from Rs.4.00 lakh to Rs.5.00 lakh for a block of four years.
c) Quantum of assistance for specified treatments enhanced from Rs.7.5 lakh to Rs.10 lakh;
d) Emergency Care coverage extended to treatments in Non- Network Hospital also;
e) Reimbursement of 75% of medical expenditure for the treatment taken in Non- Network Hospitals;
f) Number of treatments increased from 113 to 203;
g) 1296 Network hospitals empanelled;
h) Monthly deduction of Rs.300/- (Rs.295/- Subscription + Rs.5/- Contribution for Corpus Fund) from the salaries of employees since July 2021.
i) Creation of Corpus Fund with a sum of Five crores for COVID-19 treatment.

**(iv) Additional Features:**

a) Coverage of dependent children of Government Employees and for special cases, irrespective of their

age above 25 years. (G.O.Ms.No.293, Finance (Health Insurance -1) Department, dated 30.12.2021)

b) Inclusion of Covid-19 Treatment under Specified illness list with effect from 14.02.2022 to avail medical assistance upto Rs.10.00 lakh for employee and Rs.7.50 lakh for Pensioners and subsequently Rs.10 lakh to Pensioners from 01.07.2022 (G.O.Ms.No.39, Finance (Health Insurance -1) Department, dated 14.02.2022)

c) Exemption for placing the Covid-19 claims in the District Level Empowered Committee (G.O.Ms. No.46, Finance (Health Insurance-1) Department, dated 21.02.2022)

d) Comprehensive Guidelines for reimbursement of medical expenses to consider under the Corpus Fund for meeting higher expenses in respect of rare and exceptional circumstances for a sum of Rs.10.00 lakh exceeding the maximum assistance of Rs.10 lakh available under New Health Insurance Scheme 2021 for Employees of Government Departments and their eligible family members. Total claims shall not exceed Rs.20 lakh (both inclusive) (G.O.Ms.No.120, Finance (Health Insurance -1) Department dated 2.5.2022)

**2. BRIEF INTRODUCTION ABOUT PENSIONERS NEW HEALTH INSURANCE SCHEME 2022:**

(i) **Introduction:** New Health Insurance Scheme for Pensioners, is implemented from 01.07.2014 and has been extended from 01.07.2022 for four years through United India Insurance Company Limited, Chennai:

(ii) **Beneficiaries :** The scheme covers about 12 lakh beneficiaries of Penstoners including their spouse

(iii) **Special features:**

a) Cashless medical assistance
b) Medical treatment upto Rs.5.00 lakh
c) Medical assistance upto Rs.10.00 lakh for some specified diseases / treatments
d) Coverage of 203 treatments and surgeries
e) Emergency Care coverage extended to Non- Network Hospitals also
f) Reimbursement of 75% of medical expenditure for the treatment taken in Non-Network Hospitals.
g) 1294 Network hospitals empaneled
h) Monthly deduction of Rs.497/- from the pension towards subscription
i) Creation of Corpus Fund with a sum of Rs.2.5 crore for the COVID-19 treatment.

**3. REDRESSAL OF GRIEVANCES & REIMBURSEMENT OF PAYMENT :**

Redressal of grievances and reimbursement of payment shall be conducted as per the G.O.Ms.No.160, Finance (Salaries) Department, dated 29.6.2021 for Government employees and for pensioners as per G.O.Ms.No.204, Finance (Health Insurance) Department, dated 30.6.2022.

**4. Empanelment of Government Hospitals**

(i) In the annexure-A, para 9 of the G.O.Ms.No.160, Finance (Salaries) Department, dated 29.6.2021 for Government employees, it has been mentioned that;
The Hospitals under the Scheme shall include
(a) Pay wards of Government Hospitals; and
(b) Private Hospitals.

(ii) In the annexure-A, para 9 of the G.O.Ms.No.204, Finance (Health Insurance) Department, dated 30.6.2022 for pensioners, it has been mentioned that
The Hospitals under the Scheme shall include both:-

a) Government Hospitals already empanelled under Chief Minister's Comprehensive Heaith Insurance Scheme shall automatically be deemed to be Network Hospitals and the Insurance Company shall ensure that they enter into a tie-up with these hospitals within one monih of the commencement of the Scheme; and
b) Private Hospitals.

**5. Implementation of New Health Insurance Scheme in Government Hospitals:**

(i) The United India Insurance Company Limited, Chennai should take | necessary steps to facilitate the provision to include the Government institutions under the control of the Director of Medical and Rural Health Services and the Director of Medical Education & Research which are already empaneled under Chief Minister Comprehensive Health Insurance Scheme.

(ii) The Director of Medical and Rural Health Services and the Director of Medical Education & Research should also follow up the following:-

a) Sign MoU with UIIC for the empanelment of the Government hospitals
b) Issue necessary instructions to the Government Institutions under the Director of Medical and Rural Health Services and the Director of Medical Education & Research to accommodate the New Health Insurance Scheme Employees and Pensioners for taking treatment in the Government Institutions and to extend their co-ordination with the United India Insurance Company Limited to process the claims received in the Government Institutions.

(iii) Issue exemption from getting ROHINI ID to the empanelled Government Institutions as was given for Chief Minister's Comprehensive Health Insurance Scheme.

(iv) Being a Government institution, deducting TDS / PAN Number be waived off as was given for Chief Minister's Comprehensive Health Insurance Scheme.

(v) Existing Chief Minister's Comprehensive Health Insurance Scheme 500 wards for Government employees and pensioners under New Health Insurance Scheme may be utilized until the special rooms for New Health Insurance Scheme are created.

**6. Issue of Identity Cards:**

The identity cards issued by the Insurance Company to cover the beneficiaries with the details of the Employees and their eligible famtly members of Government Departments etc., should be accepted by the Government Institutions as mentioned as per the G.O.Ms.No.160, Finance (Salaries) Department, dated 29.6.2021 for Government employees and for pensioners as per G.O.Ms.No.204, Finance (Health Insurance) Department, dated 30.6.2022. In case of non-availability of ID Card, the beneficiaries can produce the form for furnishing data of employee and their eligible family members for insurance coverage under New Health Insurance Scheme, 2021 mentioned in Annexure VI in the G.O.Ms.No.160, Finance (Salaries) Department, dated 29.6.2021 for Government employees and Annexure Ill for Pensioners as mentioned in the G.O.Ms.No.204, Finance (Health Insurance) Department, dated 30.6.2022.

**7. List of Procedures Covered Under New Health Insurance Scheme For Employees and Pensioners:**

The procedures covered under NHIS for employees and pensioners are listed as per the G.O.Ms.No.160, Finance (Salaries) Department, dated 29.6.2021 for Government employees and for pensioners as per G.O.Ms.No.204, Finance (Health Insurance) Department, dated 30.6.2022.

**8. GENERAL GUIDELINES TO BE FOLLOWED FOR MEDICAL AILMENT UNDER NEW HEALTH INSURANCE SCHEME IN GOVERNMENT INSTITUTIONS:**

**(i) General Procedures to be followed by the Beneficiary (Both Employee and Pensioner):**

a) New Health Insurance Scheme beneficiary can approach any of the empanelled Government Health Facilities within the State of Tamil Nadu for medical ailments of the approved procedures under NHIS.

b) The New Health Insurance Scheme beneficiary should approach the New Health Insurance Scheme Nodal Officer of that concerned institution with a valid New Health Insurance Scheme Identity Card.

c) In case of non-availability of New Health Insurance scheme JD card, Annexure VI (for employees) / Annexure III (for pensioners) of the mentioned Government Orders may be submitted, as per the respective guidelines.

**(ii) General Procedures to be followed by the Government Health Facility:**

a) A Nodal officer for New Health Insurance Scheme should be designated by the each of the empanelled Government hospitals.

b) The New Health insurance Scheme Nodal Person of that Health Facility should verify the New Health Insurance Scheme ID card / Annexure VI - as per guidelines in the G.O.Ms.No.160, Finance (Salaries) Department, dated 2962021 for Government employees / Annexure Ill- as per G.O.Ms. No.204, Finance (Health Insurance dept.), dated 30.6.2022 for pensioners.

c) If the New Health Insurance Scheme beneficiary needs any treatment for the procedures approved under New Health Insurance Scheme, the department New Health Insurance Scheme Nodal Officer (DMER and DM&RHS Hospitals) should raise preauthorization through the insurer portal or mail communication within 48 hours of admission, considering the emergency of the medical situation and availability of documents.

d) The following documents are to be mailed/uploaded:

  i. New Health insurance Scheme Identity Card or Annexure VI/ Annexure III.
  ii. Preauthorization form along with the diagnosis and plan of management.

e) As per the G.O.Ms.No.160, Finance (Salaries) Department, dated 29.6.2021 for Government employees and for pensioners as per G.O.Ms.No.204, Finance (Health Insurance) Department, dated 30.6.2022 | preauihorization approval will be given within 24 hrs. And after getting the preauthorization approval, the Government Health Facility can proceed with the management.

f) In case of emergency, treatment may be started immediately and preauthorization request with mandatory documents may be submitted within 48 hours.

g) On the day of discharge, the hospital should upload / mail the discharge Summary and the New Health Insurance Scheme receipt (enclosed as Annexures) for claims approval.

h) The Department New Health Insurance Scheme Nodal Officer (DMER & DM&RHS Hospitals) should Clearly meniion the details of the patient, diagnosis and the approved Package amount in the New Health Insurance scheme receipt.

i) Original document (Discharge Summary, Investigation Report, Invoice, CT scan Reports, X ray)

need not be submitted, but should be maintained safely in the Medical Records Department in the respective hospital. Instead, a copy of the above documents duly attested by the Head of the Institution / Nodal Officer should be sent to UIIC.

**Note:** New Health Insurance Scheme receipt has to be duly signed by the New Health Insurance Scheme Nodal Officer of that concerned institution with seal.

j) On approval of claims, the insurer should pay the claims amount within 30 days from the date of approval of claims.

k) Any queries raised by the insurer should be addressed within 24 hours.

l) The Director of Medical Education & Research Hospitals should open a Separate Department Wise Bank Account for the New Health Insurance Scheme claims as per the procedure followed under Chief Minister's Comprehensive Health Insurance Scheme.

**9. Financial Guidelines to be followed for Treatment under NEW HEALTH INSURANCE SCHEME in Government Institutions:**

With reference to G.O.(Ms)No.17, Health and Family Welfare (EAPI/1) Department, dated: 23.01.2017, the Government had given guidelines to ensure uniform maintenance of accounts and expenditure in all Government. Director of Medical Education & Research / Director of Medical and Rural Health Services.

(i) For Hospitals empaneled under Chief Minister's Comprehensive Health Insurance Scheme, similar accounting system is to be followed.

**(ii) The claims amount can be apportioned as given below:-**

1) Institutional Development Fund - 40%
2) Consumables - 50%
3) Incentive - 10%

10% Incentive may further be apportioned as follows:-

a) Treating Doctors - 4%
b) Anaesthetists - 2%
c) Staff Nurse - 2%
d) Supporting Departments - 2%

(Supporting Departments include other allied treating departments, laboratory departments, and radiology wing involved in the treatment of the patient)

For the cases, not requiring anaesthetist intervention, the 2% of the incentive allotted for anaesthetist may be transferred to consumables or Infrastructure based on need after proper committee resolution.

**(iii) The claim Amounts shall be held in bank accounts as follows:-**

a) Institutional New Health Insurance Scheme Development Fund Account (IDF) — One account for one institution operated and signed jointly by the Dean and Administrative Officer

b) Department New Health Insurance Scheme account: One account for each department treating the New Health Insurance Scheme patients as done under Chief Minister's Comprehensive Health Insurance Scheme which shall receive the claim directly and then apportion the amount as given above, transfer the IDF apportionment to the New Health Insurance Scheme IDF account and Incentives directly to the accounts of the human resources as mentioned through ECS as done under Chief Minister's Comprehensive Health Insurance Scheme. Consumable expenditure shall be carried out under this account.

**10. Administration of Funds of NEW HEALTH INSURANCE SCHEME:**

New Health Insurance Scheme Committee at the institution level should be constituted similar to the existing Chief Ministers Comprehensive Health Insurance Scheme committee to monitor New Health Insurance Scheme funds. In case of additional staff requirement, the existing norms under Chief Minister's Comprehensive Health Insurance Scheme may be adhered. For any other operational issues under New Health Insurance Scheme, the guidelines given in G.O.(Mis)No.17, from Health and Family Welfare (EAPI/1) Department, dated: 23.01.2017.

**11. Records of Patients Treated under NEW HEALTH INSURANCE SCHEME:**

The case records shall be retained in the Medical Records Department as per hospital protocol.

**GAGANDEEP SINGH BEDI**
ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT

/True Copy/

Sd/-
SECTION OFFICER

# விழுப்புரம் மாவட்டத்தின் மாதாந்திரக் கூட்டம்











தமிழ்நாடு ஓய்வூதியர் சங்க விழுப்புரம் மாவட்டத்தின் மாதாந்திரக்கூட்டம் **08.06.2024** சனிக்கிழமை அன்று காலை **11** மணியளவில், அரசு அலுவலர் ஒன்றிய கட்டிட வளாகத்தில், மாநில துணைப் பொதுச்செயலாளர் திரு.எஸ்.வின்சென்ட் டிபால் அவர்கள் முன்னிலையிலும், மாவட்டத் தலைவர் திரு.து.புருஷோத்தமன் அவர்கள் தலைமையிலும் நடைபெற்றது. தமிழ்த்தாய் வாழ்த்துடன் கூட்டம் இனிதே துவங்கியது. மாவட்டச்செயலாளர் திரு.ஏ.குருசேகரன் அவர்கள் சகோதரர் திரு.ஏ.குருநாதன் அவர்களின் மறைவுக்கு ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

மாவட்டச்செயலாளர் திரு.ஏ.குருசேகரன் அனைவரையும் வரவேற்று, மாத செயல் அறிக்கையை சமர்ப்பித்தார். இம்மாதம் பிறந்த நாள் காணும் உறுப்பினர்களுக்கு பிறந்த நாள் வாழ்த்துக்களை தெரிவித்தார்.இம்மாதம்கருவூலத்தில்நேர்காணலுக்கு செல்ல வேண்டியவர்கள் நேர்காணலுக்கு செல்ல அறிவுறுத்தினார்.

மாவட்டத்தலைவர் திரு.து.புருஷோத்தமன் அவர்கள் தமது தலைமையுரையில், இம்மாதம் பிறந்த நாள் காணும் அனைவருக்கும் இக்கூட்டத்தில் சால்வை அணிவிக்கப்பட்டு பிறந்த நாள் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்படும் என்றும், இம்மாதம் நமது சங்கத்தில் இணைந்த புதிய உறுப்பினர்களுக்கு துண்டு அணிவிக்கப்பட்டு வரவேற்பு அளிக்கப்படும் என்றும் தெரிவித்தார். இம்மாதம் புதிய உறுப்பினர்கள் நால்வர் இணைந்தனர் என்று தெரிவித்தார். மேலும் உறுப்பினர்களான திரு.மாசிலா பாண்டி சங்கர் (பொதுப்பணித்துறை), திருமதி.அன்புக்கரசி மற்றும் செல்வி.புவனேஸ்வரி (பள்ளிக்கல்வித் துறை) ஆகியோரின் துறைவாரிப் பிரச்சனைகளை களைய ஆலோசனை வழங்க உறுப்பினர்களை கேட்டுக் கொண்டார். மேலும், மாநில சங்க கட்டிட நிதிக்கு நிதி வழங்கிய நெஞ்சங்களுக்கு நன்றி தெரிவித்தார். இம்மாதம் பிறந்த நாள் காணும் உறுப்பினர்களுக்கு பிறந்த நாள் வாழ்த்துக்களைத் தெரிவித்தார். இம்மாதம் சங்கத்தில் இணைந்த உறுப்பினர்களை வரவேற்று வாழ்த்து தெரிவித்தார். இம்மாத வங்கி இருப்பைத் தெரிவித்தார்.

இம்மாதம் எண்பது வயதை நிறைவு செய்த மாவட்ட இணைச்செயலாளர் திரு.டி.தனபால் அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்து கௌரவிக்கப்பட்டது. இம்மாதம் பிறந்த நாள் காணும் உறுப்பினர்களுக்கு மாநில துணைப் பொதுச்செயலாளர் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் துண்டு அணிவித்து பிறந்த நாள் வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். புதிய உறுப்பினர்களுக்கு துண்டு அணிவித்து வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

மாவட்ட துணைத்தலைவர் திரு.ஏ.ஜெயராமன், மாவட்ட மகளிர் அணி செயலாளர் திருமதி. ஏ.செல்வராணி, மாவட்ட அமைப்புச்செயலாளர் திரு.சா.அறிவழகன், மத்திய செயற்குழு உறுப்பினர் திரு.டி.இராஜேந்திரன், மாவட்ட இணைச்செயலாளர்கள் திரு.டி.தனபால் மற்றும் திரு.எஸ்.கோபால், தணிக்கையாளர் திரு.எம். இராமச்சந்திரன், செயற்குழு உறுப்பினர்கள் திரு.ஏ.நூர்அகமது மற்றும் திரு.ஜி.நடராஜன், கண்டாச்சிபுரம் வட்டக்கிளைச் செயலாளர் திரு.ஆர். வெங்கிடேசன், மேனாள் மாவட்ட துணைத்தலைவர் திரு.தெ.ரெங்கசாமி ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரையும், கருத்துரையும், வழங்கினர். மற்றும் பலர் கலந்து கொண்டனர். கள்ளக்குறிச்சி மாவட்ட அமைப்புச்செயலாளர் திரு.என்.அசோகன் கலந்து கொண்டு கருத்துரையும், வாழ்த்துரையும் வழங்கினார். இறுதியாக மாநில துணைப் பொதுச்செயலாளர் திரு.எஸ்.வின்சென்ட் டிபால் அவர்கள் மாநில செய்திகளை தெரிவித்து சிறப்புரையாற்றினார். தணிக்கையாளர் திரு.எம்.இராமச்சந்திரன் நன்றி நவில நாட்டுப்பண்ணுடன் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது. மாவட்ட இணைச்செயலாளர் திரு.எஸ். கோபால் மற்றும் மேனாள் மாவட்ட துணைத்தலைவர் திரு.தெ.ரெங்கசாமி ஆகியோர் கூட்டத்திற்கு வந்த அனைவருக்கும் தேநீர் விருந்தும், தண்ணீர் பாட்டில்களையும் அளித்து உபசரித்தனர். கூட்ட முடிவில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**1)** மாவட்டச்செயலாளர் திரு.ஏ.குருசேகரன் அவர்களின் சகோதரர் திரு.ஏ.குருநாதன் மறைவுக்கு ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தி இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**2) 01.06.2024** அன்று பிறந்த நாள் கண்ட நமது மாநிலத்தலைவர் திரு.கோ.சீதாராமன் அவர்கள் பல்லாண்டு வாழ்க என வாழ்த்தியும், மாநில மைய கட்டிடத்திற்கான காலி மனையை சங்கத்தின் பெயரில் பதிவு செய்து செயற்கரிய செயலை செய்த மாநிலத்தலைவருக்கு நன்றி தெரிவிப்பது எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.


– ஏ.குருசேகரன், மாவட்டச்செயலாளர், விழுப்புரம்

---

# காது கேட்கும் கருவி வழங்கும் விழா







தமிழ்நாடு ஓய்வூதியர் சங்க தஞ்சை மாவட்ட மையத்தின் உறுப்பினர்களுக்கு திருவையாறு ரோட்டரி சங்க ஆலோசகரும், நமது சங்க உறுப்பினருமான திரு.குப்பு.வீரமணி அவர்கள் ஏற்பாட்டில், காது கேட்கும் கருவி பரிசோதனை முகாம் மற்றும் உபகரணங்கள் வழங்கும் விழா, **14.06.2024** வெள்ளிக்கிழமை அன்று காலை **10** மணியளவில், தஞ்சாவூர் என்.ஜி.ஓ. சங்க கட்டிட வளாகத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில் நமது சங்கத்தின் சார்பில், மாவட்டத்தலைவர் திரு.சீனி.அய்யாகண்ணு, மாவட்டச்செயலாளர் திரு.மரு.சேதுராமன், மாவட்ட பிரச்சாரச்செயலாளர் திரு.கி.நாகராஜன் உட்பட சுமார் **20** பேர் கலந்து கொண்டனர்.

ரோட்டரி சங்கத்தின் சார்பில், திருவையாறு ரோட்டரி சங்கத்தலைவர் Rtn.P.யூஜின்ராஜ், **2981** ரோட்டரி மாவட்ட நிர்வாகச் செயலாளர் Rtn. சாமி.சம்பத், நிர்வாகச்செயலாளர் Rtn.அ.சந்தானசாமி, உதவி ஆளுநர் Rtn.எம்.கருணா, திருவையாறு ரோட்டரி சங்க ஆலோசகர் திரு.குப்பு.வீரமணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

காது கேளாமை பரிசோதனை முகாமில் **15**பேர் கலந்து கொண்டனர். அவர்களில் **14** பேருக்கு தலா ரூ.**10,000/–**க்கு மேல் மதிப்புடைய ஜெர்மன் நாட்டில் தயாரிக்கப்பட்ட காது கேட்கும் கருவி (Hearing Aid) இலவசமாக வழங்கப்பட்டது. மேலும் கருவியை எவ்வாறு பயன்படுத்துவது மற்றும் பராமரிப்பது என விளக்கி கூறப்பட்டது. ஓய்வூதியர் சங்க உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில் காது கேட்கும் கருவி வழங்கிய திருவையாறு ரோட்டரி சங்க நிர்வாகிளுக்கு சங்கத்தின் சார்பில் சால்வை அணிவித்து கௌரவப்படுத்தப்பட்டனர். முடிவில் திரு.கி.நாகராஜன் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவுற்றது.

– மரு.சேதுராமன், மாவட்டச்செயலாளர், தஞ்சாவூர்

# தஞ்சாவூர் மாவட்ட மாதாந்திரக் கூட்டம்

தமிழ்நாடு ஓய்வூதியர் சங்க தஞ்சை மாவட்ட மையத்தின் மாதாந்திரக்கூட்டம், தஞ்சாவூர் மாவட்ட தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய கட்டிட வளாகத்தில், **01.06.2024** சனிக்கிழமை காலை **10.30** மணியளவில் மாவட்டத்தலைவர் திரு.சீனி. அய்யாகண்ணு அவர்கள் தலைமையிலும், மாநில துணைப் பொதுச்செயலாளர் திரு.இரா.ஜெகதீசன் மற்றும் மேனாள் மாநில துணைத்தலைவர் திரு.இரா. இராமதாசு ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது. கூட்டத்தில், சுமார் 70 பேர் கலந்து கொண்டனர். இரண்டு பேர் புதிய உறுப்பினர்களாக இணைந்து கொண்டனர். கூட்டத்தில் கலந்து கொண்டவர்களை மாவட்ட பிரச்சாரச்செயலாளர் திரு.கி.நாகராஜன் அவர்கள் வரவேற்றார்.

ஜூன் மாதத்தில் பிறந்த நாள் காணும் உறுப்பினர்களுக்கு மாநில செயற்குழு உறுப்பினர் பட்டுக்கோட்டை திரு.என்.சந்தானகிருஷ்ணன் அவர்கள் பிறந்த நாள் வாழ்த்து கூறினார். பிறந்த நாள் காணும் உறுப்பினர்களில் நேரில் கூட்டத்தில் கலந்து கொண்ட 10 உறுப்பினர்களுக்கு மேடையில் சங்கத்தின் சார்பில் சால்வை அணிவித்து கௌரவப்படுத்தப்பட்டனர்.


ஜூன் மாதம் பிறந்த நாள் காணும் மாநில துணைப்பொதுச் செயலாளர் திரு.இரா.ஜெகதீசன் அவர்களும் மேனான் மாநில துணைத்தலைவர் திரு.இரா.இராமதாசு அவர்களும் கூட்டத்தில் கலந்து கொண்ட 70 நபர்களுக்கும் தம் சொந்த செலவில் இனிப்புடன் சிற்றுண்டி வழங்கினர்.

சென்ற மாத சங்க நிகழ்வுகளை மாவட்டச்செயலாளர் திரு.மரு.சேதுராமன் விளக்கினார். மாவட்ட கருவூலத்தில் **23.05.2024** அன்று நடைபெற்ற களஞ்சியம் App பயிற்சியில் கலந்து கொண்டது பற்றியும், களஞ்சியம் App–ல் உள்ள நன்மைகளையும் விளக்கினார். கருவூலத்திற்கு நேரில் செல்லாமலேயே ஓய்வூதியர்களுக்குத் தேவையான அனைத்து தேவைகளையும் களஞ்சியம் App-ல் செய்து கொள்ளலாம் என்றும் விளக்கினார். சென்ற மாத வரவு செலவு கணக்குகளை மாவட்டப் பொருளாளர் திருமதி.என்.எஸ்.வசந்தா அவர்கள் சமர்ப்பித்தார். மேலும் மாநில கட்டிட நிதிக்கு இதுவரை பணம் செலுத்தாதவர்கள் உடன் வழங்க கேட்டுக் கொண்டார்.

தலைவர் தமது உரையில், பிறந்த நாள் வாழ்த்து வாட்ஸ்அப்–ல் பதிவிடும்போது போன் எண்ணையும் பதிவிட கேட்டுக் கொண்டார். சங்க வாட்ஸ்அப் குரூப்பில் தேவையற்ற பதிவுகளை பதிவிடுவோரை நீக்கி வைக்க கேட்டுக் கொண்டார். தஞ்சையை சேர்ந்த, கோவை மாவட்டத்தில் மாவட்ட கருவூலராக பணியாற்றி ஒய்வு பெற்ற திரு.டி.சி.எல்.நடராஜன் அவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு ஓய்வூதிய நிலுவைகளில் ஏதும் பிரச்சினை இருந்தால் தான் உதவுவதாக தெரிவித்தார். கிராம நிர்வாக அலுவலராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற திரு.சி.செல்வராஜ் அவர்கள் தம் கருத்தை பதிவு செய்தார். மாவட்ட துணைத்தலைவர் திருமதி. ஆர்.வசந்தா நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவுற்றது.

– மரு.சேதுராமன், மாவட்டச்செயலாளர்,
தஞ்சாவூர்

# அம்பத்தூர் வட்டக்கிளை நிர்வாகியை சந்தித்து பிறந்த நாள் வாழ்த்து





தமிழ்நாடு ஓய்வூதியர் சங்க, அம்பத்தூர் வட்டக்கிளை நிர்வாகி திரு.திருக்குறள் ஏ.பெருமாள் அவர்களின் பிறந்த நாள் **(08.06.2024)** முன்னிட்டு நிர்வாகிகள் நேரில் சென்று நலம் விசாரித்து சால்வை அணிவித்து கௌரவிக்கப்பட்டது.

– நிர்வாகிகள், அம்பத்தூர் வட்டக்கிளை

# பெரம்பலூர் மாவட்ட மாதாந்திரக் கூட்டம்







தமிழ்நாடு ஓய்வூதியர் சங்க பெரம்பலூர் மாவட்ட மாதாந்திரக்கூட்டம், 01.06.2024 அன்று சனிக்கிழமை காலை 10.00 மணியளவில், புது பஸ்டாண்டு அருகில், எஸ்.கே.சி. நகரில் உள்ள சிவ.இளங்கோ இல்லத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்டத்தலைவர் கு.சக்கரபாணி தலைமை வகித்தார். மாவட்டச்செயலாளர் ரெ.சிங்கப்பெருமாள் முன்னிலை வகித்தார். மாவட்ட துணைத்தலைவர் க.பழனிமுத்து அனைவரையும் வரவேற்றார். கூட்டத்தில், மாநிலத் துணைத்தலைவர் ஓவியர் கி.முகுந்தன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில், ஜூன் 1 அன்று 75வது பிறந்த நாள் காணும் தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கத்தின் மாநிலத்தலைவர் திருவாளர் சாதனை நாயகன் கோ.சீதாராமன் அவர்கள் நூறாண்டுகளுக்கு மேல் நலமுடன் வாழ வாழ்த்து தெரிவித்தும், இம்மாவட்டத்தில் உள்ள இம்மாதம் பிறந்த நாள் காணும் பின்வரும் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் அனைவரின் சார்பாக கேக் வெட்டி மகிழ்ச்சியும், வாழ்த்தும் தெரிவிக்கப்பட்டது.

ஜூன் மாதம் பிறந்த நாள் காணும் மாவட்ட துணைத்தலைவர் திரு.ஆ.செல்வராஜ் (ஜூன் 1) அமைப்புச்செயலாளர் திரு.க.பாலகிருஷ்ணன் (ஜூன் 7), ஆலத்தூர் வட்டக்கிளைத்தலைவர் திரு.ஜோ. வேல்முருகன் (ஜூன் 10), திரு.ஏ.ராமர், வனக்காவலர் (ஓய்வு) (ஜூன் 14), வேப்பந்தட்டை வட்டக்கிளைச் செயலாளர் திரு.கே.அப்துல்கலாம் (ஜூன் 15), திரு.பி.மணிவேல், துணை வேளாண்மை அலுவலர் (ஓய்வு) (ஜூன் 15), திரு.எம்.துரைசாமி, தோட்டக்கலை துணை அலுவலர் (ஓய்வு) (ஜூன் 20) திரு.கே. இராஜேந்திரன், ஆட்சி அலுவலர் (ஓய்வு) (ஜூன் 23) திரு.வே.நல்லசெல்வம், உதவி வேளாண்மை அலுவலர் (ஓய்வு), (ஜூன் 26) மற்றும் தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய பெரம்பலூர் மாவட்ட பொருளாளர் திரு.மு.இளங்கோவன், மாவட்டத்தலைவர் திரு.வெ. சீவகன் ஆகியோருக்கு பொன்னாடை அணிவித்து பிறந்த நாள் வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்தில், கௌரவத்தலைவர் செந்தமிழ்செல்வன், சங்க ஆலோசகர் சி.அண்ணாதுரை, மாவட்ட துணைத்தலைவர்கள் மு.அருணாசலம், மு.தெய்வமணி, ஆ.செல்வராஜ், கு.மாயவேல், இணைச்செயலாளர்கள் மா.பொன்னுச்சாமி, பி.மணி, சி.இரத்தினம், மு.சண்முகம், அமைப்புச்செயலாளர் க.பாலகிருஷ்ணன், மாவட்ட பிரச்சாரச் செயலாளர் என்.சுந்தரராஜபெருமாள், மத்திய செயற்குழு உறுப்பினர்கள் தி.பெரியசாமி, வீ.லெட்சுமணன், மகளிரணி செயலாளர் திருமதி.சு.புஷ்பராணி, ஆலத்தூர் வட்டக்கிளைத்தலைவர் ஜோ. வேல்முருகன், செயலாளர் வா.பா.கருணாநிதி, பொருளாளர் வே.நல்லசெல்வம், வேப்பந்தட்டை கிளைத்தலைவர் பெ.ரெங்கசாமி, செயலாளர் அப்துல்சலாம், பொருளாளர் சி.வீராசாமி ஆகியோர் உரையாற்றினர். முடிவில் மாவட்ட பொருளாளர் திரு.ப.முருகையா நன்றி கூறினார்.

கூட்டத்தில், சங்கத்தின் சட்ட விதிகள் திருத்தம் குறித்து விவாதித்து மாநில மையத்திற்கு பரிந்துரை செய்வதெனவும், பழைய ஓய்வூதிய திட்டத்தை விரைவில் அறிவிக்க வேண்டுமெனவும், 70 வயது நிறைவுற்ற ஓய்வூதியர்களுக்கு 10 சதவீதம் ஊதிய உயர்வு வழங்க வேண்டுமெனவும் தமிழக அரசை வலியுறுத்தி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

– கு.சக்கரபாணி, மாவட்டத்தலைவர், பெரம்பலூர்

## இரங்கல் செய்தி



தமிழ்நாடு பட்டுவளர்ச்சித் துறையில், இணை இயக்குநராக பணியாற்றி ஓய்வு பெற்றவரும், மேற்படி துறையில், ஓய்வூதியர் நலச்சங்க உறுப்பினராகவும் இருந்து வந்த திரு.என்.சுயம்பு அவர்கள், 26.06.2024 அன்று நாகர்கோயிலில் இயற்கை எய்தினார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

# திருவண்ணாமலை மாவட்ட மையத்தின் மாதாந்திரக்கூட்டம்





திருவண்ணாமலை மாவட்ட ஒய்வூதியர் சங்கத்தின் ஜுன் மாத மாதாந்திர கூட்டம் 01.06.2024 சனிக்கிழமை அன்று காலை 10.30 மணி அளவில் திருவண்ணாமலை காந்தி நகர், மெயின் ரோடு மாதா மெடிக்கல்ஸ் மாடியில், திருவண்ணாமலை மாவட்ட தலைவர் திரு.ந.ராமலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

தமிழ்த்தாய் வாழ்த்துக்குப்பிறகு, மாவட்டச்செயலாளர் திரு.ஜி.சேகர் அவர்கள் வருகை தந்த அனைவரையும் வரவேற்றும், மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் கட்டிட நிதி சேகரித்து அதனை மாவட்ட மையம் சார்பில் மாநில மையத்தில் குறித்த நேரத்தில் ஒப்படைத்த விபரங்களையும் விரிவாக எடுத்துரைத்தார்.

கூட்டத்தில், செங்கம் வட்டக்கிளைத்தலைவர் திரு.டி.பாண்டுரங்கன், போளூர் வட்டக்கிளைத் தலைவர் திரு.என்.கோபால், துணைத்தலைவர் திரு.பி.அண்ணாமலை, அங்கன்வாடி உதவியாளர் திருமதி.மல்லிகா ஆகியோர் தமது குறைகளையும், எதிர்பார்ப்புகளையும் தெரிவித்து உரையாற்றினர். மாவட்ட துணைத்தலைவர் திரு.ஆர்.மணிகண்டன் அவர்கள், தலைவர் சிவ.இளங்கோ கால சங்க வளர்ச்சி அரசு அலுவலர்களுக்கு ஒன்றியம் சாதித்தது குறித்து உரை நிகழ்த்தினார். மாவட்ட தலைமை நிலையச் செயலாளர் திரு.ஏ.ராமச்சந்திரன் அவர்கள் தமது உரையில், சங்கப் பணிகள் மாவட்ட நிர்வாகிகள் நன்கு செயல்பட்டதைப் பாராட்டியும், பொது சுகாதாரத் துறையில் பணிபுரிந்து ஒய்வு பெற்ற பணியாளர்களின் நிலுவையில் உள்ள குறைகள் துரிதமாக களைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என தெரிவித்தும், மாவட்ட நிர்வாகம் சிறப்பாக செயல்பட நிதி வழங்கி ஒத்துழைக்க வேண்டும் எனவும் பேசினார். மேலும், மாவட்ட இணைச்செயலாளர்கள் திரு.ஆர்.தங்கராஜ், திரு.கோபண்ணா, திரு.கே. மகாகிருஷ்ணன் ஆகியோரும் சங்க வளர்ச்சி குறித்து உரையாற்றினர்.

பின்பு, மண்டல செயலாளர் திரு.என்.மாசிலாமணி அவர்கள் தமது சிறப்புரையில், இன்று 01.06.2024 நமது மாநிலத்தலைவர் மதிப்பிற்குரிய திரு.கோ. சீதாராமன் அவர்களின் 75வது பிறந்த நாள் என்றும், அவர் சுறுசுறுப்புடன் இளைஞர் போல சங்கப் பணிகள் மேற்கொண்டு வருவதாகவும், முன்னாள் தலைவர் கண்ணியமிகு திரு.மு.காதர்மீரான் காலத்தில் சங்கத்திற்காக "ஒய்வூதியர் நண்பன்" என்ற இதழினை ஆரம்பித்து சங்க வரலாற்றில் பெருமை பெற்றார். நமது தலைவர் திரு.கோ.சீதாராமன் அவர்கள் சங்கத்திற்கு நிர்வாகிகள் ஒத்துழைப்புடன் ஒரு கட்டிடம் தேவை என கருத்திற்கொண்டு, நமது மாநில நிர்வாகிகளிடம் கலந்து பேசி பின் அனைத்து மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் நடத்தி, இக்கருத்தினை விரிவாக பேசி ஒப்புதல் பெற்று, அவரும் அலுவலக நிர்வாகிகளுடன் பல இடங்களைப் பார்த்து புதியதாக திறந்திருக்கும் கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்திற்கு சிறிது தொலைவிலும், வண்டலூர் ரயில்வே ஸ்டேசன் அருகிலும் இடத்தினை தேர்வு செய்து, அதனை மாவட்ட நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் ஒத்துழைப்புடன் இடத்தினை பத்திரப்பதிவு செய்து நம்மையெல்லாம் பெருமை கொள்ள வைத்துள்ளார். இன்று (01.06.2024) அவருக்கு 75வது வயது துவக்கம். இந்த இனிய நாளில் அவர் குடும்ப கஷ்டமெல்லாம் நீங்கி நிம்மதியான வாழ்க்கை வாழவும், நீடித்த ஆயுள் இறைவன் அவருக்கு வழங்க வேண்டியும், வருகை புரிந்த அனைத்து உறுப்பினர்களின் ஆரவாரமான கைதட்டலுடன் அவருக்கு பிறந்த நாள் வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

பின் மாநில தலைமை கட்டிட நிதியாக நமது மாவட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட தொகையில் 45 சதவீதம் அளவுதான் வசூல் செய்யப்பட்டுள்ளதால், குறைத்த நேரத்தில் மீதம் தொகை வசூல் செய்ய மாவட்டச்செயலாளர் திரு.ஜி.சேகர் அவர்களுடன் கலந்து பேசி, வசூல் செய்வதென முடிவு செய்து, நிலஅளவை பதிவேடுகள் துறை நண்பர்களின் ஒத்துழைப்புடனும், நகரின் பிரபல நகைக்கடையான காமதேனு ஜுவல்லரி உரிமையாளர் அவர்களின் நன்கொடையுடனும் மாவட்ட குறியீடு இலக்கினை அடைந்ததாகவும், இப்பணியில் மாவட்ட பொருளாளர் திரு.பி.ராஜேந்திரன் அவர்களும் உடனிருந்தார் என பேசினார். மேலும் பொது சுகாதார துறையில் நிலவும் பல்வேறு பிரச்சனைகளுக்கு பலமுறை நமது

உறுப்பினர்கள் குறைகளைக் களைய முறையாக மனு செய்தும், உரிய நடவடிக்கை மேற்கொள்ளாத பொது சுகாதாரத்துறை மாவட்ட சுகாதார அலுவலர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று பின் உரிய மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம் எனத் தெரிவித்தார். பின் சங்க உறுப்பினர் ஒத்துழைப்புடன் சேர்ந்து புதிய உறுப்பினர்கள் மற்றும் புரவலர் இதழுக்கு உறுப்பினர்களை சேர்க்க வேண்டும் எனவும் வலியுறுத்தி பேசினார். மாநில கட்டிட நிதியினை முழுமையாக வசூல் செய்து இலக்கினை அடைந்த மாவட்டத்தலைவர் திரு.என்.ராமலிங்கம், செயலாளர் திரு.ஜி.சேகர், பொருளாளர் திரு.பி.ராஜேந்திரன் அவர்களை மீண்டும் வாழ்த்தியும் நன்றியினைத் தெரிவித்தார்.

பின், பொருளாளர் திரு.பி.ராஜேந்திரன் வரவு–செலவு இனங்களை வாசித்தும், சுகாதார துறையில் சில மனுக்களுக்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை தெரிவித்தார். வருகை புரிந்தவர்கள் மற்றும் உறுப்பினர்கள் ஆரோக்கியத்தில் மிகுந்த கவனத்துடன் இருக்க வேண்டும் என விழிப்புணர்வு ஏற்படுத்தியும், அனைவருக்கும் நன்றி கூற, தேசிய கீதத்துடன் கூட்டம் இனிதே முடிவுற்றது. மாவட்ட மையம் சார்பாக அனைவருக்கும் மதிய உணவு ஏற்பாடு செய்யப்பட்டது.

<u>கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்</u>

1. 01.06.2024 அன்று 75–வது அகவையில் அடியெடுத்து வைக்கும் நமது மாநிலத்தலைவர், சமுதாய சிந்தனையாளர் திருமிகு.கோ. சீதாராமன் அவர்கள் நலமாகவும், வலிமையாகவும் வளமோடும், குடும்ப குறைகள் நீங்கி மகிழ்ச்சியாக 100 ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்தும், சமுதாய சங்கப் பணிகள் தொடர்ந்து செய்திட வேண்டியும், அனைவரின் கரகோஷத்துடன் பிறந்த நாள் பாராட்டு தெரிவித்து தீர்மானம் இயற்றப்பட்டது.

2. அங்கன்வாடி பணியாளர்கள்/உதவியாளர்களுக்கு குறைந்தபட்ச ஓய்வூதியம் ரூ.7850/– வழங்கிட வேண்டும் என ஏற்கனவே மாநில மையத்தால் அரசுக்கு அளித்துள்ள மனுவின்பேரில் துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என மாநில மையத்தினை கோருவது என தீர்மானிக்கப்பட்டது.

3. ஒன்றிய அரசில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு மருத்துவப்படி ரூ.1000/– வழங்குவது போல, மாநிலத்தில் ஓய்வு பெற்ற அலுவலர்களுக்கு வழங்க வேண்டும் என அரசை மாநில மையம் வலியுறுத்த வேண்டும் தீர்மானிக்கப்பட்டது.

4. தொகுத்து வழங்கும் தொகை (Commutation) வழங்கியது, தவணை பிடித்தக் காலம் 15 ஆண்டிலிருந்து 12 ஆண்டாக குறைக்க அரசை வலியுறுத்த வேண்டும் என மாநில மையத்தினை கேட்டுக் கொள்கிறது.

5. ஓய்வு பெற்றவர்களின் கூடுதல் ஓய்வூதியம் 80 வயதில் 20%, 85 வயதில் 30%, 90 வயதில் 40%, 95 வயதில் 45%, 100 வயதில் 100% என தற்போது அரசால் வழங்கப்பட்டு வருகிறது. கால மாற்றங்களினால் 65 வயதில் 5%, 70 வயதில் 10%, 75 வயதில் 15%, 80 வயதில் 20%, 90 வயதில் 30%, 95 வயதில் 40%, 100 வயதில் 100%ம் என வழங்கப்பட வேண்டும் என அரசை வலியுறுத்த வேண்டும் என மாநில மையத்தை கேட்டுக் கொள்கிறது.

– ந.இராமலிங்கம், மாவட்டத்தலைவர், திருவண்ணாமலை

## தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கம், விழுப்புரம் மாவட்டம்





விழுப்புரம் நகரில் புதிதாக தொடங்கப்பட்ட மருத்துவமனை மெட்வே மருத்துவமனை ஆகும். இதன் தலைமையிடம் சென்னை. இம்மருத்துவமனையின் மேலாளரும், ஒருங்கிணைப்பாளரும், 08.06.2024 அன்று நடைபெற்ற நமது சங்க மாதாந்திரக் கூட்டத்தில் கலந்து கொண்டு, மருத்துவ காப்பீடு திட்டத்தின் மூலம் ஓய்வூதியர்களுக்கு அனைத்து வகையான சிகிச்சைகள் அளிக்கப்படும் எனவும், ஓய்வூதியர்கள் அனைவருக்கும் தங்களால் முடிந்த அனைத்து மருத்துவ சிகிச்சைகளும் அளிக்கப்படும் எனவும் உறுதியளித்தனர். மேலும், 09.06.2024 அன்று விழுப்புரத்தில் நடைபெறும் முழுமையான இதய நோய் பரிசோதனை முகாமில் கலந்து கொண்டு பயனடைய கேட்டுக் கொண்டனர்.

– அ.குருசேகரன், மாவட்டச்செயலாளர், விழுப்புரம்

# திருவையாறு வட்டக்கிளையின் மாதாந்திரக்கூட்டம்

தமிழ்நாடு ஓய்வூதியர் சங்க திருவையாறு வட்டக்கிளையின் மாதாந்திரக்கூட்டம் வட்டக்கிளை கட்டிடத்தில், தலைவர் திரு.இரா.செல்வராசு அவர்கள் தலைமையில், உறுப்பினர் திருமதி. கோ. பாலாம்பாள் தமிழ்த்தாய் வாழ்த்துப்பாட, உறுப்பினர் திரு.எஸ்.ஹென்றிதாஸ் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். திருவையாறு வட்டக்கிளையின் முன்னாள் இணைச் செயலாளரும், சுகாதாரத் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றவருமான திரு.டி.கே.செல்லப்பா மற்றும் வட்டக்கிளை உறுப்பினரும் வருவாய்த்துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றவருமான திரு.கலியமூர்த்தி ஆகியோரின் மறைவிற்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திரு.கோவிந்தராஜன் உறுதிமொழி வாசிக்க அனைவராலும் சொல்லப்பட்டது. செயலாளர் திரு.ப.வேணுகோபாலன் சென்ற கூட்ட அறிக்கையும், இணைச்செயலாளர் திரு.இரா.சச்சிதானந்தன் வரவு செலவு அறிக்கையும் வாசித்து வரவு செலவு திருத்தம் ஏதுமின்றி ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆட்சிக்குழு உறுப்பினர் திரு.அன்பு சுப்பிரமணியன் அவர்கள், திருக்குறள் 'அ'கரத்தில் தொடங்கி 'ன'கரத்தில் முடிவடைவதையும், 'கற்க கசடற' போன்ற நெட்டெழுத்தே இல்லாத குறட்பாக்களையும் ''துப்பார்க்குத் துப்பாய'' போன்ற சொல்லாட்சி மிக்க குறட்பாக்களையும் விளக்கி கூறினார். மேலும் தனது 91வது வயது நிறைவு நாளில் தலைவர் திரு.செல்வராசு அவர்களும், உறுப்பினர் திரு.மதியழகன் அவர்களும் தன் இல்லத்திற்கு வந்து வாழ்த்து தெரிவித்தமைக்கு நன்றி தெரிவித்தார்.

வட்ட துணைத்தலைவரும், தஞ்சை மாவட்டச் செயலாளருமான திரு.மரு.சேதுராமன் அவர்கள் மாநில கட்டிட நிதி பற்றியும், அனைவரின் பங்கும் அதில் இருக்க வேண்டும் எனவும் கூறினார். மேலும் நேர்காணல் பற்றி விளக்கிக் கூறி, ஓய்வூதியர்கள் தாங்கள் ஓய்வு பெற்ற மாதத்திலும், குடும்ப ஓய்வூதியர்கள், குடும்ப ஓய்வூதியம் பெறத்தொடங்கிய மாதத்திலும், விருப்ப ஓய்வூதியர்கள் தங்கள் பிறந்த நாள் வரும் மாதத்திலும் நேர்காணல் செய்ய வேண்டும் எனவும் கூறினார். களஞ்சியம் என ஒரு ஆப் உருவாக்கப்பட்டுள்ளதையும், ஒவ்வொரு ஓய்வூதியருக்கும் ஒரு எண் அளிக்கப்பட்டுள்ளதையும் , அதன் மூலம் ஓய்வூதியர்கள் அனைவரும் ஓய்வூதியம் பற்றிய அனைத்து விவரங்களையும் பெறலாம் எனவும் விளக்கிக் கூறினார்.

தலைவர் திரு.இரா.செல்வராசு அவர்கள் வாரிசு நியமனம் பற்றியும், கட்டிட நிதி, நேர்காணல் பற்றியும் விளக்கிக் கூறினார். நேர்காணல் வட்டக்கிளை அலுவலகத்தில் செய்யலாம் எனவும், மாநில கட்டிட நிதி பற்றியும் விளக்கிக் கூறினார். உறுப்பினர் திரு.எஸ்.முருகையன் அவர்கள் கருவூலத்தில் தனக்கு ஏற்பட்ட அனுபவத்தை விரிவாகக் கூறினார். திருவையாறு உஜ்ஜீவன் வங்கி துணை மேலாளர் திரு.சுந்தரேசன் அவர்கள், வங்கி அளிக்கும் வட்டி விகிதங்களைப் பற்றி விளக்கிக் கூறி, அனைவரும் அதில் முதலீடு செய்யும்படி கேட்டுக் கொண்டார்.

தீ தடுப்பு மற்றும் பழுது பார்க்கும் நிறுவனமான கிரீன்ஸ்டார் நிறுவனத்தின் உரிமையாளர் திரு.எம். ரமணி அவர்கள், தீத்தடுப்பு சாதனைத்தைப் பற்றி கூறி, திருவையாறு வட்டக்கிளைக்கு ரூ.4000 மதிப்பிலான தீத்தடுப்பு சாதனம் ஒன்றையும் இலவசமாக வழங்கினார். தனது பிறந்த நாளான 05.06.2024 அன்று தேநீர் விருந்தளித்த உறுப்பினர் திரு.ஜி.நாகலெட்சுமி உள்ளிட்ட அனைவருக்கும் திரு.வி.ஏ.கிருஷ்ணன் அவர்கள் நன்றி கூற விழா இனிதே நிறைவு பெற்றது.

– இரா.செல்வராசு, வட்டக்கிளைத்தலைவர், திருவையாறு


# பிறந்த நாள் வாழ்த்து



ஓய்வூதியர் சங்க திண்டுக்கல் மாவட்டம், மாநில செயற்குழு உறுப்பினரும், முன்னாள் என்.ஜி.ஓ. சங்க மாவட்டத்தில் பல பொறுப்புகளை வகித்தவருமான திரு.ஏ.ஜெகராஜன் பட்டுவளர்ச்சித் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றவர். கடந்த 01.06.2024ல் தனது 72வது பிறந்த நாளை பழனி அருள்மிகு முருகன் கோவிலுக்கு தனது குடும்பத்தினருடன் சென்று மிகவும் சீரும், சிறப்புமாக கொண்டாடினார். இவர் திண்டுக்கல் மாவட்டம், அம்பாத்துறை, ராஜகாளியம்மன் நகரில் குடியிருப்பவர். மாவட்ட ஓய்வூதியர் சங்கத்தலைவர் திரு.சி.தங்கப்பன், மாவட்ட துணைத்தலைவர் திரு.கே.கந்தசாமி மற்றும் நிர்வாகிகள் ஆகியோர் திரு.ஏ.ஜெகராஜன் அவர்களுக்கு பிறந்த நாள் வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

– சி.தங்கப்பன், தலைவர், திண்டுக்கல் மாவட்டம்

# கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டக்கிளையின் பொதுக்குழு கூட்டம்


தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கம், கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டக்கிளையின் பொதுக்குழு கூட்டம், **25.05.2024** அன்று காலை **10** மணியளவில் நடைபெற்றது. கூட்டத்திற்கு வட்டக்கிளைத் தலைவர் திரு.வை.செந்தாமரைக்கண்ணன் தலைமை உரையாற்றினார். வட்டக்கிளை செயலாளர் திரு.என். இராஜதுரை வரவேற்புரை நிகழ்த்தினார். தலைவர் தமது உரையில், மாநில, மாவட்ட சங்கங்களின் ஆக்கப்பூர்வமான அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஒத்துழைப்பு நல்குவதாகவும், அதிகளவில் உறுப்பினர் சேர்க்கை, புரவலர் சேர்க்கை மற்றும் கட்டிட நிதி வழங்குவதிலும் தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் உரையாற்றினார்.

கூட்டத்தில், மாவட்டத்தலைவர் திரு.ந.பாண்டியன், மாவட்டச்செயலாளர் திரு.த.கண்ணன், பொருளாளர் திரு.ஆர்.சந்தானராஜ் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர். மாவட்டத்தலைவர் தமது உரையில், காலம் கடந்தபோதிலும் சிறப்பான முறையில் பொதுக்குழு கூட்டம் ஏற்பாடு செய்த வட்டக்கிளைத் தலைவர், செயலாளர் உள்ளிட்டு அனைத்து நிர்வாகிகளுக்கும், மாவட்ட சங்கத்தின் சார்பில், மனதார பாராட்டுவதுடன், அதிகளவில் உற்சாகத்துடன் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைத்து தரப்பினருக்கும் பாராட்டினை மனதார தெரிவித்துக் கொள்கிறோம். மேலும், நமது மாநிலத்தலைவரின் சீரிய முயற்சியால் நமக்காக ஓர் சொந்தக் கட்டிடம் தேவை என்று உணர்ந்து, கட்டிட நிதி திரட்டி மனை ஒன்றினை 13.05.2024ல் பத்திரப் பதிவு செய்தமைக்கு மிகுந்த மகிழ்ச்சியுடன் மாநில சங்கத்திற்கு பாராட்டினை தெரிவித்துக் கொள்வதாக பேசினார்.

மேலும், கூட்டத்தில் வட்டக்கிளை சார்பில், திரு.கே. நெடுமாறன், திரு.சி.தங்கையன், துணைத்தலைவர் திரு.எஸ்.ஜெயபால், துணைத்தலைவர் திரு.கனகசபை, மகளிரணி செயலாளர் திருமதி பி.வாணி, இணைச்செயலாளர் திருமதி என்.தேவகி ஆகியோர் மாநில/மாவட்ட வட்டக்கிளை சங்கங்களின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் நல் ஒத்துழைப்பு நல்குவதாக பேசியதுடன், நிதி வழங்குதல், புதிய உறுப்பினர் சேர்க்கை, புரவலர் சேர்க்கை ஆகியவற்றிற்கு தீவிர முயற்சி செய்வதாகவும் உரையாற்றினர்.

கூட்டத்தில் திருமதி.மகேஸ்வரி, தனலட்சுமி, நவநீதம், நா.வளர்மதி, திரு.ராஜேந்திரன், திரு.பட்டுசாமி, திருமதி.ஆர்.வளர்மதி, திரு.இளஞ்சேரன், திரு.தட்சிணாமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்ட முடிவில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**1)** அதிதீவிர நிதிச்சுமையிலும், ஓய்வூதியர், குடும்ப ஓய்வூதியர்களுக்கு **2024**, ஜனவரி **1** முதல் நிலுவைத்தொகையுடன் **4** சதவீதம் அகவிலைப்படி வழங்கிய தாயுள்ளம் கொண்ட தமிழக முதல்வருக்கு நன்றியினையும், பாராட்டினையும் தெரிவிப்பதென தீர்மானிக்கப்பட்டது.

**2)** மாநில சங்கத்திற்கு சொந்தமான அசையா சொத்து (சொந்தக் கட்டிடம்) தேவை என உணர்ந்து, மாநிலத்தலைவர் உள்ளிட்ட அனைத்து தரப்பினரின் தீவிர முயற்சியில் நிதி திரட்டி, **13.05.2024** அன்று சென்னையில் மனை பத்திரப் பதிவு செய்து மகத்தான சாதனை படைத்த மாநிலத்தலைவருக்கு பாராட்டையும், நன்றியையும் தெரிவிப்பதென தீர்மானிக்கப்பட்டது.

**3)** சிதம்பரம் வட்டக்கிளை சார்பில், மாநில, மாவட்ட சங்கங்களின் நடவடிக்கைகளுக்கு சிறப்பான ஒத்துழைப்பு நல்குவதடன், **2024**ஆம் ஆண்டிற்கு புதிய உறுப்பினர் சேர்க்கை, புரவலர், ஆண்டு சந்தா மற்றும் அதிகளவில் கட்டிட நிதி அளிப்பதென தீர்மானிக்கப்பட்டது.

**4)** தமிழ்நாடு ஓய்வூதியர் / குடும்ப ஓய்வூதியர்கள் **70** வயதை முடித்தவர்களுக்கு **10** விழுக்காடு கூடுதல் ஓய்வூதியம் பெற தீவிர நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாநில சங்கத்தை கேட்டுக் கொள்வதென தீர்மானிக்கப்பட்டது.

**5)** நீண்ட நாள் கோரிக்கையான ஓய்வூதியருக்கு வழங்கப்படும் தொகுப்பூதிய தொகை பிடித்தம் செய்வதை **15** ஆண்டிலிருந்து **12** ஆண்டாக குறைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாநில சங்கத்தை கேட்டுக் கொள்வதென தீர்மானிக்கப்பட்டது.

கூட்ட முடிவில் திரு.எம்.பாலசுப்பிரமணியன் நன்றி கூறினார்.

– ந. பாண்டியன், மாவட்டத்தலைவர், கடலூர்

# காஞ்சிபுரம் மாவட்டத்தின் மாதாந்திரக்கூட்டம்








தமிழ்நாடு ஓய்வூதியர் சங்க காஞ்சிபுரம் மாவட்டத்தின் மாதாந்திரக் கூட்டம், 22.06.2024 அன்று காலை 10.00 மணியளவில், காஞ்சிபுரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள மலைக்கொழுந்து இல்லத்தில் மாவட்டத்தலைவர் திரு.என்.காளத்தி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மத்திய செயற்குழு உறுப்பினர் திரு.எஸ்.யோகானந்தம் அவர்கள் வரவேற்புரையாற்றினார். தமிழ்நாடு ஓய்வூதியர் சங்க மாநிலத்தலைவர் திரு.கோ.சீதாராமன் அவர்களுக்கு இனிய பிறந்த நாள் வாழ்த்து மாவட்டத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

ஹெல்ப் ஏஜ் இந்தியா தொண்டு நிறுவனம் சார்பில் திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு.சிவக்குமார் கலந்து கொண்டு, 60 வயதிற்கு மேலும் ஆரோக்கியமாக வாழ வழிமுறைகள் பற்றி முதியோர் மருத்துவக் குறிப்புகள் வழங்கினார். பெற்றோர், மூத்த குடிமக்கள் பராமரிப்பு நலச்சட்டம்–2007 குறித்தும், Digital Safety Training for Elders பயிற்சி அளிக்கப்பட்டது.

செங்கல்பட்டு மாவட்டத்தலைவர் திரு.ஏ.ஜேம்ஸ் பாலகிருஷ்ணன் அவர்கள் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினார். சக்ரா கிரிடிகல் கேர் மருத்துவமனை ஓய்வூதியர்களுக்கு கட்டணம் இல்லா சிறப்பு சிகிச்சை வழங்குவதையும் தெரிவித்தார். பட்டுவளர்ச்சித்துறை திரு.பரசுராமன், மாவட்ட துணைத்தலைவர் திரு.இரா. சுரேஷ் பாபு, மாவட்டச்செயலாளர் திரு.கே.என். சுந்தரமூர்த்தி, கருவூல கணக்குத்துறை, ஊரக வளர்ச்சித்துறை, பதிவுத்துறை, மருத்துவத்துறை, அங்கன்வாடி பணியாளர்கள் என 30 நபர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

மாநிலத்தலைவர் திரு.கோ.சீதாராமன் அவர்கள் தமது சிறப்புரையில், மாநில மையக் கட்டிடம், சென்னை, வண்டலூர் இரயில் நிலையம் அருகில் 1272 சதுர அடி காலிமனை நமது மாநில மையம் சார்பில் பத்திரப்பதிவு செய்யப்பட்டது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்தார். மாநில மைய கட்டிட நிதி வழங்கிய அனைத்து உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

வருகிற ஜூலை மாதம் 13ஆம் தேதி, உத்திரமேரூர் வட்டக்கிளை துவக்க முடிவு எடுக்கப்பட்டது. அனைத்து உறுப்பினர்களும் ஒற்றுமையுடன் செயல்பட்டு சங்க வளர்ச்சிக்கு பாடுபட வேண்டும் என்று தெரிவித்தார்கள். மாவட்டப் பொருளாளர் திரு.எஸ்.கோபாலகிருஷ்ணன் நன்றி தெரிவித்ததும் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

– என்.காளத்தி, மாவட்டத்தலைவர், காஞ்சிபுரம்

## வாழ்த்துகிறோம்

நமது சங்கத்தின் மூத்த முன்னோடி Dr A V ஜெகர் ராஜ் (சித்தா) திருமதி பத்மினி கோகிலம் தம்பதியினரின் 50 வது திருமண நாள் 05 02 24 Dr A V ஜெகர் ராஜ் அவர்களின் பிறந்த நாள் 19 -07-24 உடல் நலம் மனநலத்துடன் வாழ மாநில மையம் வாழ்த்துகிறது



# கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வட்டக்கிளை பொதுக்குழு கூட்டம்





தமிழ்நாடு ஓய்வூதியர் சங்க கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வட்டக்கிளையின் பொதுக்குழுக் கூட்டம் 30.05.2024 அன்று காலை 10 மணியளவில் விருத்தாசலம் திருமுதுகுன்றம் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு வட்டக்கிளைத் தலைவர் திரு.எஸ்.சிவக்குமார் தலைமையேற்றார். வட்டக்கிளைச் செயலாளர் திரு.எஸ்.சின்னதம்பி வரவேற்புரை நிகழ்த்தினார்.

வட்டக்கிளைத்தலைவர் தமது தலைமையுரையில், நீண்ட இடைவேளைக்குப் பிறகு வட்டக்கிளையின் பொதுக்குழு கூட்டம் நடத்தப்படுகிறது எனவும், ஒத்துழைப்பு நல்கிய அனைத்து நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவிப்பதுடன், இனிவரும் காலங்களில் இதுபோன்ற காலதாமதம் நிகழ்வு ஏற்படாது என்று தெரிவித்தார். மேலும், மாநில, மாவட்ட சங்கங்களின் நடவடிக்கைகளுக்கும் உங்களின் உறுதுணையுடன் ஆக்கப்பூர்வமாக செயல்படுவோம் எனவும், மாநில சங்க கட்டிட நிதி, புதிய உறுப்பினர் சேர்க்கை மற்றும் புரவலர் சேர்க்கை அதிக அளவில் பெறுவதற்கு துரித நடவடிக்கை எடுப்போம் எனவும் மாவட்ட சங்கத்தால் ஒதுக்கீடு செய்த குறியீட்டுத் தொகையினை விரைவில் அளிப்பதாகவும் தெரிவித்தார்.

கூட்டத்தில், ஆர்.சக்கரவர்த்தி உரையாற்றும்போது, இந்த சிறப்புமிகு வட்டக்கிளையின் பொதுக்குழுவில் கலந்து கொண்டு உரையாற்ற வாய்ப்பு அளித்தமைக்கு மிக்க மகிழ்ச்சி அளிப்பதாகவும், சங்கத்தின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் தேவையான ஒத்துழைப்பு அளிப்பதாகவும் தெரிவித்து, வட்டக்கிளைக்கென்று நகரப்பகுதியில் குறைந்த வாடகையில் நிரந்தரமாக ஒரு இடம் ஏற்பாடு செய்தால் நிர்வாகிகளுடன், உறுப்பினர்கள் ஒன்று கூடி கலந்துரையாடும் வாய்ப்பு ஏற்படும் என்பதுடன், அவ்வாறான சங்க நிகழ்வுகளை தெரிந்து கொள்ள முன்முயற்சியினை என்னால் ஆன உதவியினைச் செய்வேன் என்று உறுதியளித்து உரையாற்றினார். இந்த முயற்சி அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

கூட்டத்தில் துணைத்தலைவர் திரு.எஸ். நடராஜன், திரு.பாபு, திரு.ஜே.ராஜாங்கம், திருமதி. ஆர்.ராஜேஸ்வரி, திரு.வி.பெரியசாமி ஆகியோர் சங்க நடவடிக்கைகளை பாராட்டியதுடன், வட்டக்கிளை செயல்பாட்டிற்கு முழு ஒத்துழைப்பு அளிப்பதாக உறுதியளித்தனர். கூட்டத்தில், திரு.சண்முகம், திரு.வெங்கடேசன், திரு.கி.ராஜவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில், மாவட்டத்தலைவர் திரு.ந.பாண்டியன், மாவட்டச்செயலாளர் திரு.த.கண்ணன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு உரையாற்றினர்.

மாவட்டத்தலைவர் தமது உரையில், நீண்ட இடைவெளிக்குப் பிறகு வட்டக்கிளை தலைவர், செயலாளர் ஆகியோரின் கடின முயற்சியில் சிறப்பான பொதுக்குழு கூட்டம் ஏற்பாடு செய்தமைக்கு மாவட்ட சங்கத்தின் சார்பில், பாராட்டை தெரிவிப்பதுடன், தலைவர் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்களுக்கு பாராட்டையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், மாநில சங்கத்திற்கு சொந்தமான ஓர் கட்டிடம் தேவை என்ற உயரிய நோக்கில், சென்னையில், 13.05.2024ல் கையகப்படுத்தி, பத்திரப்பதிவு செய்தது சரித்திர சாதனையாகும். இந்த அளப்பரிய காரியம் நமது அனைத்து பிரிவினரின் பங்களிப்பில் நிகழ்ந்த ஒன்றாகும். இந்த சிறப்பான செயலுக்கு மாநிலத்தலைவர் எடுத்துக் கொண்ட பெரும் முயற்சியே காரணம். இதற்காக நாம் அனைவரும் அவரின் நிலைப்பாட்டினை பாராட்டாமல் இருக்க முடியாது. இம்மாவட்டத்திற்கு மாநில சங்கத்தில் நிர்ணயித்த கட்டிட நிதி தொகையினை முழுமையாக அளிப்போம் என்று உறுதி கொண்டுள்ளதாகவும் தெரிவித்து உரையாற்றினார். அனைத்து வட்டக்கிளைகளுக்கும் பகிர்ந்தளித்த மீதமுள்ள கட்டிட நிதியினை விரைவில் அளிப்பதாக உறுதியளித்தது மிக்க மகிழ்ச்சி அளிக்கிறது எனவும் தெரிவித்தார். கூட்ட முடிவில், கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1) விருத்தாசலம் வட்டக்கிளை சங்க செயற்பாட்டாளர் திரு.ஆர்.சக்கரவர்த்தி அவர்களின் அண்ணியார் திருமதி.இரா.லோகாம்பாள் அவர்கள் மறைவிற்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதுடன்,

அவரை இழந்து வாடும் குடும்பத்தாருக்கு ஆறுதல் தெரிவிப்பதென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2) மாநில, மாவட்ட மற்றும் வட்டக்கிளை சங்க நடவடிக்கைகளை உறுப்பினர்களுக்கும் சென்றடையும் வகையில் விவாதிக்க, விருத்தாசலம் நகரப் பகுதியில் ஓர் சிறிய அறையை மாத வாடகைக்கு ஏற்பாடு செய்வதென தீர்மானிக்கப்பட்டது.

3) ஓய்வூதியர் / குடும்ப ஓய்வூதியர்களுக்கு மாதந்தோறும் வழங்கும் மருத்துவப்படியினை ரூ.300/– லிருந்து ரூ.1000/– ஆக உயர்த்தி வழங்குவதற்கு தக்க நடவடிக்கை எடுக்குமாறு மாநில சங்கத்தினை கேட்டுக் கொள்வதென தீர்மானிக்கப்பட்டது.

4) மாநில / மாவட்ட சங்கம் வலுவுடன் நிதி ஆதாரத்தை பெருக்கிடவும், புதிய உறுப்பினர் சேர்க்கை, புரவலர் சேர்க்கை மற்றும் உறுப்பினர்களிடமிருந்து அதிக அளவில் கட்டிட நிதி பெறுவதற்கு அதிதீவிர முயற்சி மேற்கொள்வதென தீர்மானிக்கப்பட்டது.

5) தமிழ்நாடு ஓய்வூதியர் சங்க மாநில மையத்திற்கு சொந்தமாக ஓர் கட்டிடம் தேவையென தொலைநோக்குப் பார்வையுடன் சென்னையில் சொந்தமாக ஓர் இடத்தை பத்திரப்பதிவு செய்த மாநிலத் தலைமைக்கு பாராட்டையும், நன்றியையும் வட்டக்கிளை சார்பில் தெரிவிப்பதென தீர்மானிக்கப்பட்டது.

கூட்ட முடிவில், வட்டக்கிளை பொருளாளர் திரு.ஆர்.கிருஷ்ணமூர்த்தி நன்றி கூறினார்.

– ந.பாண்டியன், மாவட்டத்தலைவர், கடலூர்

# திருப்பூர் மாவட்ட செயற்குழு கூட்டம்

தமிழ்நாடு ஓய்வூதியர் சங்க திருப்பூர் மாவட்ட செயற்குழு கூட்டம் 20.06.2024 வியாழக்கிழமை காலை 10 மணி அளவில், மாவட்ட தலைவர் திரு.சென்னியப்பன் தலைமையிலும், மாவட்ட செயலாளர் திரு. அந்தோணிசாமி முன்னிலையிலும் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் திரு.அந்தோணிசாமி வரவேற்புரையாற்றினார். மாவட்ட தலைவர் திரு சென்னியப்பன் தலைமை உரையாற்றினார். அதன் பின்னர் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பின்னர் நடைபெற்ற பணிநிறைவு பாராட்டு விழாவில், TNGOU மாவட்ட துணை தலைவரும் தமிழ்நாடு ஊரக வளர்ச்சி துறை அலுவலர் ஒன்றியத்தின் மாநில துணைத்தலைவரும், பணி நிறைவு பெற்ற வட்டார வளர்ச்சி அலுவலருமான திரு.ஆ.ஜோதிநாத் அவர்களுக்கு பணி நிறைய பாராட்டு விழா நடைபெற்றது.

விழாவிற்கு மாவட்டத் தலைவர் திரு. சென்னியப்பன் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் திரு.அந்தோணிசாமி வரவேற்புரை ஆற்றினார். வட்டக்கிளை நிர்வாகிகள் அவிநாசி திரு.பி.சோமசுந்தரம், தாராபுரம் திரு.சி.விஜயகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவில், மாநில மகளிரணி அமைப்பாளர் திருமதி.கி.ரெங்கநாயகி, கோவை மண்டல செயலாளர் திரு என் பூவலிங்கம், நாமக்கல் மாவட்ட துணைத்தலைவர் திரு.ராசாகவுண்டர், கோவை மாவட்ட மத்திய செயற்குழு உறுப்பினர் திரு.கந்தசாமி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். பாராட்டு விழாவில் வருகை புரிந்த மாவட்ட துணைத்தலைவர் திருமதி.காளியாத்தாள், மாவட்ட துணைத்தலைவர் திருமதி.மங்கையர்கரசி, மாவட்ட இணைச்செயலாளர் உடுமலை திரு.ராஜ்குமார், அவிநாசி திரு.பி.சோமசுந்தரம், தாராபுரம் திரு.சி.விஜயகுமார் ஆகியோர் பாராட்டி உரையாற்றினார்கள்.

பணிநிறைவு பெற்ற பட்டுவளர்ச்சிதுறை ஆய்வாளர் திரு.என்.சந்திரன் அவர்களும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். கடந்த மாவட்ட செயற்கு கூட்டத்திற்கு பின்னர் சங்கத்தில் புதிதாக இணைந்த டிஎஸ்பி திரு.செந்தில்குமார், பாலிடெக்னிக் கல்லூரி விரிவுரையாளர் திரு.என். தேந்திரபாலன், நீதித்துறையைச் சேர்ந்த திரு.எம். கணேசன் ஆகியோருக்கு சால்வை அணிவித்து சிறப்பு செய்யப்பட்டது.

பின்னர் ஏற்புரை ஆற்றிய பணி நிறைவுபெற்ற வட்டார வளர்ச்சி அலுவலர் ஜோதிநாத் அவர்கள் தனது ஏற்புரையில், சங்க பணிகள் குறித்தும், சங்கத்தில் தனது நீண்ட கால அனுபவம் குறித்தும், ஓய்வூதியர்கள் பணம், தனம், மனம் ஆகியவற்றில் ஸ்திர தன்மையுடன் இருந்து கொள்ள வேண்டும். அவர்கள் பெற்று வரும் பென்ஷன் தொகை சரிதானா என்பதை எவ்வாறு அறிந்து கொள்வது எனவும் ஒரு சங்கத்திற்கு ஆணிவேராக இருப்பது உறுப்பினர்கள் தான் என்பதையும், அந்த உறுப்பினர்கள் தங்கள் சந்தா தொகையை தவறாமல் செலுத்த வேண்டும், அனைவரும் சங்கத்தின் மாத இதழுக்கு புரவலராக தங்களை இணைத்துக் கொள்ள வேண்டும் என்பது போன்ற மிக முக்கிய குறிப்புகளை வழங்கினார். முடிவில் மாவட்டத் துணைத் தலைவர் திரு.க.சுப்ரமணியன் நன்றி உரையாற்றினார். இறுதியில் அனைவருக்கும் சுவையான மதிய உணவு வழங்கப்பட்டு விழா இனிதே சிறப்பாக நிறைவு பெற்றது.

சென்னியப்பன் மாவட்டத் தலைவர் திருப்பூர்

# சேலம் மாவட்டத்தின் மாதாந்திரக் கூட்டம்





தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கம், சேலம் மாவட்டத்தின் மாதாந்திரக்கூட்டம் மாவட்டத்தலைவர் ஆர்.இரகுபதி தலைமையில், 11.06.2024, செவ்வாய்கிழமை அன்று காலை 11.00 மணியளவில் சேலம் சபாநாயகம் கட்டிடத்தில் உள்ள அரசு அலுவலர் ஒன்றிய கட்டிடத்தில் உள்ள சிவஇளங்கோ கூட்ட அரங்கில் நடைபெற்றது.

சங்கத்தின் மூத்த உறுப்பினர் ஆர்.ராஜாமணி அவர்கள் வரவேற்புரையாற்றினார். மாவட்டத் தலைவர் ஆர்.இரகுபதி முன்னுரையாற்றினார். ஆக்கப்பூர்வமான இக்கூட்டத்தில், மாநில துணைத் தலைவர் ஆர்.ராகவன், மாநில துணைப்பொதுச் செயலாளர் கோ. சண்முகசுந்தரம், மாவட்டத் துணைத்தலைவர்களான கே.நடராஜன், ஜெ.ஜெகநாதன், மாவட்டப் பிரச்சாரச்செயலாளர் ஏ.ராஜேந்திரன் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் உள்ளிட்ட சங்கத்தின் முன்னோடி உறுப்பினர்கள் கே.அமிர்தலிங்கம், எம்.மகாவிஷ்ணு, குணசேகரன், மூத்த உறுப்பினர் எம்.தேவராஜுலு, மகளிர் அணிச்செயலாளர் எஸ்.வசந்தா, முன்னோடி சகோதரிகளான அமுதவள்ளி, பிரேமாராணி, உள்ளிட்டு 60 நபர்களுக்கு மேல் கலந்து கொண்டு கீழ்க்கண்ட தீர்மானத்தின் மீது கருத்து தெரிவித்து உரையாற்றினார்கள்.

1) அண்மையில் பிறப்பிக்கப்பட்ட (07.06.2024) அரசு ஆணைக்கு ஏற்ப, அரசு மருத்துவமனையில் கட்டணமில்லாமல் சிகிச்சைப் பெற புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் ஓய்வூதியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் அரசு மருத்துவமனைகளில் கட்டணமில்லாமல் சிகிச்சை பெற முடியும்.

எனவே, ஓய்வூதியர்கள் மருத்துவ சிகிச்சை மேற்கொள்ள பழைய முறைப்படி அனைத்து மாவட்ட மருத்துவமனைகளில் ஓய்வூதியர்களுக்கு என தனி வார்டு (கட்டணமில்லாமல்) ஏற்படுத்த ஆவன செய்யுமாறு உரிய நடவடிக்கை மேற்கொள்ள மாநில மையத்தை கேட்டுக் கொள்கிறது.

இறுதியாக மாவட்டப் பொருளாளர் ஆர்.தனபால் நன்றி கூறிட, கூட்டம் இனிதே முடிவுற்றது.

| | |
|---|---|
| ஆர்.இரகுபதி | ஆர்.ராகவன் |
| மாவட்டத்தலைவர் | மாநில துணைத்தலைவர் |

# பிறந்த நாள் வாழ்த்து

27.6.2024 அன்று தருமபுரி மாவட்டத் தலைவர் நம் இனிய நண்பர் திரு. ஆர்.என்.வரதன் அவர்கள் பிறந்த நாள் விழா மாவட்ட அலுவலகத்தில் மண்டலத் தலைவர் திரு.எம்.இரத்தினவேலு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு அழைப்பாளராக பணி நிறைவு பெற்ற மருத்துத்துறை இணை இயக்குனர் டாக்டர் செல்வமூர்த்தி அவர்கள் கலந்து கொண்டு நண்பர் திரு.ஆர்.என்.வரதன் அவர்களுக்கு தலைப்பாகை மற்றும் பொன்னாடை அணிவித்து வாழ்த்துரை வழங்கினார். தலைவரின் சிறப்பு இயல்புகளை எடுத்துரைத்து எல்லா வளமும் பெற்று நலமுடன் பல்லாண்டு வாழ நண்பர்கள் அனைவரும் வாழ்த்தினார்கள்.



– மாவட்ட மையம், கிருஷ்ணகிரி

# திருப்பூர் மாவட்டம் தாராபுரம் வட்டக்கிளை மாதாந்திரக்கூட்டம்




தமிழ்நாடு ஓய்வூதியர் சங்க திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டக்கிளையின் மாதாந்திரக் கூட்டம் 08.06.2024 சனிக்கிழமை காலை 11.00 மணியளவில், தாராபுரம் அரசு அலுவலர் ஒன்றிய சங்க கட்டிடத்தில், வட்டக்கிளைத்தலைவர் திரு.சி.விஜயகுமார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு சிறப்பு பேச்சாளராக சங்கத்தின் முன்னோடி தலைவர் திரு.மா.செல்லமுத்து அவர்கள் முன்னிலை வகித்து சிறப்புரையாற்றினார். மாவட்ட சங்க நிர்வாகிகளான துணைத்தலைவர்கள் திருமதி.காளியாத்தாள், திருமதி.மங்கையர்கரசி, வட்டக்கிளை நிர்வாகிகள் திரு.ஜே.விஜயராகவன், திரு.பி.சுந்தரராஜன் மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1) தாராபுரம் வட்டக்கிளை முன்னாள் செயலாளர் திருமதி.கலாவதி அவர்களின் தாயார் கடந்த 09.05.2024 அன்று காலமானார். அவர்கள் மறைவுக்கு இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

2) மாநில சங்க கட்டிடம் கட்ட காலி மனையிடம் வாங்க தாராளமாக நிதி உதவி அளித்த தாராபுரம் வட்டக்கிளை உறுப்பினர்களுக்கு மனமார்ந்த நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

3) 2024ஆம் ஆண்டு புதிய உறுப்பினர்கள் மற்றும் புரவலர் சேர்க்கை அதிகப்படுத்த அனைத்து உறுப்பினர்களையும் கேட்டுக் கொள்வதென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

4) அங்கன்வாடி பணியாளர்களுக்கு மாத ஓய்வூதியமாக உயர்த்தி வழங்க நடவடிக்கை எடுக்குமாறு மாநில மையத்தை கேட்டுக் கொள்கிறது.

இந்த கூட்டத்தின் முடிவில் தாராபுரம் வட்டக்கிளை பொருளாளர் திரு.எம்.குப்புசாமி அவர்கள் நன்றி தெரிவிக்க கூட்டம் நிறைவுற்றது.

– சி.விஜயகுமார், தலைவர், தாராபுரம் வட்டக்கிளை

# பொது நூலகத்துறை திருநெல்வேலி மாவட்ட பொதுக்குழு கூட்டம்



திருநெல்வேலி மாவட்ட பொது நூலகத்துறை ஓய்வூதியர் சங்க பொதுக்குழுக் கூட்டம், பாளையங்கோட்டையில் உள்ள மாவட்ட மைய நூலக வளாகத்தில் 14.06.2024 வெள்ளிக்கிழமை அன்று தலைவர் திரு.சுப்பையா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இறை வணக்கம் பாடல் பாடப்பட்டதும், இணைச்செயலாளர் திரு.நல்லகண்ணு அவர்கள் அனைவரையும் வரவேற்றார். வரவு செலவு அறிக்கை வாசிக்கப்பட்டது. கூட்டத்தில், 85 வயது நிறைவு செய்த ஓய்வூதியர்களுக்கு பாராட்டு தெரிவித்து பொன்னாடை போர்த்தி கௌரவப்படுத்தப்பட்டனர். செயலாளர் திரு.ஏ.ஜான் இருதயராஜ் அவர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்தி உரையாற்றினார். இறுதியில், பொருளாளர் திரு.ஆறுமுகம் அவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1) 2021ஆம் ஆண்டு முதல் நிறுத்தி வைக்கப்பட்ட 21 மாத அகவிலைப்படியை வழங்க அரசை பணிந்து வேண்டுதல்.

2) தேர்தல் அறிக்கையின்படி 70 வயது முடிந்த ஓய்வூதியர்களுக்கு 10 சதவீதம் ஊதிய உயர்வு வழங்க அரசை வேண்டுவது.

3) ஓய்வூதியர் குடும்ப நல நிதியை ரூ.50,000/–த்திலிருந்து ரூ.2 லட்சமாக வழங்க அரசை வேண்டுவது. ஈமச்சடங்கிற்கு உடன் ரூ.25,000/– முன்பணம் வழங்க அரசை வேண்டுவது.

4) இன்சூரன்ஸ் திட்டத்தில் சிகிச்சை பெறும் ஓய்வூதியர்களுக்கு முழுச் செலவையும் ஏற்க அரசை வேண்டுவது.

5) மருத்துவப்படியை மாதம் ரூ.1000/– வழங்க அரசை வேண்டுவது.

6) 85 வயது முடிந்த ஓய்வூதியர்களுக்கு பாராட்டு தெரிவித்து பொன்னாடை அணிவித்தல்.

7) 03.05.2024 அன்று மறைந்த ஏ.சுடலையாண்டி அவர்களுக்கு இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

– ஏ.ஜான் இருதயராஜ், செயலாளர்,

# தருமபுரி மாவட்ட பணிநிறைவு பாராட்டு விழா





தமிழ்நாடு ஓய்வூதியர் சங்க தருமபுரி மாவட்டத்தின் சார்பில், பாலக்கோடு அரசு மாதிரிப் பள்ளியில் ஓவிய ஆசிரியராகப் பணியாற்றி **31,05,2024**ல் பணிநிறைவு பெற்ற திரு.எஸ்.வீரபத்திரன் அவர்களுக்கு பணிநிறைவு பாராட்டு விழா கௌரவ ஆலோசகர் திரு.எஸ்.சீனிவாசன் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச்செயலாளர் திரு.கே.ாவிந்தசாமி அவர்கள், விழாவிற்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்றார்.

மண்டலச்செயலாளர் திரு.எம்.இரத்தினவேலு மற்றும் மாவட்டத்தலைவர் திரு.ஆர்.என்.வரதன் ஆகியோர் பணிநிறைவு பெற்ற ஆசிரியர் திரு.எஸ். வீரபத்திரன் அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து நினைவுப் பரிசு வழங்கி கௌரவித்தனர். தருமபுரி மாவட்ட ஓய்வூதியர் சங்கம் சிறப்பாக செயல்பட நகரில் சங்கத்திற்கு இடவசதி செய்து கொடுத்து சங்கத்தின் அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் ஒத்துழைப்பு நல்கி மாவட்ட சங்க வளர்ச்சிக்கு பெரிதும் துணை நிற்கும் திரு.எஸ்.வீரபத்திரன் அவர்களை கலந்து கொண்ட அனைவரும் பாராட்டினர். மேலும் அவர் தம் பணிக்காலத்தில் பணியாற்றிய அனைத்து பள்ளிகளின் சுவர்களில் தலைவர்கள் படங்கள், இயற்கை காட்சிகள் வரைந்து பள்ளிகளுக்கு மெருகூட்டியவர். மாணவர்களுக்கு ஓவியக் கண்காட்சிகள் நடத்தி அவர்களின் திறமைகளை வெளிக்கொணர்ந்தவர். மாவட்ட கல்வித்துறையின் அனைத்துப் பணிகளிலும் ஆர்வமாக தன்னை ஈடுபடுத்திக் கொண்டு துறைக்கு பெருமை சேர்த்தவர். தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் மற்றும் பல தன்னார்வ குழுக்களில் இணைந்து சமுதாய முன்னேற்றத்திற்காக பணியாற்றி வருபவர்.

திரு.எஸ்.வீரபத்திரன் அவர்கள் எல்லா வளமும் பெற்று நல்ல உடல் நலத்துடன் பல்லாண்டு சமுதாயத் தொண்டாற்றிட வேண்டும் என வாழ்த்தினர். இந்நிகழ்ச்சியில் பணிநிறைவு பெற்ற முதன்மைக் கல்வி அலுவலர்கள், மாவட்டக் கல்வி அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியர்கள் திரளாக பலந்து கொண்டனர். முடிவில் மாவட்டப் பொருளாளர் திரு.வி.கிருஷ்ணன் நன்றி கூற விழா இனிதே நிறைவுற்றது.

| | | | |
|---|---|---|---|
| ஆர்.என்.வரதன் | கே.கோவிந்தசாமி | வி.கிருஷ்ணன் | எம்.இரத்தினவேலு |
| தலைவர் | செயலாளர் | பொருளாளர் | மண்டலச் செயலாளர் |

# இரங்கல் செய்தி



தமிழ்நாடு ஓய்வூதியர் சங்க வந்தவாசி வட்டக்கிளையின் உறுப்பினரும், புரவலரும், கோயம்புத்தூர் வேளாண்மைக் கல்லூரியில் துணைவேந்தராகவும் பணிபுரிந்து ஓய்வு பெற்ற மதிப்பிற்குரிய திரு.அக்ரி.முனைவர் ஏ.அப்துல் கரீம் அவர்கள், வயது முதிர்வின் காரணமாக, **20.06.2024** அன்று இயற்கை எய்தினார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு சங்கத்தின் சார்பாக ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

– அக்ரி.கோ.ஜெயபால், வேலூர்

பொது சுகாதாரத்துறையில், கிருஷ்ணகிரி மாவட்ட துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் அலுவலகத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றவரும், தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தில் நீண்டகாலமாக உறுப்பினராக இருந்தவரும், பணி ஓய்வுக்குப்பின், ஓய்வூதியர் சங்கத்தில் ஆயுள் உறுப்பினராகவும் இருந்து செயலாற்றி வந்த திரு.டி.தேவ சேனாதிபதி (வயது **82**) அவர்கள் உடல்நிலை சரியில்லாததால், திருவள்ளூரில் தமது இல்லத்தில் **11.03.2024** அன்று காலமானார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் பிரிவால் வாடும் குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் மறைவுக்கு ஓய்வு பெற்ற பொது சுகாதாரத்துறை அமைச்சுப் பணியாளர்கள் சங்கத்தின் சார்பாக, நிர்வாகிகள் நேரில் சென்று அவரது உடலுக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்கள்.

– ஓய்வு பெற்ற பொது சுகாதாரத்துறை அமைச்சுப் பணியாளர்கள் சங்கம், சென்னை

# தூத்துக்குடி மாவட்ட மாதாந்திரக்கூட்டம்



தூத்துக்குடி மாவட்ட ஓய்வூதியர் சங்கத்தின் மாதாந்திரக்கூட்டம் 11.05.2024 அன்று சி.எம். மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. மேற்படி கூட்டத்தில் சங்க நடவடிக்கைகள் குறித்து மாவட்ட அமைப்புச்செயலாளர் திரு.சி.ஆனந்தன், துணைத்தலைவர் திரு.கே.சண்முகவேல், மாவட்ட முன்னாள் செயலாளர் திரு.ஷெரீப், மாவட்ட துணைத்தலைவர் திரு.எம்.அந்தோணிசாமி, தணிக்கையாளர் திரு.க.லெட்சுமணன் ஆகியோர் உரையாற்றினர். மாநில செயற்குழு உறுப்பினர் திரு.முகமது சுல்தான் முகைதீன் சாகிப் அவர்கள் நன்றியுரையுடன் கூட்டம் நிறைவு பெற்றது. கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. நமது சங்க உறுப்பினரும், குடும்ப நலத்துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றவருமான திரு.பி.பிச்சைமணி அவர்கள் மறைவிற்கு இக்கூட்டம் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

2. சங்கத்திற்கு புதிய உறுப்பினர்களை சேர்க்க உறுப்பினர்கள் அனைவரும் முழு ஒத்துழைப்பு வழங்க இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

3. மாநில சங்க கட்டிடம் கட்டுவதற்கு இடம் வாங்குவதில் பெறும் முயற்சி செய்து அதை நிறைவு செய்த மாநிலத்தலைவர் அவர்களுக்கு இக்கூட்டம் தனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

– எம்.பிதேலிஸ் வல்தாரிஸ்,
மாவட்டத்தலைவர், தூத்துக்குடி

# அவிநாசி வட்டக்கிளையின் மாதாந்திர கூட்டம்





தமிழ்நாடு ஓய்வூதியர் சங்க அவிநாசி வட்டக்கிளையின் மாதாந்திரக் கூட்டம், 08.06.2024 சனிக்கிழமை காலை 10.30 மணியளவில் அவிநாசி சங்க அலுவலகத்தில் சிறப்பாக நடைபெற்றது. இக்கூட்டத்தில், பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1) 2024 ம் ஆண்டுக்கு புதிய உறுப்பினர்கள் மற்றும் புரவலர் சேர்க்கை எண்ணிக்கையை அதிகரிப்பதென தீர்மானிக்கப்பட்டது.

2).மாநில சங்க கட்டடம் கட்ட நிலம் 13.05.2024ல் கிரையம் செய்து சங்க வரலாற்றில் சாதனைபுரிந்த மாநிலத்தலைவர் உள்ளிட்ட மாநில நிர்வாகிகளுக்கு வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

3.) மாநில சங்க கட்டடம் கட்ட காலிமனையிடம் வாங்க தாராளமாக நிதி உதவி அளித்த அளித்த அவிநாசி வட்டக்கிளையை சேர்ந்த முப்பது உறுப்பினர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்து தீர்மானம். நிறைவேற்றப்பட்டது.

– அவிநாசி வட்டக்கிளை

# இரங்கல் செய்தி



திருப்பூர் மாவட்டம், அவிநாசி வட்டக்கிளை உறுப்பினரும், அவிநாசி ஒன்றியத்தில் அலுவலக உதவியாளராக பணியாற்றி ஓய்வு பெற்றவருமான திரு.ஏ.குமரேசன் அவர்கள், 14.06.2024 அன்று இயற்கை எய்தினார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

# திண்டுக்கல் மாவட்ட பொதுக்குழுக் கூட்டம்





தமிழ்நாடு ஓய்வூதியர் சங்க திண்டுக்கல் மாவட்ட பொதுக்குழு கூட்டம், 13.06.2024 அன்று தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய கட்டிட கூட்ட அரங்கத்தில் மாவட்டத்தலைவர் திரு.சி.தங்கப்பன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாவட்டத்தலைவர் திரு.சி.தங்கப்பன் அவர்கள் முன்னுரை நிகழ்த்தினார். மாவட்டச்செயலாளர் திரு.மு.ராமலிங்கம் வரவேற்புரை வழங்கி, சங்க நடவடிக்கை பற்றி அறிக்கை வாசித்தார். ஆத்தூர் திரு.ராமகிருட்டிணன் மற்றும் பழனி திருமதி.ப.நாகலட்சுமி அவர்களின் மறைவிற்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. மாவட்டப் பொருளாளர் திரு.தங்கவடிவேல் அவர்கள் வரவு செலவு அறிக்கை தாக்கல் செய்தார்.

திண்டுக்கல் திரு.கல்யாணசுந்தரம், திரு.சி.நாராயணசாமி, பழனி திரு.வீ.சொக்கலிங்கம், திரு.நா.கந்தசாமி, திண்டுக்கல் திரு.கு.கந்தசாமி, திரு.கே.சௌந்தரராஜன், திரு.பி.எஸ்.ராஜன், திருமதி.தி.சரவணபவானி, திருமதி. எஸ்.வசந்தாள், திருமதி.புஷ்பம் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். இக்கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1) திண்டுக்கல் மாவட்டத்திற்கு கட்டிட நிதி இலக்கு ரூ.1 லட்சம் நிர்ணயிக்கப்பட்டது. நாம் ரூ.1,20,000/– வழங்கியுள்ளோம். நிதி வழங்கிய அனைவருக்கும் மனமார்ந்த நன்றியினை இக்கூட்டத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டது. இதுவரை நிதி வழங்காதவர்கள் இம்மாத இறுதிக்குள் நிதி வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

2) மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களை, மாநில நிர்வாகிகள் நேரில் சந்தித்து, ஓய்வூதியர் கட்டிடம் கட்ட உதவி கோருமாறு மாநில சங்கத்திற்கு ஆலோசனை வழங்க தீர்மானிக்கப்பட்டது.

3) ஓய்வூதியர்கள் இறந்தால் வழங்கப்படும் ஒட்டுமொத்த தொகை ரூ.50,000/– காலதாமதமின்றி ஓய்வூதியர் குடும்பத்திற்கு வழங்க அரசினை கேட்டுக் கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

4) மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் மருத்துவ செலவுத்தொகை மீளப் பெறுவதில் ஏற்படும் சிரமங்களை மனதில் கொண்டு மருத்துவமனைகளில் இலவச சிகிச்சை வழங்க ஆணையிடுமாறு தமிழ்நாடு அரசினை கோருவது என தீர்மானிக்கப்பட்டது.

5) 70 வயது முடிவுற்ற ஓய்வூதியர்களுக்கு கூடுதல் ஓய்வூதியம் வழங்குமாறு தமிழ்நாடு அரசினை கோருவது என தீர்மானிக்கப்பட்டது.

6) மாவட்டப் பொதுக்குழு கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு தேநீர் வழங்கிய திரு.பி.எஸ்.ராஜன் அவர்களின் குடும்பத்தினருக்கு மாவட்ட சங்கத்தின் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

இறுதியாக மாவட்டப் பொருளாளர் திரு.தங்கவடிவேல் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவுற்றது.

| | | |
|---|---|---|
| தங்க வடிவேல்<br>மாவட்ட பொருளாளர் | மு.ராமலிங்கம்<br>மாவட்டச் செயலாளர் | சி.தங்கப்பன்<br>மாவட்டத்தலைவர் |

# இரங்கல் செய்தி



சென்னை மாவட்ட ஓய்வூதியர் சங்க உறுப்பினரும், கிண்டி கிங் நிலையத்தில் ஓவர்சீர் ஆக பணியாற்றி ஓய்வு பெற்றவருமான திரு.தண்டபாணி அவர்கள், 27.05.2024 அன்று இயற்கை எய்தினார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

– சென்னை மாவட்ட மையம்

# சீர்காழி வட்ட ஓய்வு பெற்ற அலுவலர்கள் சங்கக் கூட்டம்







சீர்காழி வட்ட ஓய்வு பெற்ற அலுவலர்கள் சங்கத்தின் வட்ட பேரவை கூட்டம் 01.06.2024 சனிக்கிழமை காலை 10 மணிக்கு சங்க அலுவலகத்தில் நடைபெற்றது. வட்டத்தலைவர் திரு.ஆர்.கல்யாணசுந்தரம் தலைமை தாங்கினார். தமிழ்த்தாய் வாழ்த்துக்கு பின், துணைத்தலைவர் திரு டி.ஆர். கலியபெருமாள் அனைவரையும் வரவேற்றார். செயலாளர் திரு. எஸ்.அன்பழகன் சென்ற கூட்ட அறிக்கையை வாசித்தார். திரு.என்.ரத்தினசபாபதி, திரு.எம்.மோகன்தாஸ் அறிவானந்தம், திரு.எம்.முத்தையன், திரு.ஜி. சுப்பிரமணியம், திரு.என்.அன்பழகன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

தலைவர் தமது உரையில், மஸ்டரிங் செய்யப்பட வேண்டிய அவசர, அவசியத்தை தெரியப் படுத்தினார். அனேகமாக மஸ்டரிங் செய்வதற்கான மாதம் தெரியாவிட்டால், தாங்கள் ஓய்வு பெற்ற அல்லது குடும்ப ஓய்வூதியராக இருந்தால், குடும்ப ஓய்வூதியம் முதன்முதலாக பெற்ற மாதம் அல்லது பென்ஷன் மஸ்டரிங் ஸ்டேட்டஸில் சென்று பார்த்து அதற்கு ஏற்ப மஸ்டரிங் செய்யப்பட வேண்டும் என்பதனை விபரமாக தெரிவித்தார். மேலும் நமது மாநில சங்கமான தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கம் தற்போது மாநில சங்கத்திற்காக இடம் வாங்கி இருப்பதனை விரிவாக எடுத்து கூறினார். இம்மாத கூட்டத்தில் ஐந்து புதிய உறுப்பினர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.

இன்றைய கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் காலை தேநீர், மதியம் விருந்து அளித்த திரு எம் முத்தையன், தண்ணீர் பந்தல் திரு.ஏ.சம்பந்தம், தியாகராஜன் நகர், திரு ஆர்.நடராஜன் வி.என்.பி. நகர், திரு.சி.ஜெயராமன், பாதரக்குடி ஆகியோருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன. முடிவில், இணைச் செயலாளர் திரு.ஏ.முருகையன் நன்றி கூற, தேசிய கீத நிகழ்வுக்கு பின் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

– ஆர். கல்யாணசுந்தரம், தலைவர்.

---

# தருமபுரி மாவட்ட பணிநிறைவு பாராட்டு விழா

தருமபுரி மாவட்ட ஓய்வூதியர் சங்கத்தின் பணிநிறைவு பெற்ற தொழிற்கல்வி ஆசிரியர் திரு.ஏ.என்.சுப்பிரமணியன் அவர்களின் பணிநிறைவு பாராட்டு விழாவில், மாவட்ட பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு பொன்னாடை அணிவித்து பாராட்டி வாழ்த்தினார்கள். திரு.ஏ.என்.சுப்பிரமணியன் அவர்கள் தன் பணிக்காலத்திலேயே நம் சங்கத்தின் வளர்ச்சிக்கு மிகவும் உறுதுணையாக இருந்து ஒத்துழைப்பு நல்கி வந்தார். பணிநிறைவுக்குப்பின் நம் சங்கத்தின் முழுநேர உறுப்பினராக இணைந்து செயல்பட உள்ளார். அவரை நம் ஓய்வூதியர் சங்கம் வரவேற்று வாழ்த்துகிறது.

| | |
|---|---|
| ஆர்.என்.வரதன்<br>தலைவர் | கே.கோவிந்தசாமி<br>செயலாளர் |
| வி.கிருஷ்ணன்<br>பொருளாளர் | எம்.இரத்தினவேலு<br>மண்டலச் செயலாளர் |






# வேலூர் மாவட்ட மாதாந்திர கூட்டம்











வேலூர் மாவட்ட மையத்தின் மாதாந்திர கூட்டம் **08.06.2024** அன்று விருபாட்சிபுரம் வள்ளலார் மண்டபத்தில் மாவட்டத்தலைவர் பொன் திருவெங்கடேசுவரன் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் ரமேஷ்குமார் வரவேற்புரை ஆற்றினார். தலைமை நிலையச் செயலாளர் சுப்பிரமணியன் சென்ற மாத நிகழ்வுகளை வாசித்தார். மாவட்ட பொருளாளர் மோகன்தாஸ் மே 2024 வரையிலான வரவு செலவு விபரங்களை வாசித்து ஒப்புதல் பெற்றார்.

தலைவர் தனது தலைமை உரையில், சிஎம்சி மருத்துவமனை விவகாரம், மஸ்டரிங், கம்யுடேசன் ஆகியவற்றின் கள நிலவர விபரங்களை தெரிவித்தார். தொடர்ந்து காட்பாடி தலைவர் மாணிக்கவாசகம், குடியாத்தம் செயலர் மலர்வேணி, அணைகட்டு பொருளாளர் பொன்முடி, காட்பாடி ஆலோசகர் வீரபத்திரன், மாவட்ட நிர்வாகிகளான துணைத்தலைவர்கள் அரிகிருஷ்ணன், பாண்டுரங்கன், மகளிர் அணிச்செயலாளர் லட்சுமி ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

மாநில மண்டல செயலாளர் சேகர், மாநில பிரச்சாரசெயலாளர் கருணாநிதி, மாவட்ட கௌரவ ஆலோசகர் அக்ரி. ஜெயக்குமார் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். இந்த மாதம் பிறந்த மாவட்ட தலைவர், தலைமை நிலையச் செயலாளர் உள்ளிட்ட அனைவருக்கும் பிறந்த நாள் கேக் வெட்டும் விழாவினை பிரச்சார செயலாளர் அமல்ராஜ் சிறப்பாக செய்தார். கூட்டத்தில் நிர்வாகிகள் கிருஷ்ணன், குணசேகர், முருகேசன், ராமானுஜலு, மலர்க்கொடி, உஷா, சுதா,ரெஜினா, ஈஸ்வரி, முனிலட்சுமி, காட்பாடி திருநாவுக்கரசு, சந்திரசேகரன், குடியாத்தம் முருகேசன், மற்றும் கணக்கு அலுவலர் மஸ்ஹர், BDO குணசேகர், Dr.ஜனார்த்தனன் (சித்தா) ICDS பணியாளர்கள் என **50–க்கும்** மேற்பட்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இறுதியாக துணைத்தலைவர் கலியபெருமாள் நன்றி கூறிட, தேசிய கீதம் பாடி கூட்டம் நிறைவுற்றது. கலந்து கொண்ட அனைவருக்கும் மகளிரணி அமைப்பாளர் A.மலர்க்கொடி VHN உணவு வழங்கினார்.

– பொன்.திருவெங்கடேசுவரன், மாவட்டத்தலைவர், வேலூர்

---

# பாராட்டுக்கள்...!

தமிழ்நாடு ஓய்வூதியர் சங்க விழுப்புரம் மாவட்ட மூத்த உறுப்பினரும், பொதுப்பணித் துறையில் கண்காணிப்பாளராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றவருமான திரு.மாசிலா பாண்டிய சங்கர் அவர்கள், மதுரையில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான யோகாசனப் போட்டியில் பங்கேற்று கின்னஸ் சாதனை நிகழ்த்தியுள்ளார் என்பதை மகிழ்ச்சியுடனும், பெருமையுடனும் தெரிவித்துக் கொள்கிறோம்.

– அ.குருசேகரன், மாவட்டச்செயலாளர், விழுப்புரம்

# அணைக்கட்டு வட்டக்கிளையின் மாதாந்திரக் கூட்டம்













தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கம், வேலூர் மாவட்டம், அணைக்கட்டு வட்டக்கிளையின் மாதாந்திர கூட்டம் 22.06.2024, சனிக்கிழமை அன்று கிளைத்தலைவர் மாணிக்கம் அவர்கள் தலைமையில் தமிழ்த்தாய் வாழ்த்துடன் துவங்கியது. வட்டக்கிளை துணைத்தலைவர் தங்கவேலு ஆசிரியர் (ஓய்வு) வரவேற்புரையாற்றினார். செயலாளர் கதிர்வேலு அவர்கள் சென்ற மாத நிகழ்வுகளை வாசித்து ஒப்புதல் பெற்றார். இராணிப்பேட்டை IVPM முன்னாள் தலைவரும், நமது சங்க முன்னணி உறுப்பினருமான மதியழகன், மாநில பிரச்சார செயலாளர் கருணாநிதி ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

மாவட்டத்தலைவர் பொன்.திருவெங்கடேசுவரன் சிறப்புரை ஆற்றினார். முன்னதாக கள்ளக்குறிச்சியில் விஷ சாராயத்தால் உயிரிழந்தவர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. கூட்டத்தில், மாவட்ட மகளிரணி செயலாளர் வனிதா, காட்பாடி வட்டக்கிளை துணைத்தலைவர் திருநாவுக்கரசு, மகளிரணி ஹெலன், வட்டக்கிளை நிர்வாகிகள் ஏகாம்பரம், ராதாகிருஷ்ணன் உள்ளிட்டு பலர் கலந்து கொண்டனர். திரு சங்கரன், BHS தனது 85வது பிறந்தநாளை முன்னிட்டு, அனைவருக்கும் இனிப்பு வழங்கினார். வட்டக்கிளை சார்பாக அவருக்கு பொன்னாடை அணிவித்து வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

நிர்வாகிகள் 3 பேர் ஓய்வூதிய நண்பன் இதழுக்கு புரவலராகவும், இருவர் ஆண்டு சந்தாவும் செலுத்தி உறுப்பினராயினர். திரு குப்புசாமி ஆசிரியர் அவர்கள் இரண்டாவது தவணையாக ரூ.3000/– கட்டிட நிதி வழங்கினார். இதனையும் சேர்த்து இதுவரை அவர் வழங்கியது ரூ.5000/– ஆகும். தனது இலக்கு தொகை ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம்) எனவும் மீதத்தொகை ரூ.5000/– விரைவில் வழங்க உள்ளதாகவும் உறுதியளித்தார். இறுதியாக வட்டக்கிளை பொருளாளர் பொன்முடி அவர்கள் நன்றி கூற, கூட்டம் நிறைவுற்றது. அனைவருக்கும் சங்க சார்பாக மதிய உணவு வழங்கப்பட்டது.

– பொன்.திருவெங்கடேசுவரன்,
மாவட்டத்தலைவர், வேலூர்

# சென்னையில் மஸ்டரிங் பணி



தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கத்தின் உறுப்பினரும், சென்னை மருத்துவக் கல்லூரியில் நரம்பியல் துறையில், பேராசிரியர் மற்றும் துறைத்தலைவராக பணியாற்றி ஓய்வு பெற்ற மருத்துவர் திரு.சி.யூ.வேல்முருகேந்திரன் அவர்களின் இல்லத்திற்கு சென்று வாழ்நாள் சான்று வழங்கும் பணி தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கத்தின் சார்பில், சென்னை மாவட்டத் துணைத்தலைவர் திரு.தி.சேதுராமன் அவர்களால் மேற்கொள்ளப்பட்டது.

# தென்காசி மாவட்ட ஓய்வூதியர் சங்க மாதாந்திர கூட்டம்












தென்காசி மாவட்டத்தின் மாதாந்திரக் கூட்டம் மாவட்டத்தலைவர் எஸ்.சந்திரன் தலைமையில், 15.06.2024 சனிக்கிழமை அன்று காலை 10 மணி அளவில், என்.ஜி.ஓ.இல்லத்தில் நடைபெற்றது. மத்திய செயற்குழு உறுப்பினர் திரு.வெ.ராமசுப்பிரமணியன் முன்னிலை வகித்தார். மாவட்டத்தலைவர் வரவேற்புரை ஆற்ற, துணைத்தலைவர்கள் திரு.ஹரிஹர சுப்பிரமணியன், திரு.முகமது மைதீன், மாவட்ட செயலாளர் திரு.முருகு பாண்டியன், அமைப்புச்செயலாளர் திரு.தாசையா ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். முடிவில், உறுப்பினர் திரு.கே.சங்கரன் நன்றி கூறினார். அனைவருக்கும் தேநீர் வழங்கப்பட்டது. கூட்டத்தில், ஜூலை மாதம் பிறந்த ஏழு உறுப்பினர்களுக்கும் பிறந்தநாள் வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. கூட்டத்தில், கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

1) முன்னாள் திருநெல்வேலி மாவட்டத்தலைவர் திரு.விசுவாசம் அவர்களுக்கு 83வது அகவை பிறந்த நாள் வாழ்த்து தென்காசி மாவட்டத்தின் சார்பாக தெரிவிக்கப்பட்டது.

2) ஓய்வூதியர் சங்க மாநில மைய சங்க கட்டிடத்திற்கான மனையினை 13.05.2024ல் பத்திரப்பதிவு செய்ததற்கு பாராட்டி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

3) கமுட்டேஷன் தொகை பிடித்த காலத்தினை 12 ஆண்டுகளாக குறைத்து ஹரியானா மற்றும் தெலுங்கானா மாநில அரசுகள் உத்தரவிட்டதை போன்று தமிழ்நாடு அரசும் உத்தரவிட தீவிர நடவடிக்கை எடுக்க மாநில சங்கத்தினை வலியுறுத்தி கேட்டுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

4) தற்போது திருநெல்வேலியிலிருந்து பெங்களூருக்கு கோவில்பட்டி, சாத்தூர் வழியாக இயக்கப்படும் ரயிலினை தென்காசி வழியாக இயக்க தென்னக ரயில்வே நிர்வாகத்தினை கேட்டுக் கொள்வதென ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

– எஸ்.சந்திரன், மாவட்டத்தலைவர், தென்காசி

# வாழ்த்துகிறோம்





ஓய்வூதியர் சங்க செங்கல்பட்டு மாவட்ட துணைத்தலைவரும், வட்டக்கிளை தலைவருமான திரு.ஏ.இராமசாமி, சுகாதார ஆய்வாளரும், திருமதி.எம். தேன்மொழி, குறுவட்ட நிலஅளவருமான தம்பதியரின் 46ஆம் ஆண்டு திருமண நாள் 16.06.2024 அன்று சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், மாநிலத்தலைவர் திரு.கோ.சீதாராமன் அவர்களின் தலைமையில், மாநில நிர்வாகிகள் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட, வட்டக்கிளை நிர்வாகிகள், துணைத்தலைவர் திரு.ஏ.தணிகைபதி அவர்களுடன் சேர்ந்து அனைவரும் தம்பதியினரை வாழ்க வளமுடன், பல்லாண்டு வாழ்க என வாழ்த்தினர்.

– ஆர்.இராமசாமி, தலைவர், செங்கல்பட்டு கிளை

# திருநெல்வேலி மாவட்ட மாதாந்திர பொதுக்குழு கூட்டம்








திருநெல்வேலி மாவட்ட மாதாந்திர பொதுக்குழு கூட்டம் 08.06.2024 அன்று தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் திரு.வி.விசுவாசம் கூட்டரங்கில் திரு.பே.சங்கரபாண்டியன் தலைமையில் மாநில துணைத் தலைவர் திரு.சாமி.நல்லபெருமாள் மற்றும் மாவட்ட துணைத் தலைவர் திரு.இரா.சீத்தாராமன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. மேற்படி கூட்டத்தில் உலகளாவிய தொழில் சங்கம் (PUBLIC SERVICE INTERNATIONAL) நடத்திய தூய்மைப்பணியாளர்களுக்கு கௌரவமான பணி வழங்கிடவும், கன்னியமாக நடத்திடவும் கோரும் தெற்காசிய அளவிலான கருத்தரங்கம் ஸ்ரீலங்கா தலைநகர் கொழும்பில் ஜுன் 1 மற்றும் 2 ம் தேதிகளில் நடைபெற்றது.

மேற்கண்ட கருத்தரங்கத்தில் இந்திய அளவிலான பிரதிநிதியாக தமிழ்நாடு நகராட்சி மற்றும் மாநகராட்சி அனைத்து அலுவலர் சங்கங்களின் கூட்டமைப்பின் மாநில பொதுச் செயலாளரும், அகில இந்திய அமைப்பான தேசிய அரசு அலுவலர் கூட்டமைப்பின் (National Organisation of Government Employees) அகில இந்திய துணைத் தலைவருமான நமது சங்கத்தின் மாவட்ட துணைத் தலைவர் திரு.இரா. சீத்தாராமன் அவர்கள் கலந்து கொண்டார்கள். இலங்கை சென்று திரும்பிய நமது மாவட்ட துணைத் தலைவர் திரு.இரா.சீத்தாராமன் அவர்களை பாராட்டி வாழ்த்துக்கள் தெரிவித்து மாவட்ட மையத்தின் சார்பாக மாநில துணைத் தலைவர் திரு.சாமி. நல்லபெருமாள், மாவட்ட பிரச்சார செயலாளர் திரு.பா.மாரிக்கண்ணு, மகளிரணி மண்டல செயலாளர் திருமதி.வே.தேவிகா ஆகியோர் சால்வை அணிவித்தார்கள். மேலும் கூட்டத்தில் ஓய்வூதியர் நண்பன் இதழுக்கு புரவலர்களை அதிக அளவில் சேர்க்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

– திருநெல்வேலி மாவட்ட மையம்

# இரங்கல் செய்தி



ஓய்வூதியர் சங்க தருமபுரி மாவட்ட மதிப்புமிகு புரவலரும், பணிநிறைவு பெற்ற உதவி காவல் கண்காணிப்பாளருமான திரு.கே.ராதாகிருஷ்ணன் மற்றும் எங்கள் நண்பர் கல்வித்துறை உதவி திட்ட அலுவலர் திரு.கே.சம்பத்குமார் ஆகியோரின் அன்புத்தாயார் திருமதி. கே.நாகம்மாள் அவர்கள் 18.06.2024ல் தனது 93வது வயதில் இயற்கை எய்தினார். அம்மையாரின் இறுதிச்சடங்கில், மண்டலச்செயலாளர் திரு.எம்.இரத்தினவேலு, மாவட்டத்தலைவர் திரு.ஆர்.என். வரதன், செயலாளர் திரு.கே.கோவிந்தசாமி, பணி நிறைவு பெற்ற மாவட்ட கல்வி அலுவலர்கள் திரு.எம்.பொன்முடி, திரு.அன்பழகன், தலைமையாசிரியர்கள் திரு.சி.கருணாகரன், திரு.அல்லிமுத்து, திரு.எஸ்.ஏ.தியாகராஜன் மற்றும் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். அம்மையாரை இழந்து வாடும் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

– ஆர்.என்.வரதன், தலைவர், தருமபுரி மாவட்டம்



ஓய்வூதியர் சங்க கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வட்டக்கிளையின்பால் அதிதீவிர பற்றாளரும், புரவலரும், கூட்டுறவு சார்பதிவாளராக பணிநிறைவு பெற்றவருமாகிய திரு.இரா.சக்கரவர்த்தி அவர்களின் தாயார் திருமதி.இரா. லோகாம்மாள் அவர்கள் உடல்நலக் குறைவால் 28.04.2024 அன்று தமது இல்லத்தில் இயற்கை எய்தினார். அன்னாரின் மறைவுக்கு விருத்தாசலம் வட்டக்கிளை சார்பில் ஆழ்ந்த இரங்கலை தெரிவிப்பதுடன், அன்னாரை இழந்து வாடும் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்து இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

– ந.பாண்டியன், மாவட்டத்தலைவர், கடலூர்

# அரியலூர் மாவட்ட மாதாந்திரக்கூட்டம்

தமிழ்நாடு ஓய்வூதியர் சங்க அரியலூர் மாவட்டத்தின் மாதாந்திரக்கூட்டம் 11.05.2024 அன்று மாவட்டத்தலைவர் திரு.எம்.வி.மருதமுத்து அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைவர் மாநில மைய கட்டிட நிதிக்கு நன்கொடை அளிப்பது குறித்து விரிவாக உரையாற்றினார். துணைத்தலைவர் திருமதி.டி.புஷ்பாஞ்சலி முன்னிலை வகித்து சிறப்புரையாற்றினார். மாவட்ட அமைப்புச் செயலாளர் திரு.கனகசபை அவர்கள் கூட்டத்திற்கு வருகை புரிந்த அனைவரையும் வரவேற்று உரையாற்றினார். பின்னர் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1) மாநில சங்க கட்டிட நன்கொடை தொடர்பாக மாநில சங்க கடிதத்தில் கேட்டுக் கொண்டபடி அரியலூர் மாவட்டம் சார்பாக இயன்ற அளவு உதவிட உறுப்பினர்களை கேட்டுக் கொள்ளப்பட்டது.

2) மே 2024 மாதத்தில் பிறந்த நாள் காணும் திரு.ஆர். இராஜேந்திரன், திரு.எஸ்.மணி, திரு.திருவேங்கடம், திரு.பச்சைமுத்து, திரு.கே.சுப்பிரமணியன், திரு.கே. அரங்கநாதன் மற்றும் அன்பழகன் ஆகியோருக்கு நிர்வாகிகள் வாழ்த்து தெரிவித்து சிறப்புரையாற்றினர்.

3) கருவூலத்தில் வாழ்நாள் சான்று இதுவரை அளிக்காதவர்கள் உடன் பான்கார்டு விவரத்துடன் கொண்டு செல்ல தெரிவிக்கப்பட்டது.

4) விரைவில் மாவட்டத்தின் சார்பாக மாவட்ட ஆட்சியர், உயர் அதிகாரிகள் மற்றும் கருவூல அலுவலர் ஆகியோரை சந்திப்பதென முடிவு எடுக்கப்பட்டது.

5) தமிழக அரசு, அரசு ஊழியர் மற்றும் ஓய்வூதியர்களிடமிருந்து தற்போது காப்பீடு (NHIS) ரூ.497/– பிடித்தம் செய்வதை ரத்து செய்திட மாநில சங்கத்தின் சார்பாக, மாநில அரசை மாவட்ட சங்கம் கேட்டுக் கொள்கிறது.

மேலும், சங்கத்திற்கு நிதி அளித்த கீழ்கண்ட உறுப்பினர்களுக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

| பெயர் | ஓய்வூதிய நண்பன் | கட்டிட நிதி |
|---|---|---|
| திருமதி.டி.புஞ்பாஞ்சலி | ஏற்கனவே உறுப்பினர் | ரூ.1000/– |
| எம்.வி.மருதமுத்து | ரூ.500/– | ரூ.500/– |
| கு.மங்கையர்க்கரசி | ரூ.500/– | ரூ.500/– |
| எம்.கனகசபை | ரூ.500/– | ரூ.500/– |

இன்றைய கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு தேநீர் உட்பட செலவிற்கான ரூ.500/– ஐ துணைத்தலைவர் திருமதி.டி.புஷ்பாஞ்சலி அவர்கள் நன்கொடையாக அளித்ததற்கு நன்றி தெரிவிக்கப்படுகிறது. மேலும் ஆயுள் சந்தாவாக ரூ.1000/– அளித்தார் என்பதும் தெரிவிக்கப்படுகிறது. கூட்ட முடிவில், துணைத்தலைவர் திரு.ஜி.கோபால் நன்றி கூற கூட்டம் நிறைவுற்றது.

– எம்.வி.மருதமுத்து, மாவட்டத்தலைவர், அரியலூர்

# இரங்கல் செய்தி



வேலூர் தமிழ்நாடு நில அளவைத் துறை ஓய்வுபெற்ற அலுவலர்கள் சங்கத்தின் மாநில பொதுச்செயலாளர் மற்றும் ஓய்வு பெற்ற உதவி இயக்குனர் திரு.கே.ஜி.துளசிரங்கன் அவர்களின் தாயார் திருமதி.க.ரங்கநாயகி அம்மாள் (வயது.85) அவர்கள் உடல் நலிவுற்று கடந்த 09.06.2024 அன்று இயற்கை எய்தினார்.

அன்னாரது மறைவிற்கு தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கத்தின் சார்பில் இரங்கல் தெரிவித்து தமிழ்நாடு ஓய்வூதியர் சங்க வேலூர் மாவட்ட செயலாளர் திரு.வெ. இரமேஷ்குமார் நில அளவைத் துறை கூடுதல் இயக்குனர் திரு.அ.கண்ணபிரான் சென்னை மண்டல துணை இயக்குனர் திரு.வ..சரவணன் ஓய்வு பெற்ற மண்டல துணை இயக்குனர் திரு.செ.இராமச்சந்திரன் கோவை ஓய்வு பெற்ற மண்டல துணை இயக்குனர் திரு. எம்.ஆர்.குமரவேல், ஓய்வு பெற்ற சேலம் உதவி இயக்குனர் திரு.கே. எஸ்.சிவகுமார் வேலூர் மாவட்ட உதவி இயக்குனர் திரு.ராஜ்கணேஷ் ஆய்வாளர் திரு.மோகன்ராஜ், தமிழ்நாடு நில அளவைத் துறை ஓய்வு பெற்ற அலுவலர்கள் சங்க மாநிலத் தலைவர் அரிமா. திரு.த.சேகர், மாநிலப் பொருளாளர் திரு.க.இராஜகோபால், மாநில அமைப்பு செயலாளர் திரு.ராமானுஜலு, மாநில துணை பொதுச் செயலாளர் திரு.ப.வெங்கடேசன், மாநில துணைத்தலைவர் திரு.கோ.எழில்மாறன், தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய வேலூர் மாவட்டத் தலைவர் திரு.கோ.அருணகிரிநாதன், வேலூர் மாவட்ட ஓய்வூதியர் சங்க ஆலோசகர் எஸ்.ராமநாதன், காட்பாடி வட்டக் கிளை தலைவர் மாணிக்கவாசகம், மேனாள் தலைவர் வீரபத்ரன் ஆகியோர் அம்மையாரின் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர். தாயாரை பிரிந்து வாடும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

திரு.வெ.இரமேஷ்குமார் செயலாளர் வேலூர்

# வேலூர் மாவட்டச் செய்திகள்

**04.05.2024 : 2024–27க்கு** தேர்வு செய்யப்பட்ட புதிய நிர்வாகிகள் கூட்டம் நடைபெற்றது. புதிய நிர்வாகிகள் அனைவருக்கும் மூத்த நிர்வாகி திரு.ஜி.ஏ.பாண்டுரங்கன் அவர்கள் சங்கத்தின் சார்பில், பொன்னாடை போர்த்தி வாழ்த்து தெரிவித்தார்.

**11.05.2024 :** மாதாந்திரக்கூட்டம் வழக்கப்படி **2**வது சனிக்கிழமை மாவட்டத்தலைவர் பொன். திருவெங்கடேசுவரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச்செயலாளர் திரு.வி.ரமேஷ்குமார் வரவேற்புரையாற்றினார். சி.சுப்பிரமணியன் அவர்கள் அறிக்கை வாசித்தார். பொருளாளர் திரு.கே.மோகன்தாஸ் நிதிநிலை அறிக்கை வாசித்தார். இக்கூட்டத்தில், சென்னை சக்ரா கிரிட்டிக்கல் கேர் சென்டர் மருத்துவமனை நிர்வாகிகள் கலந்து கொண்டு மருத்துவமனையில் கிடைக்கும் வசதிகளை தெரிவித்தார். அரசு அலுவலர் ஒன்றிய முன்னாள் தலைவர் திரு.பி.தினமணி மற்றும் மாவட்ட நிர்வாகிகள் கருத்துரை வழங்கினர். கௌரவ ஆலோசகர் திரு.எஸ்.இராமநாதன், திரு.கோ.ஜெயக்குமார், மாநில துணைத்தலைவர் திரு.கே.விஸ்வநாதன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இறுதியாக மாவட்ட துணைத்தலைவர் திரு.அரிகிருஷ்ணன் நன்றி கூற கூட்டம் நிறைவுற்றது.

**20.05.2024:** அணைக்கட்டு வட்டார கல்வித்துறை அலுவலகத்திற்குச் சென்று, மத்திய செயற்குழு உறுப்பினர் திரு.தங்கவேலு, தலைமையாசிரியர் அவர்களின் ஊதிய நிர்ணயம் குறித்து பேசப்பட்டது. மாவட்டத்தலைவர் திரு.பொன்.திருவெங்கடேசுவரன், மாவட்டச்செயலாளர் திரு.வி.ரமேஷ் குமார், தலைமை நிலையச் செயலாளர் திரு.சி.சுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**25.05.2024 :** அணைக்கட்டு வட்டக்கிளையின் மாதாந்திரக் கூட்டம் தலைவர் திரு.டி.மாணிக்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு.இராதாகிருஷ்ணன், ஆசிரியர் வரவேற்றார். சென்ற மாத நிகழ்வு அறிக்கையினை செயலாளர் திரு.கதிர்வேலு வாசித்தார். காட்பாடி ஆலோசகர் திரு.எம். வீரபத்திரன், திரு.திருநாவுக்கரசு, திரு.தனஞ்செயன், திரு.தங்கவேலு, ஆசிரியர் ஆகியோர் கருத்துரை வழங்கினர். மாவட்டத்தலைவர் திரு.பொன்.திருவெங்கடேசுவரன் சிறப்புரையாற்றினார். முடிவில், வட்டக் கிளை துணைத்தலைவர் நன்றி கூற கூட்டம் நிறைவுற்றது. அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டது.

– பொன்.திருவெங்கடேசுவரன், மாவட்டத்தலைவர், வேலூர்

# பாராட்டுக் கடிதம்

மதிப்பிற்குரிய நண்பர் – மாநிலத்தலைவர் திருமிகு சீதாராமன் அவர்கட்கு, **01.06.2024**ல் **75**வது பிறந்த நாள் கண்ட தாங்கள் இன்னும் பல்லாண்டு பல சிறப்பும் பெற்று, நலமோடு வாழ வாழ்த்துகிறேன். தங்களது சங்கப்பணி மிக சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தொடர்ந்து நடைபெற தங்களை ஊக்கப்படுத்த லட்சக்கணக்கான, என்போன்ற ஓய்வு பெற்றவர்கள் காத்திருக்கறோம். ஓய்வூதியர் சமுதாயத்திறகு கிடைத்த மாபெரும் கருவூலம் தாங்கள் – வாழ்க ! வளர்க.

நமது சங்கத்திற்கு வண்டலூரில் **1273** சதுர அடி கொண்ட காலிமனையை **13.05.2024**ம் தேதி பதிவு செய்யப்பட்டுள்ள செய்தியைக் கண்டு பெருமகிழ்ச்சியடைந்தேன். விரைவில் கட்டிடம் கட்டுவதற்கான பணியினை மேற்கொள்ள நமது சங்க உறுப்பினர்கள் அனைவரும் ஆதரவளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

நமக்கெல்லாம் சங்க உணர்வை ஊட்டிய மதிப்புமிகு முன்னாள் மாநிலத்தலைவர் சிவ.இளங்கோ அவர்களையும், ஓய்வூதியர் சங்கத்தை ஆரம்பித்து சிறப்பாக நடத்தி ஒரு சரியான நிர்வாகியாகிய தங்களிடம் ஒப்படைத்துச் சென்ற அருமை நண்பர் காதர்மீரான் அவர்களையும் இந்த நேரத்தில் எண்ணிப் பார்த்து நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளேன்.

தமிழ்நாடு ஓய்வூதியர் நண்பன் திங்களிதழ் சிறப்பான செய்திகளைத் தருவதோடு, தமிழ்நாடு முழுவதையும் படம் பிடித்துக் காட்டுகிறது. மாத இதழ் நடத்தும் நிர்வாகிகட்கு எனது வாழ்த்துக்கள்.

கோரிக்கைகளை வென்றெடுக்க அனைவரும் ஒற்றுமை உணர்வுடன் – மாநிலத்தலைவருக்குப் பின்னால் நிற்போம் – வாருங்கள் – சேருங்கள். வெற்றி பெறுவோம்.

என்றும் அன்புடன் கவிஞர் கா.கருப்பையா, பி.ஏ.,

மேனாள் மாநில துணைத்தலைவர் தமிழ்நாடு
அரசு அலுவலர் ஒன்றியம் சென்னை

# இரங்கல் செய்தி



மருத்துவத் துறையில், சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் டீன் ஆக பணிபுரிந்து ஓய்வு பெற்றவரும், தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கத்தின் புரவலருமாகிய டாக்டர் எச்.பிரமிளா, M.D.,DCH, DHE., அவர்கள், **21.06.2024** அன்று இயற்கை எய்தினார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு சங்கத்தின் சார்பாக ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

– மாநில மையம்

# தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கம், தேனி மாவட்டம்

<u>தேனி மாவட்டத்தலைவரின் நடவடிக்கைகள்</u>
முன்னிலை: திரு.ச.சுப்பிரமணியன்

பொருள் : தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கம், அமைப்புச்செயலாளர் தேர்தல் – புதிய அமைப்புச் செயலாளர் நியமனம் செய்து ஆணை வழங்குதல்.

பார்வை : 1) தேனி மாவட்ட பொதுக்குழு தீர்மானம், நாள்.17.02.2022

2) திரு.வி.பவானந்தன் அவர்களின் விண்ணப்பம் நாள்.

<u>ஆணை :</u>

தேனி மாவட்டம், மாவட்ட பொதுக்குழுக் கூட்டம், 12.04.2023 புதன்கிழமை அன்று வீரபாண்டி ஸ்ரீஅன்னை காமாட்சி அம்மன் மக்கள் மன்றத்தில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் கடந்த 10.12.2022 அன்று வயோதிக நிலையில் இயற்கை எய்திய மேனாள் மாவட்ட அமைப்புச்செயலாளர் திருமிகு.கே.எம்.பி.ஜலாலுதீன் அவர்கள் வகித்து வந்த அமைப்புச் செயலாளர் பதவி காலியான நிலையில், அந்தப் பதவிக்கு தகுதியான ஒருவரைத் தேர்வு செய்து நியமனம் செய்திட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதன்படி மாவட்ட அமைப்புச் செயலாளராக செயல்பட இசைவு தெரிவித்து திரு.வி.பவானந்தன் அவர்கள் அளித்துள்ள விண்ணப்பத்தினை ஏற்பு செய்து அவரை நியமனம் செய்து ஆணை வழங்கப்படுகிறது.




| பெயர் மற்றும் முகவரி | நியமிக்கப்படும் பதவி |
|---|---|
| திரு.வி.பவானந்தன்<br>வட்டார சுகாதார மேற்பார்வையாளர்<br>15/1–03/5, ஷலோம் இல்லம்,<br>அண்ணாமலை நகர், தாமரைக்குளம்–அஞ்சல்<br>பெரியகுளம்–வட்டம் தேனி மாவட்டம் – 625 605<br>செல்: 63804 69387 | மாவட்ட அமைப்புச்செயலாளர் |

நியமனம் செய்யப்பட்ட புதிய அமைப்புச்செயலாளர் 2024 முதல் 2025 முடிய இரண்டு ஆண்டுகள் வரை அல்லது அடுத்த தேர்தல் நடைபெறும் வரை பதவி வகிப்பார்.


ச.சுப்பிரமணியன் மாவட்டத்தலைவர், தேனி மாவட்டம்

## இரங்கல் செய்தி



தமிழ்நாடு ஓய்வூதியர் சங்க திண்டுக்கல் மாவட்ட உறுப்பினரும், ஆத்தூர் வட்டக்கிளை தலைவரும், 1/75, மேற்குத்தெரு, அக்கரைப்பட்டியில் குடியிருந்தவரும், திரு.ஏ.இராமகிருஷ்ணன் (வயது 75) அவர்கள், வயது முதிர்வின் காரணமாக, உடல்நிலை சரியில்லாமல் தனது இல்லத்தில் 27.05.2024 அன்று இயற்கை எய்தினார் என்ற செய்தியினை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். ஓய்வூதியர் சங்கத்தின்பால் மிக மிக விசுவாசியாக உள்ளவர். அவர் இறந்த செய்தி கேட்டு, மாநில செயற்குழு உறுப்பினர் திரு.ஏ.ஜெகராஜன் அவரது இல்லத்திற்குச் சென்று அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார். அவரை பிரிந்து வாடும் குடும்பத்தினருக்கு திண்டுக்கல் மாவட்ட ஓய்வூதியர் சங்கத்தின் சார்பாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி பிரார்த்தனை செய்கிறோம். – சி.தங்கப்பன், தலைவர், திண்டுக்கல் மாவட்டம்

---



ஓய்வூதியர் சங்க தருமபுரி மாவட்ட பொருளாளர் திரு.வி.கிருஷ்ணன் அவர்களின் அன்புத் தந்தையார் திரு.என்.வெங்கட்டப்பன், முன்னாள் ஊராட்சிமன்றத் தலைவர் அவர்கள் 11.06.2024 அன்று தனது 97வது வயதில் இயற்கை எய்தினார். அய்யா அவர்களின் இறுதிச்சடங்கில், மண்டலச்செயலாளர் திரு.எம்.இரத்தினவேலு, மாவட்டத்தலைவர் திரு.ஆர்.என்.வரதன், செயலாளர் திரு.கே.கோவிந்தசாமி, திரு.எம். பொன்முடி, மாவட்ட கல்வி அலுவலர் (ஓய்வு), தலைமையாசிரியர்கள் (ஓய்வு) திரு.ஆர். இராஜகோபால், திரு.பி.இராஜசேகரன் மற்றும் ஓய்வூதியர் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். அய்யாவை இழந்து வாடும் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

– ஆர்.என்.வரதன், தலைவர், தருமபுரி மாவட்டம்


# திருமண வாழ்த்து



தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கத்தின் திருநெல்வேலி மாவட்ட உறுப்பினரும், மருத்துவத்துறையில் நிர்வாக அலுவலராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவருமான திரு.அ.இராஜமோகன் அவர்களின் மகன் R.S. ஜோதீஸ் – J.M.அர்ச்சனா ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சி **16.06.2024** அன்று மாலை திருநெல்வேலி புதிய பேருந்து நிலையம் எதிரில் உள்ள ஸ்ரீராம் ஹோட்டலில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் திருநெல்வேலி மாவட்ட செயலாளர் திரு.பி.சங்கரநாராயணன் கலந்து கொண்டு மணமக்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

– திருநெல்வேலி மாவட்ட மையம்


---



கிருஷ்ணகிரி மாவட்ட சங்கத்தின் மூத்த உறுப்பினர் திரு.எஸ்..யாரப் அலி (தலைமையாசிரியர், ஓய்வு, அரசு மேல்நிலைப்பள்ளி, நடுப்பையூர்) அவர்களின் மகள் செல்வி. டாக்டர் எஸ்.ஒய். மெகாஜபீன், BDS – செல்வன் டாக்டர் என்.வாசீம்கான், BDS ஆகியோரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சி தருமபுரி மாவட்டம், பெரியாம்பட்டி பி.எம்.கே.ஆர். பேலஸ் மண்டபத்தில் **26.5.24** ஞாயிறு அன்று மிகச்சீரும் சிறப்புமாக நடைபெற்றது. இந்நிகழ்வில் கிருஷ்ணகிரி மாவட்ட தலைவர் நாராயணன், மாவட்ட செயலாளர் ரமேஷ் குமார், மாநில செயற்குழு உறுப்பினர் ரியாஸ் மற்றும் உறுப்பினர்கள் வெங்கட்டாஜலம், செல்வகுமார், இளங்கோ ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.

– மாவட்ட மையம், கிருஷ்ணகிரி

---



கிருஷ்ணகிரி மாவட்ட சங்கத்தின் மூத்த உறுப்பினர் திரு.ஜி.ஜெயகுமார் அவர்களின் மகள் செல்வி. Er.J.மகாலட்சுமி, பி.டெக், எம்.இ., – Er. வி.ஆர்.பாலமுகுந்தன், பி.டெக்.,எம்.பி.ஏ., ஆகியோரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சி கிருஷ்ணகிரி வாசவி மஹாலில் **09.06.2024** ஞாயிறு மாலை மிகச்சீரும் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் கிருஷ்ணகிரி மாவட்ட தலைவர் நாராயணன், மாவட்ட செயலாளர் ரமேஷ் குமார், மாநில செயற்குழு உறுப்பினர் ரியாஸ் மற்றும் உறுப்பினர்கள் கோபாலகண்ணன், வெங்கட்ராஜ், காமராஜ், இளங்கோ, ரங்கன், நடராஜன், பன்னீர் செல்வம், பொய்யாமொழி ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.

– மாவட்ட மையம், கிருஷ்ணகிரி



---



தமிழ்நாடு ஓய்வூதியர் சங்க திருப்பூர் மாவட்டம், அவிநாசி வட்டக்கிளைச் செயலாளரும், மத்திய செயற்குழு உறுப்பினருமான திரு.இரா.பன்னீர்செல்வம் அவர்களின் இளைய சகோதரர் திரு.இரா.நந்தீஸ்வரன், இளமின் பொறியாளர், TNEB அவர்களின் குமாரரின் திருமண விழாவில், மாவட்டத்தலைவர் திரு.அ.சென்னியப்பன், மாவட்டச்செயலாளர் திரு.செ.அந்தோணிசாமி, மாவட்ட துணைத்தலைவர்திரு.க.சுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

அ.சென்னியப்பன், திருப்பூர் மாவட்ட தலைவர்

# திருமண வாழ்த்து




சென்னை பெருநகர மாவட்ட ஓய்வூதியர் சங்க இணைச்செயலாளர் திரு.நாராயணன் அவர்களின் மகன் செல்வன் என்.விஷால் – செல்வி.கே.மீனாட்சி ஆகியோரின் திருமண வரவேற்பு **17.06.2024** அன்று மாலை சென்னை, பல்லாவரம், பம்மல் எல்.சி.மகாலில் சிறப்பாக நடைபெற்றது. மாநிலத்தலைவர் திரு.கோ. சீதாராமன், நிர்வாகிகளுடன் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தி ஆசீர்வதித்தார்.

---


தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கம், சென்னை மாவட்டப் புரவலரும், கிண்டி கிங் நிலையத்தில் Senior Chemist ஆக பணிபுரிந்து ஓய்வு பெற்றவருமான திரு.எம்.ஆர்.சந்தானம் அவர்களுக்கு **31.05.2024** அன்று சதாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. மாநில துணைப்பொதுச் செயலாளர் திரு.டி.ஆர்.அன்னியப்பன் மற்றும் திரு.சடையாண்டி ஆகியோர் வாழ்த்தி ஆசீர்வதித்தனர்.



---




தமிழ்நாடு ஊரகவளர்ச்சித்துறை ஓய்வூதியர்கள் ஒன்றியத்தின் மாவட்டத்தலைவர் திரு.அ.கைலாசநாதன் அவரது துணைவியார் திருமதி.கை.தமிழரசி அவர்களின் **39**ஆம் வருட திருமண நாள் சிறப்பாக கொண்டாடப்பட்டது.



பெரமபலூர் மாவட்ட துணைத்தலைவர் திரு.ஆ.செல்வராஜ் அவர்களின் இல்லதிருமண நிகழ்ச்சியில் ,(16.6.24) சார்பாக அனபளிப்பு வழங்கப்பட்டது.

# வாழ்த்துகிறோம்



செங்கல்பட்டு வட்டக்கிளை துணைத்தலைவர் திரு.ஏ.தணிகைபதி புரவலர் திருமதி.ராஜேஸ்வரி தம்பதியரின் 57ஆம் ஆண்டு திருமண நாள் விழா 04.06.2024 அன்று வெகு சிறப்புடன் கொண்டாடப்பட்டது.

அன்னாரை தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கம் சார்பில், மாநிலத்தலைவர் திரு.கோ.சீதாராமன், செயலாளர்கள், பொருளாளர் மற்றும் வட்டக்கிளைத்தலைவர் திரு.ஏ.இராமசாமி உள்ளிட்டு நிர்வாகிகள் தம்பதியினரை பல்லாண்டு வாழ்க என வாழ்த்தினர்.

– ஆ.இராமசாமி, வட்டக்கிளைத்தலைவர், செங்கல்பட்டு

# மாநில தலைவரின் 75வது பிறந்த நாள் வாழ்த்துக்கள்










மாநிலத்தலைவர் திரு.கோ.சீதாராமன் அவர்களின் 75வது பிறந்த நாளான 01.06.2024 அன்று நிர்வாகிகள் நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



செங்கல்பட்டு மாவட்ட ஓய்வூதியர் சங்கத்தலைவர் திரு.ஜேம்ஸ் பாலகிருஷ்ணன் அவர்களின் துணைவியார் திருமதி.ஜெ.பி.நசரியேள் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி 16.07.2024 அன்று செவ்வாய் காலை 10.00 மணிக்கு எண்.47, தேவசகாயம் நகர், கன்னடபாளையம், மேற்கு தாம்பரம், சென்னை–45 என்ற முகவரியில் ஸ்தோத்திரக் கூட்டம் நடைபெறும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

– ஜேம்ஸ் பாலகிருஷ்ணன், மாவட்டத்தலைவர், செங்கல்பட்டு


# கட்டிட திறப்பு விழா






தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கம், கோவை மாவட்ட மத்திய செயற்குழு உறுப்பினர் திரு.பி.என். கந்தசாமி அவர்களின் கட்டிட திறப்பு விழா **09.06.2024** ஞாயிற்றுக்கிழமை காலை பீடம்பள்ளியில் சிறப்பாக நடைபெற்றது. கோவை மண்டல செயலாளர் திரு என்.பூவலிங்கம், மேனாள் மாவட்ட பொருளாளர் திரு.ரகுநாதன், தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய மேனாள் மாவட்ட தலைவர் திரு.சக்கரவர்த்தி மற்றும் முக்கிய பிரமுகர்களும் நண்பர்கள் உறவினர்கள் அனைவரும் கலந்து கொண்டு விழாவினை சிறப்படைய செய்தனர். மாநில தலைவர் திரு கோ.சீத்தாராமன், தலைமை நிலைய செயலாளர் திரு.பக்தவச்சலம் ஆகியோர் வாழ்த்து செய்தி அனுப்பியிருந்தனர்.

# பிறந்த நாள் வாழ்த்து



தமிழ்நாடு ஓய்வூதியர் சங்க கிருஷ்ணகிரி மாவட்டத் தலைவர் திரு. எல்.நாராயணன் அவர்களின் **70** வது பிறந்த நாளுக்கு அனைவரின் சார்பாகா மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். இன்று பிறந்த நாள் காணும் நமது மாவட்டத்தலைவர் அவர்கைள் நீண்ட ஆயுளுடனும், நிறை செல்வத்துடனும் நீடூழி வாழ எல்லாம் வல்ல இறைவனை மனதார வேண்டுகிறோம்.


– மாவட்ட மையம், கிருஷ்ணகிரி

# சந்திப்பு



தமிழ்நாடு ஓய்வூதியர் சங்க நாமக்கல் மாவட்ட துணைத்தலைவர் இரா இராசாக்கவுண்டர், பொதுச்செயலாளர் திரு.சி.மருதை அவர்களை திருச்சியில் அவரது இல்லத்திற்கு நேரில் சென்று சந்தித்து அவரின் உடல்நலம் குறித்து விசாரித்தார். மேலும் நாமக்கல் மாவட்ட சங்க செயல்பாடுகள் பற்றி விளக்கி கூறினார்.

# வாழ்த்துகிறோம்



தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர் ஒன்றியத்தின் மாநில துணைத் தலைவரும், தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் திருப்பூர் மாவட்ட துணை தலைவரும், திருப்பூர் வட்டார வளர்ச்சி அலுவலரும், எனது இனிய நண்பருமாகிய திரு ஜோதிநாத் அவர்களின் பணி நிறைவு விழாவிற்கு, நமது சங்கத்தின் சார்பாக, மாவட்டத்தலைவர் சென்னியப்பன்,மாவட்டச்செயலாளர் அந்தோணிசாமி, மாவட்ட துணைத்தலைவர் திரு கா.சுப்பிரமணியன், மத்திய செயற்குழு உறுப்பினர் திரு.பன்னீர்செல்வம் ஆகியோர் நேரில் சென்று வாழ்த்தினர்.

சென்னியப்பன் தலைவர் திருப்பூர் மாவட்டம்

# மாவட்ட கருவூல அலுவலர் சந்திப்பு

**சென்னை** கருவூல கணக்கு துறை ஆணையரின் நேர்முக உதவியாளர் திருமதி பார்வதி அவர்கள் 31 5 2024 அன்று பணி ஓய்வு பெறுவதை முன்னிட்டு தமிழ்நாடு ஓய்வூதியர் சங்க மாநில தலைவர் திரு சீதாராமன் அண்ணாருக்கு பொன்னாடை போர்த்தி கடவுளின் திருவுருவப்படம் அளித்து கௌரவித்தார்

---

**தூத்துக்குடி** மாவட்ட கருவூல அலுவலர் அவர்களின் அழைப்பை ஏற்று, தூத்துக்குடி மாவட்ட ஓய்வூதியர் சங்கத்தின் சார்பாக மாவட்ட நிர்வாகிகள் மாவட்ட கருவூல அலுவலர் அவர்களை 13.05.2024 அன்று மாலை சந்தித்து பேசினர். கருவூல அலுவலர் அவர்கள், புதிய வருமான வரி பிடித்தம் தொடர்பான ஆலோசனைகளை தெரிவித்தார். – எம்.பிதேலிஸ் வல்தாரிஸ், மாவட்டத்தலைவர், தூத்துக்குடி

---

**கிருஷ்ணகிரி** மாவட்ட கருவூல அலுவலராக பொறுப்பு ஏற்ற திரு.கே.ராஜன் மற்றும் கூடுதல் கருவூல அலுவலர் திரு.வி.கே.ஹரிகிருஷ்ணன் ஆகிய இருவரையும் மரியாதை நிமித்தமாக தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கத்தின் கிருஷ்ணகிரி மாவட்ட தலைவர் திரு.நாராயணன் மற்றும் மாவட்ட செயலாளர் திரு.ரமேஷ்குமார் ஆகியோர் 12.06.2024 புதன்கிழமை அன்று மாவட்ட கருவூலத்தில் நேரில் சந்தித்து பொன்னாடை போர்த்தி நமது சங்கத்தின் டைரி, மாத இதழ் ஆகியவற்றை வழங்கி வாழ்த்து தெரிவித்தனர்.

---

**தாம்பரம்** 24.06.2024 திங்கட்கிழமை அன்று, தாம்பரம் சார்நிலை கருவூல அலுவலர் திரு.டி.ராபின்சன் அவர்களை, மாநிலத்தலைவர் திரு.கோ.சீதாராமன், செங்கல்பட்டு மாவட்டத்தலைவர் டாக்டர்.ஆ.ஜேம்ஸ் பாலகிருஷ்ணன், சென்னை மாவட்டச்செயலாளர் திரு.ஆர்.ரவிச்சந்திரநாத் பாபு, மருத்துவத் துறையில் பணியாற்றி வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்ற திரு.ஒய்.வெங்கடகிருஷ்ணன் ஆகியோர், மரியாதை நிமித்தம் சந்தித்து, பொன்னாடை அணிவித்து, நாட்குறிப்பு மற்றும் நமது ஓய்வூதிய நண்பன் மாத இதழ் வழங்கி பாராட்டியும் மற்றும் தாம்பரம் வட்டத்தில் உள்ள ஓய்வூதியர் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களின் குறைகளை உடனுக்குடன் தீர்வு காணப்படவும், மாவட்ட கருவூல அலுவலகத்திற்கு முக்கிய பிரச்சினைகளுக்கு தீர்வு காண பரிந்துரை செய்யும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது.

– டாக்டர்.ஆ.ஜேம்ஸ் பாலகிருஷ்ணன், மாவட்டத்தலைவர், செங்கல்பட்டு

---

**வேலூர்** கருவூல மண்டல இணைஇயக்குநர் திருமதி. சாந்திமணி BSc அவர்களின் பணி ஓய்வை முன்னிட்டு மாவட்ட நிர்வாகிகள் திருவெங்கடேசுவரன், ரமேஷ்குமார், மோகன்தாஸ், சுப்பிரமணியன், இராமனுஜலு, லெனின்குமார், கிருஷ்ணன், கஜராஜ் ஆகியோர் கலந்துகொண்டு அவருக்கு பொன்னாடை அணிவித்து வாழத்துக்கள் தெரிவித்தனர்.

---

**தேனி** மாவட்டத்தில் புதிதாக பணியில் சேர்ந்துள்ள மாவட்ட கருவூல அலுவலர் திரு.அருணாச்சலம் அவர்களை தேனி மாவட்டத்தலைவர் திரு.ச.சுப்பிரமணியன், மாவட்டச் செயலாளர் திரு.பெ.காளிமுத்து, மாவட்ட அமைப்புச் செயலாளர் திரு.வி.பவானந்தன், மாவட்ட துணைத்தலைவர் திரு.து.மாமுடிராஜ், பெரியகுளம் வட்டக்கிளைச் செயலாளர் திரு.ஆர்.ஆறுமுகம் ஆகியோர் நேரில் சந்தித்து தேனி மாவட்ட மையத்தின் சார்பில் பொன்னாடை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. – ச.சுப்பிரமணியன், மாவட்டத்தலைவர், தேனி

# திருவண்ணாமலை மாவட்ட புதுமனை புகுவிழா

திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை டவுன் வேட்டவலம் ரோடு, காமராஜ் நகர் கீழ் அருணையில் வசிக்கும் திரு.ஆர்.மணிகண்டன், ஓய்வூதியர் நண்பன் இதழ் புரவலரும், ஓய்வூதியர் சங்க மாவட்ட துணைத்தலைவர் அவர்களின் மூத்த குமாரர் தெய்வத்திரு.எம்.கார்த்திகேயன், TNEB போர்மேன் மற்றும் நலமுடன் எம்.சரிதா (மருமகள்) TNEB மதிப்பீட்டாளர் ஆகியோர் புதியதாக கட்டியுள்ள புதிய இல்ல புதுமனை புகுவிழா 09.06.2024 அன்று சிறப்பாக நடைபெற்றது.

---

இந்நிகழ்ச்சியில், மண்டலச்செயலாளர் திரு.என்.மாசிலாமணி, மாவட்டத்தலைவர் திரு.ந.இராமலிங்கம், மாவட்டச்செயலாளர் திரு.ஜி.சேகர், மாவட்டப் பொருளாளர் திரு.பி.ராசேந்திரன், மாவட்ட பிரச்சாரச் செயலாளர் திரு.எஸ்.அருணாசலம், மாவட்ட இணைச்செயலாளர்கள் திரு.இ.கிருஷ்ணமூர்த்தி, திரு.கே.மகாகிருஷ்ணன், திரு.ஏ.கே.கிருஷ்ணமூர்த்தி, திரு.கே.டி.சுப்ரமணி, திருமத.செல்வி VHN, திருமதி திலகா VHN, திரு.சேகர் BEE, திரு.கார்த்திகேயன் ATO, திரு.தங்கராசு ATO ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

– ந.இராமலிங்கம், மாவட்டத்தலைவர், திருவண்ணாமலை

# இரங்கல் செய்தி



தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கம், சேலம் மாவட்டத்தின் துணைத்தலைவர் அமரர் திரு.எஸ்.சாமிநாதன் அவர்கள் கருவூலத்துறையில் பணியாற்றி, ஓய்வூதிய சங்கப் புரவலரும், மூத்த உறுப்பினருமான சங்கத்தின் முன்னோடி 03.06.2024 அன்று இயற்கை எய்தினார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் இறுதி ஊர்வலத்தில் மாநிலத் துணைத்தலைவர் ஆர்.ராகவன், மாவட்டத்தலைவர் ஆர்.இரகுபதி, பிரச்சாரச் செயலாளர் ஏ.ராஜேந்திரன், சங்க முன்னோடிகள் உதவிக் கருவூல அலுவலர்களான தேவராஜ் பாவிருசன் மாரிசாமி, ராமலிங்கம், ராஜாமணி ஆகியோர் கலந்து கொண்டு மலரஞ்சலி செலுத்தி இறுதி மரியாதை செலுத்தினார்கள். அன்னாரின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலும், ஆறுதலும் தெரிவிக்கப்பட்டது.

இறுதியாக, 11.06.2024 அன்று நடைபெற்ற சேலம் மாவட்ட ஓய்வூதியர் சங்க மாதாந்திரக் கூட்டத்தில், மாவட்ட துணைத்தலைவர் அமரர் திரு.எஸ்.சாமிநாதன் அவர்கள் இயற்கை எய்தியமைக்கு சங்கத்தின் சார்பாக மௌனம் அனுஷ்டிக்கப்பட்டு, அன்னாரின் ஆன்மா சாந்தியடைய அஞ்சலி செலுத்தப்பட்டது.

ஆக்கப்பூர்வமாக அக்கூட்டத்தில், அன்னார் ஆற்றிய பணிகள் (சங்க செயல்பாடுகள்) குறித்து மாநிலத் துணைத்தலைவர் ஆர்.ராகவன், மாநில துணைப்பொதுச் செயலாளர் கோ.சண்முகசுந்தரம், மாவட்டத்தலைவர் ஆர்.இரகுபதி, மாவட்டப் பிரச்சாரச்செயலாளர் ஏ.ராஜேந்திரன், மாவட்டப் பொருளாளர் ஆர்.தனபால், இணைச்செயலாளர் எஸ்.வி.கோவிந்தராஜன், முன்னாள் மாநில நிர்வாகி எம்.தேவராஜுலு, மாவட்டத் துணைத்தலைவர்களான கே.நடராஜன், ஜெ.ஜெகநாதன், மூத்த உறுப்பினர் ஆர்.ராஜாமணி, உறுப்பினர்களான குணசேகரன், புதிய உறுப்பினர் ராஜேந்திரன் மற்றும் முன்னணி உறுப்பினர்கள், சகோதரிகள் யாவரும் அன்னாரின் பணி, நடை, பணிவு குறித்து விரிவாக எடுத்துரைத்தனர்.

<u>அன்னார் எஸ்.சாமிநாதன் அவர்கள் ஆற்றிய பணி</u>

1) சங்கத்தின் நலன் கருதி கொள்கைப் பிடிப்புடன் வாழ்ந்த ஓய்வூதியர். கோரிக்கைகள் ஏதுமிருப்பினும், எந்த நேரத்திலும் ஆலோசனை மேற்கொள்ளுதல், உதவி செய்தல், சங்க செயல்பாடுகளில் ஆக்கப்பூர்வமான நடவடிக்கை, திறன் ஆய்வு, கொள்கை பிடிப்பு உள்ள நண்பர்.

2) மாநாடு, வேலை நிறுத்தம், அறிவுரை, பொருளுதவி, வாட்ஸ்–அப் பணியில் பதிவு ஆகிய பணிகளில் முன்வரிசையில் நிற்பவர். நிர்வாகத்துறை பணித்திறன் மிக்கவர்.

3) மாநில மையத்திற்குக்கூட ஆலோசனை தெரிவித்து உரிய முறையில அணுகி தீர்வு காண்பவர்.

அன்னாரின் ஆன்மா சாந்தியடைய மாவட்ட மையம் சார்பாக புகழ் அஞ்சலி செலுத்தப்பட்டது.

ஆர்.இரகுபதி
மாவட்டத்தலைவர்

ஆர்.ராகவன்
மாநில துணைத்தலைவர்

# இரங்கல் செய்தி



தமிழ்நாடு ஓய்வூதியர் சங்க, திருவள்ளூர் மாவட்ட முன்னாள் இணைச்செயலாளர் திரு ஏ.டி.குலோத்துங்கன் (வயது 68) அவர்கள், நண்பர்களுடன் வட இந்திய சுற்றுப்பயணத்தின் போது 30.05.2024 வியாழன் அன்று மாலை திடீரென நெஞ்சு வலி ஏற்பட்டு மரணமடைந்தார். அன்னாரை பிரிந்து வாடும் குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் உறவினர்கள் ஆகியோருக்கு திருவள்ளூர் மாவட்ட தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்துக் கொள்கிறது.

– திருவள்ளூர் மாவட்ட மையம்.



கிருஷ்ணகிரி மாவட்ட சங்கத்தின் மூத்த உறுப்பினர் திரு.புகழேந்தி (அரசு மேல்நிலைப்பள்ளி, சந்தூர், தலைமையாசிரியர் ஓய்வு) அவர்களின் மாமனார் திரு.பி.குப்புசாமி அவர்கள் 09.06.2024 ஞாயிறு மாலை 6.55 மணி அளவில் இயற்கை எய்தினார். அன்னாரின் மறைவிற்கு மாவட்ட மையத்தின் சார்பாக ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு ஆறுதலை தெரிவித்தும், அன்னாரது ஆன்மா சாந்தி அடைய அந்த எல்லாம் வல்ல இறைவனை மனதார வேண்டுகிறோம். – மாவட்ட மையம், கிருஷ்ணகிரி

# “முயற்சி திருவினையாக்கும்” - மாநில மையக் கட்டிட நிதி விவரம்

| வ.எண் | பெயர் திருவாளர்கள் / திருமதி | இரசீது / எண்நாள் | தொகை (ரூ.) |
|---|---|---|---|
| | | கடந்த மாதம் ........................வரை வரவு | 43,73,370.00 |
| 1. | என்.எஸ்.ரெங்கன், மதுரை | 41834/22.05.2024 | 500.00 |
| 2. | கே.விஜயராகவன், சென்னை | 41829/22.05.2024 | 1,000.00 |
| 3. | லலிதாம்பாள், சென்னை–33 | 41837/27.05.2024 | 2,000.00 |
| 4. | டாக்டர் முத்து ஜெயராமன், சென்னை–41 | 41838/27.05.2024 | 2,000.00 |
| 5. | பாலசுப்பிரமணியன், சென்னை | 41839/27.05.2024 | 1,000.00 |
| 6. | டாக்டர் இராஜாமணி, மதுரை | 41840/27.05.2024 | 5,000.00 |
| 7. | கே.கே.சித்தார்த்தன், சென்னை | 41841/27.05.2024 | 500.00 |
| 8. | கைலாசம், சென்னை | 41842/27.05.2024 | 500.00 |
| 9. | ஸ்ரீனிவாசன், C.E. சென்னை | 41843/27.05.2024 | 1,000.00 |
| 10. | முருகேசன், A.O. கோயம்புத்தூர் | 41844/27.05.2024 | 1,000.00 |
| 11. | Er.எஸ்.முத்துக்குமார், DSE. பொள்ளாச்சி | 41845/27.05.2024 | 1,000.00 |
| 12. | கிருஷ்ணமூர்த்தி, சென்னை–42 | 41846/27.05.2024 | 1,000.00 |
| 13. | செந்தில்குமார், காஞ்சிபுரம் | 41847/27.05.2024 | 2,000.00 |
| 14. | சாந்தி, கோவூர், சென்னை | 41848/27.05.2024 | 500.00 |
| 15. | Er.கே.செல்வகுமார், தஞ்சாவூர் | 41849/27.05.2024 | 1,000.00 |
| 16. | ஆர்.பாஸ்கர், காளையார்கோவில் | 41850/27.05.2024 | 650.00 |
| 17. | வியாசமூர்த்தி, வ.கி.தலைவர், அம்பத்தூர் | 41851/27.05.2024 | 500.00 |
| 18. | எஸ்.ஏ.கிருஷ்ணமூர்த்தி, ACE/Highways, சென்னை–42 | 41852/27.05.2024 | 1,000.00 |
| 19. | ஆர்.ராமாநூஜ கோபாலகிருஷ்ணன், A.O. சென்னை–44 | 41853/27.05.2024 | 2,000.00 |
| 20. | பீட்டர் கிரேசியஸ், பெங்களூரு | 41854/27.05.2024 | 1,000.00 |
| 21. | டாக்டர் ஞானசேகரன், சென்னை–42 | 41855/27.05.2024 | 1,500.00 |
| 22. | ஆர்.கேசவன், MDL, சென்னை | 41862/29.05.2024 | 5,000.00 |
| 23. | எஸ்.அந்தோணி சேவியர், MDL, திருச்சி | 41863/29.05.2024 | 5,000.00 |
| 24. | தங்கராஜ், கோவை | 41865/29.05.2024 | 3,000.00 |
| 25. | ராஜ், MDL, இராஜபாளையம் | 41866/29.05.2024 | 1,000.00 |
| 26. | ஏ.எஸ்.சோழவன், MSO., MDL, கடையநல்லூர் | 41864/29.05.2024 | 3,000.00 |
| 27. | பன்னீர்செல்வம், JD, மறைமலைநகர் | 41867/29.05.2024 | 500.00 |
| 28. | திருக்குறள் பெருமாள், ADSP சென்னை–53 | 41868/01.06.2024 | 2,001.00 |
| 29. | சரவணபெருமாள், கருவூலத்துறை, சென்னை–53 | 41869/01.06.2024 | 1,000.00 |
| 30. | ஆர்.கலாவதி, MDL, சென்னை–61 | 41870/01.06.2024 | 1,001.00 |
| 31. | சி.அர்ஜுனன், TNPA, ஒட்டன்சத்திரம் | 41874/07.06.2024 | 1,000.00 |
| 32. | ஜி.சுதாராஜன், பம்பாய் | 41875/07.06.2024 | 1,000.00 |
| 33. | கே.பானுமதி, மடப்புரம், திருவாரூர் | 41876/12.06.2024 | 500.00 |
| 34. | எஸ்.போஸ், விஜயபுரம், திருவாரூர் | 41876/12.06.2024 | 500.00 |
| 35. | பி.சரவணன், பொருளாளர், விளமல், திருவாரூர் II | 41876/12.06.2024 | 2,000.00 |
| 36. | டி.கல்யாணம், பொன்நகர், விளமல், திருவாரூர் | 41876/12.06.2024 | 1,000.00 |
| 37. | டி.சண்முகம், கே.டி.ஆர்.எஸ்டேட், திருவாரூர் | 41876/12.06.2024 | 1,000.00 |
| 38. | எஸ்.நடராஜன், கொரடாச்சேரி, திருவாரூர் | 41876/12.06.2024 | 1,000.00 |
| 39. | ஏ.எம்.சத்தியமூர்த்தி, கொரடாச்சேரி, திருவாரூர் | 41876/12.06.2024 | 500.00 |
| 40. | எஸ்.மலர்கொடி செல்வகணபதி, கொரடாச்சேரி, திருவாரூர் | 41876/12.06.2024 | 500.00 |
| 41. | எஸ்.செல்வராஜ், கொரடாச்சேரி, திருவாரூர் | 41876/12.06.2024 | 500.00 |
| 42. | எஸ்.குமார், திருவாரூர் (மயிலாடுதுறை) | 41876/12.06.2024 | 1,000.00 |
| 43. | வி.மகேஸ்வரி நெப்போலியன், திருவாரூர் | 41876/12.06.2024 | 1,000.00 |
| 44. | எஸ்.சண்முகம், திருவாரூர் | 41876/12.06.2024 | 1,000.00 |
| 45. | என்.ராஜா, திருவாரூர் | 41876/12.06.2024 | 1,000.00 |
| 46. | எம்.பாண்டியன், திருவாரூர் | 41876/12.06.2024 | 1,000.00 |
| 47. | எஸ்.சிவானந்தம், திருவாரூர் | 41876/12.06.2024 | 1,000.00 |
| 48. | எஸ்.பிச்சைமூர்த்தி, திருவாரூர் | 41876/12.06.2024 | 500.00 |
| 49. | இ.வணங்காமுடி, வாண்டாம்பாலை, திருவாரூர் | 41876/12.06.2024 | 1,000.00 |
| 50. | என்.எஸ்.கோவிந்தராஜ், பத்தூர், கொரடாச்சேரி | 41876/12.06.2024 | 1,000.00 |
| 51. | Ln.ஆர்.சுவாமிநாதன், பத்தூர், கொரடாச்சேரி II | 41876/12.06.2024 | 1,000.00 |
| 52. | தரும இராமலிங்கம், பத்தூர், கொரடாச்சேரி | 41876/12.06.2024 | 500.00 |
| 53. | எஸ்.சண்முகவேல், கொரடாச்சேரி, திருவாரூர் | 41876/12.06.2024 | 500.00 |
| 54. | என்.தமிழரசி, வாழச்சேரி, திருவாரூர் | 41876/12.06.2024 | 1,000.00 |

| | | | |
|---|---|---|---|
| 55. | எஸ்.கணேசன், நன்னிலம் II | 41876/12.06.2024 | 2,000.00 |
| 56. | கே.கருணாநிதி, தி.நகர், விளமல், திருவாரூர் II | 41876/12.06.2024 | 500.00 |
| 57. | திருவள்ளூர் மாவட்ட மையம் | 41878/12.06.2024 | 5,500.00 |
| 58. | பெரம்பலூர் மாவட்ட மையம் | 41879/12.06.2024 | 2,000.00 |
| 59. | கணபதி சுப்பிரமணியம், சென்னை–73 | 41881/13.06.2024 | 1,001.00 |
| 60. | பழனிச்சாமி, மதுரை | 41882/13.06.2024 | 500.00 |
| 61. | கஜலட்சுமி, பொபது, சென்னை | 41883/13.06.2024 | 500.00 |
| 62. | கல்யாணகுமார், சென்னை–61 | 41884/13.06.2024 | 500.00 |
| 63. | கிருஷ்ணமூர்த்தி, AAO, தஞ்சாவூர் | 41885/13.06.2024 | 1,000.00 |
| 64. | சங்கர பாஷ்யம், வணிகவரித்துறை, மதுரை–16 | 41886/13.06.2024 | 1,000.00 |
| 65. | வி.மாரியம்மாள், சுகாதாரத்துறை, சென்னை–91 | 41887/13.06.2024 | 500.00 |
| 66. | டி.என்.வெங்கட்ராமன், PAO, சென்னை–117 | 41888/13.06.2024 | 1,000.00 |
| 67. | கே.பஞ்சநதீஸ்வரன், DOTE சென்னை–25 | 41889/13.06.2024 | 1,000.00 |
| 68. | ஏ.கஸ்தூரி, சென்னை–33 | 41890/13.06.2024 | 1,000.00 |
| 69. | எம்.விஜயராகவன், PAO, மதுரை | 41891/13.06.2024 | 2,001.00 |
| 70. | எம்.சொக்கலிங்கம், மதுரை–16 | 41893/18.06.2024 | 1,000.00 |
| 71. | பாலகிருஷ்ணன், HM, சிவகங்கை | 41894/18.06.2024 | 1,000.00 |
| 72. | ஆர்.ஆர்.மோதிலால், DCTO, மதுரை | 41895/18.06.2024 | 1,001.00 |
| 73. | கிருஷ்ணமூர்த்தி, EE /PWD, திருச்சி | 41896/18.06.2024 | 500.00 |
| 74. | தணிகைபதி, HI, செங்கல்பட்டு | 41897/18.06.2024 | 2,500.00 |
| 75. | ஏ.ராமசாமி, HI, செங்கல்பட்டு | 41898/19.06.2024 | 1,000.00 |
| 76. | ரமேஷ் சதாசிவம், சென்னை–33 | 41899/19.06.2024 | 2,000.00 |
| 77. | Dr.திருமதி.சாரதா சண்முகசுந்தரம், சென்னை–41 | 41900/19.06.2024 | 3,002.00 |
| 78. | ஜி.வெங்கட்ராமன், சென்னை–69 | 41901/19.06.2024 | 1,000.00 |
| 79. | டி.கோவிந்தராஜன், பாண்டிச்சேரி | 41902/19.06.2024 | 1,000.00 |
| 80. | திருமதி.அஞ்சலி, சென்னை–61 | 41903/19.06.2024 | 5,000.00 |
| 81. | சாருலதா, சென்னை–61 | 41904/19.06.2024 | 1,000.00 |
| 82. | கே.வாசுதேவன், Lab Tech, சென்னை–16 | 41905/19.06.2024 | 1,000.00 |
| 83. | திருமதி.ஏ.தமிழ்ராணி, Supdt, DPH தஞ்சாவூர் | 41908/19.06.2024 | 25,000.00 |
| 84. | வி.காந்தி, சென்னை–18 | 41910/19.06.2024 | 1,000.00 |
| 85. | டி.தியாகராஜன், சென்னை–101 | 41911/19.06.2024 | 1,000.00 |
| 86. | கே.ஜெயராமன், பெரியகுளம் | 41912/19.06.2024 | 500.00 |
| 87. | பி.பழனிச்சாமி, மதுரை | 41913/19.06.2024 | 500.00 |
| 88. | எம்.வி.மருதமுத்து, தலைவர், அரியலூர் | 41915/19.06.2024 | 500.00 |
| 89. | கே.மங்கையர்க்கரசி, ஆலோசகர், அரியலூர் | 41916/19.06.2024 | 500.00 |
| 90. | எம்.கனகசபை, அமைப்புச்செயலர், அரியலூர் | 41917/19.06.2024 | 500.00 |
| 91. | ஜி.சுவாமிநாதன், அரியலூர் | 41918/19.06.2024 | 500.00 |
| 92. | பி.பெருமாள், துணைத்தலைவர், அரியலூர் | 41920/19.05.2024 | 500.00 |
| 93. | திருமதி.புஷ்பாஞ்சலி, துணைத்தலைவர், அரியலூர் | 41922/19.06.2024 | 1,000.00 |
| 94. | டாக்டர் விஜய அசோகவரதன், வேலூர் | 41926/19.06.2024 | 1,000.00 |
| 95. | என்.கோவர்த்தினி, SHN, வேலூர் | 41926/19.06.2024 | 1,000.00 |
| 96. | டி.மாலதி, SHN, வேலூர் | 41926/19.06.2024 | 500.00 |
| 97. | ஏ.எஸ்.பானுமதி, ICDS, வேலூர் | 41926/19.06.2024 | 500.00 |
| 98. | டி.கணேசன், MSO/MDL, சென்னை–73 | 41929/23.06.2024 | 1,000.00 |
| 99. | ஆ.நடராஜன், மாவட்டத்தலைவர், கள்ளக்குறிச்சி | 41931/23.06.2024 | 5,000.00 |
| 100. | ந.அமிர்தகௌரி, DSWO, கள்ளக்குறிச்சி | 41931/23.06.2024 | 1.500.00 |
| 101. | எஸ்.ராமலிங்கம், துணைத்தலைவர், கள்ளக்குறிச்சி | 41931/23.06.2024 | 1,000.00 |
| 102. | கே.செல்வராஜ், பொருளாளர், கள்ளக்குறிச்சி | 41931/23.06.2024 | 2,000.00 |
| 103. | கே.ராஜேந்திரன், சார்பதிவாளர், கள்ளக்குறிச்சி | 41931/23.06.2024 | 1.000.00 |
| 104. | டி.வி.கலைமணி, DSR, கள்ளக்குறிச்சி | 41931/23.06.2024 | 1,000.00 |
| 105. | என்.அசோகன், அமைப்புச்செயலர், கள்ளக்குறிச்சி | 41931/23.06.2024 | 1,000.00 |
| 106. | ஆர்.குப்புசாமி, வ.கி.தலைவர், திருக்கோவிலூர் | 41931/23.06.2024 | 500.00 |
| 107. | ஏ.ராமதாஸ், வ.கி.செயலாளர், திருக்கோவிலூர் | 41931/23.06.2024 | 500.00 |
| 108. | டி.துரைசாமி, கருவூலத்துறை, திருக்கோவிலூர் | 41931/23.06.2024 | 500.00 |
| 109. | டி.ஜெயராமன், SR மாமந்தூர், திருக்கோவிலூர் | 41931/23.06.2024 | 1,000.00 |
| 110. | ஏ.ஆறுமுகம், Supdt, திருக்கோவிலூர் | 41931/23.06.2024 | 500.00 |
| 111. | க.கலியபெருமாள், SR ஏமப்பேர், திருக்கோவிலூர் | 41931/23.06.2024 | 1,000.00 |
| 112. | எம்.ராமசாமி, SR கச்சேரி ரோடு, கள்ளக்குறிச்சி | 41931/23.06.2024 | 1,000.00 |
| 113. | பி.கண்மணி, மாமனந்தல் ரோடு, கள்ளக்குறிச்சி | 41931/23.06.2024 | 500.00 |

| | | | |
|---|---|---|---|
| 114. | ஏ.முனுசாமி, வட்டாட்சியர், சங்கராபுரம், கள்ளக்குறிச்சி | 41931/23.06.2024 | 2,000.00 |
| 115. | ஏ.ஜெயலாப்தீன், Supdt, தீர்த்தால் நகர், கள்ளக்குறிச்சி | 41931/23.06.2024 | 1,000.00 |
| 116. | டி.மனோகரன், AD புதுமோகூர், சங்கராபுரம் | 41931/23.06.2024 | 2,000.00 |
| 117. | ஏ.பஷீர்அகமது, SR, கள்ளக்குறிச்சி | 41931/23.06.2024 | 1,000.00 |
| 118. | ராதிகா, Supdt , சங்கராபுரம், கள்ளக்குறிச்சி | 41931/23.06.2024 | 2,000.00 |
| 119. | ஞானசேகரன், வ.கி.தலைவர், சங்கராபுரம் | 41931/23.06.2024 | 1,000.00 |
| 120. | முனியன், வ.கி.செயலாளர், சங்கராபுரம் | 41931/23.06.2024 | 1,000.00 |
| 121. | ஏ.சுப்பிரமணியன், AEO, உளுந்தூர்பேட்டை | 41931/23.06.2024 | 1,000.00 |
| 122. | ஏ.கணபதி, Survey, கள்ளக்குறிச்சி | 41931/23.06.2024 | 1,000.00 |
| 123. | ஆர்.அபூர்வம், Sr. Nurse, கள்ளக்குறிச்சி | 41931/23.06.2024 | 500.00 |
| 124. | ஜி.நாராயணசாமி, கள்ளக்குறிச்சி | 41931/23.06.2024 | 500.00 |
| 125. | ஏ.மணிமாறன், தியாகதுர்க்கம், கள்ளக்குறிச்சி | 41931/23.06.2024 | 5,000.00 |
| 126. | பெ.நாகராஜன், HM, தியாகதுர்க்கம், கள்ளக்குறிச்சி | 41931/23.06.2024 | 1,000.00 |
| 127. | தன.சீத்தாராமன், EDN, பெரியமாம்பட்டு, கள்ளக்குறிச்சி | 41931/23.06.2024 | 1,000.00 |
| 128. | வி.சிவக்குமார், AO/DPH, தியாகதுர்க்கம், கள்ளக்குறிச்சி | 41931/23.06.2024 | 1,000.00 |
| 129. | என்.சண்முகம், Supdt/EDN, தியாகதுர்க்கம், கள்ளக்குறிச்சி | 41931/23.06.2024 | 1,000.00 |
| 130. | Tmt.எஸ்.சிவகாமசுந்தரி, மாநில ஒருங்கிணைப்பாளர், TNPA,சென்னை | 41819/18.05.2024 | 50,000.00 |
| 131. | ஜெ.கல்யாணசுந்தரம், வ.கி.தலைவர், மடிப்பாக்கம் | 41934/23.06.2024 | 5,001.00 |
| 132. | முனிம்மாள், SHN, திண்டுக்கல் | 41935/23.06.2024 | 1,000.00 |
| 133. | கந்தசாமி, மா.து.தலைவர், SSI, திண்டுக்கல் | 41936/23.06.2024 | 1,000.00 |

**இதுவரை பெறப்பட்ட தொகை ரூ. 46,16,028**
**மாநில மையம்**

## செயற்கரிய செயல்!

**22.05.2022** அன்று மாநிலத்தலைவர் திரு.கோ.சீதாராமன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாநில செயற்குழு கூட்டத்தில், நமது சங்கத்திற்கென சொந்தமாக ஓர் அசையா சொத்தினை (கட்டிடத்தை) உருவாக்கிட வேண்டும் என முடிவெடுத்து, மாநில, மாவட்ட, வட்டக்கிளைகள் மற்றும் இணைப்புச்சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள் மற்றும் நல்லுள்ளம் கொண்ட தகையாளர்கள் அளித்திட்ட பொருளாதார ஒத்துழைப்பின் மூலம் செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூரில், வசதியான காலிமனையினை **13.05.2024** அன்று பத்திரப்பதிவு செய்யப்பட்டது குறித்து மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம். இச்செயற்கரிய செயலை சாதித்து காட்டிய நமது மாநிலத்தலைவர் 'சாதனைச் செம்மல்' திரு.கோ.சீதாராமன் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம். நமது சங்கம் இருக்கும் வரை அவரின் புகழ் இருக்கும் என வாழ்த்தி வணங்குகிறோம்.

– அ.குருசேகரன், மாவட்டச்செயலாளர், விழுப்புரம்

## திருவையாறு சங்க அலுவலகப் பயன்பாட்டுக்கு "தீ" தடுப்பு கருவி அன்பளிப்பு விழா



தீ தடுப்பு மற்றும் பழுது பார்க்கும் கிரீன் ஸ்டார் நிறுவனத்தின் உரிமையாளர், ஓய்வூதியர் சங்க திருவையாறு வட்டக்கிளைக்கு ரூ.4000/– மதிப்பிலான தீ தடுப்பு சாதனத்தை இலவசமாக வட்டக்கிளை தலைவரிடம் வழங்குகிறார். <u>இடமிருந்து வலம் : திருவாளர்கள் : 1)</u> இணைச்செயலாளர் இரா. சச்சிதானந்தன். 2) செயலாளர் ப.வேணுகோபால், 3) தலைவர் இரா.செல்வராசு, 4) மதிப்பியல் ஆலோசகர் வீ.ஜெயராமன், 5) உரிமையாளர் எம்.ரமணி, 6) உறுப்பினர் ஆசிரியர் ஜெய்சங்கர், 7) பார்வையாளர்

## இரங்கல் செய்தி

தஞ்சாவூர் மாவட்டத்தில், பொதுப்பணித்துறையில் தொலைபேசி இயக்குபவராக (டெலிபோன் ஆபரேட்டர்) பணியாற்றி ஓய்வு பெற்றவரும், தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தில், தஞ்சாவூர் மாவட்டத்தில் நீண்டகாலமாக உறுப்பினராக இருந்து பணியிலிருந்து ஓய்வு பெற்றபின், ஓய்வூதியர் சங்கத்தில் ஆயுள்கால உறுப்பினராக செயலாற்றி வந்த திரு.எம்.டி.நாகராஜன் அவர்கள், **19.05.2024**, ஞாயிறு அன்று தமது **92**வது வயதில் பழைய பல்லாவரத்தில் உள்ள தனது வீட்டில் காலமானார். அன்னாரது இழப்பால் வாடும் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் மற்றும் நண்பர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் மறைவுக்கு மடிப்பாக்கம் வட்டக்கிளைத்தலைவர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்.

– மடிப்பாக்கம் வட்டக்கிளை நிர்வாகிகள்

## ஒய்வூதியர்/ குடும்ப ஒய்வூதியர்களுக்கு நிலுவையில் உள்ள கோரிக்கைகளுக்கு விரைவில் ஆணை வழங்க வேண்டி 01.06.2024 அன்று தமிழக முதல்வருக்கு அனுப்பிய கடித நகல்

பெறுநர் நாள் : 01.06.2024

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்,
தமிழ்நாடு அரசு, தலைமைச் இப்பி,
சென்னை - 600 009.

மரியாதைக்குரிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு

பணிவான வணக்கங்கள். தமிழ்நாட்டில் ஒய்வூதியம் மற்றும் குடும்ப ஒய்வூதியம் பெற்றுவரும் ஏறத்தாழ 7 லட்சம் ஒய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஒய்வூதியர்களின் நலன் காத்திடும் அமைப்பாக, கடந்த 21 ஆண்டுகளுக்கும் மேலாக செயல்பட்டு வரும் தமிழ்நாடு ஒய்வூதியர் சங்கத்தின் சார்பில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் மேலான பார்வைக்காக இவ்வேண்டுகோள் மனுவினை சமர்ப்பிக்கின்றோம்.

தமிழக அரசில் பணியாற்றும் அரசு அலுவலர்கள்/ஆசிரியர்கள்/குடும்ப ஒய்வூதியர்கள் மற்றும் அனைத்துத் தரப்பு அலுவலர்களுக்கும் பல்வேறு வாழ்வாதார உரிமைகளை பெற்றுத் தந்திட்ட, அரசு அலுவலர்களின் நிரந்தரப் பாதுகாவலரும், முன்னாள் தமிழக முதல்வர் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர், அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாள் “நிறைவு விழாவினை கொண்டாடும் இந்த நல்ல தருணத்தில், டாக்டர் கலைஞர் அவர்களின் பாதையில், தமிழக மக்களின் நல்வாழ்விற்காக : அயராது பாடுபட்டுவரும் னா பயிடு தமிழக முதல்வர் அவர்கள் ஒய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஒய்வூதியர்களின் நீண்டகால. வாழ்வாதார கோரிக்கைகளை கனிவுடன் பரிசீலித்து சாதகமான ஆணையினை வழங்ககிட அன்புடன் வேண்டுகிறோம்.

கோரிக்கைகள்:

1. 70 அகவை முடித்திட்ட ஒய்வூதியர்கள் / குடும்ப ஒய்வூதியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய கூடுதல் ஒய்வூதியம் / குடும்ப ஒய்வூதியம்.
2. அங்கன்வாடி / சத்துணவுப் பணியாளர்களுக்கு வழங்கிட வேண்டிய நியாயமான ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஒய்வூதியம் (ரூ. 7850/-).
3. பழைய ஓய்வூதியத் திட்டத்தினை மீண்டும் நடைமுறைப்படுத்துதல்.
4. கம்யூடேஷன் தொகை (Recovery of communication) பிடித்தம் செய்யும் காலத்தினை 15 ஆண்டுகளில் இருந்து 12 ஆண்டுகளாக குறைத்தல் பல்வேறு மாநிலங்களில் ஏற்கெனவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
5. குடும்பப் பாதுகாப்பு திட்டத் தொகையினை ரூ. 50000/-ல் இருந்து ரூபாய் இரண்டு லட்சமாக உயர்த்தி வழங்கிட வேண்டுதல்.
6. மருத்துவக் காப்பீடுத் திட்டத்தில் உள்ள குறைபாடுகளை நீக்கி, அரசின் கொள்கையான "காசில்லா மருத்துவ சிகிச்சை" என்பதை முழுமையாக நடைமுறைப்படுத்துதல்.
7. மருத்துவப் படியினை மாதம்தோறும் ரூ. 1000/- ஆக உயர்த்தி வழங்குதல்.
8. ஒய்வூதியர்கள்/குடும்ப ஒய்வூதியர்களுக்கென தனியாக ஓர் "நல வாரியம்" உருவாக்குதல்.
9. தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் மூத்த குடிமகன்களுக்கென அரசுப் பேருந்துகளில் "இலவச பேருந்து பயண திட்டத்தினை " நடைமுறைப்படுத்துதல்.
10. அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் மூத்த குடிமகன்களுக்கென. "நலக் காப்பகங்கள்"' (முதியோர் இல்லம்) அமைத்தல்.


தமிழினத் தலைவர், தமிழக முன்னாள் முதல்வர், அரசு அலுவலர்களின் நிரந்தரப் பாதுகாவலராக விளங்கிய டாக்டர் கலைஞர் அவர்களின் "நூற்றாண்டு பிறந்த நாள்" நிறைவு விழாவினை நினைவுக் கூறத்தக்க வகையில், மேற்கண்ட நியாயமான கோரிக்கைகளை, மனிதநேயத்துடன் பரிசீலித்து சாதகமான ஆணைகளை விரைவில் வழங்கிட தமிழகத்தில் நல்லாட்சி புரிந்து வரும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை பணிவுடன் வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

**(கோ.சீதாராமன்)**

நன்றியுடன்,

**மாநிலத்தலைவர்**


# சிறப்பு நிகழ்வுகள்





தமிழ்நாடு ஓய்வூதியர் சங்க மாநில பொருளாளர் திரு காளிங்கராயன் அவர்கள் லண்டனில் இருந்து அனுப்பிய புகைப்படம்


---



டி என் ஜி ஒ யூ தலைவருடன் கிருஷ்ணகிரி மாவட்ட தலைவர் திரு நாராயணன் சந்திப்பு



டி என் ஜி ஒ யூ தலைவருடன் மாநில மகளிர் அணி அமைப்பாளர் தஞ்சை திருமதி ரேணுகா சந்திப்பு




– மாநில மையம்



செங்கல்பட்டு மாவட்ட நிர்வாகி திரு. ராமசாமி அவர்களின் 70 வது பிறந்தநாளுக்கு வாழ்த்து தெரிவித்தோம்.

# சிறப்பு நிகழ்வுகள்



கிருஷ்ணகிரி மாவட்ட மகளிர் அணி நிர்வாகிகள் திருமதி பத்மாவதி திருமதி பேபி நளினி ஆகியோருக்கு பணி செய்த இடத்தில் பாராட்டுக்கள்



காஞ்சிபுரம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் தலைமை செவிலியராக பணிபுரிந்து ஓய்வுபெற்ற திருமதி பத்மஜோதி அவர்களுக்கு சால்வை அணிவித்து நினைவு பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டது.



டாக்டர் தர்மாம்பாள் அரசினர் மகளிர் பாலிடெக்னிக் கல்லூரியில் garment Technology இல் பணிபுரிந்து வந்த நிர்மலா அவர்கள்.28/06/2024 வயது மூப்பின் காரணமாக ஓய்வு பெற்றார். அவர்களை சென்னை மாவட்ட இணைச்செயலாளர் திரு நாராயணன் அவர்களும், மத்திய செயற்குழு உறுப்பினர் எஸ். ராஜா அவர்களும் சால்வை அணைத்து அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர்.



மாநில மகளிர் அணி செயலாளர் திருமதி தேனி ரங்கநாயகி அவர்கள் பேரன் பேத்திகளுடன்



மோட்டார் வாகன பராமரிப்புதுறையில் போர்மேனாக பணி நிறைவு பெற்ற திரு C. சண்முகம் அவர்கள் வேலூர் சங்க அலுவலகத்திற்கு வருகை தந்து நமது சங்கத்தில் மாவட்ட தலைவர் முன்னிலையில்உறுப்பினராக சேர்ந்தார்.உடன் மாவட்ட இணை செயலாளர் P. குணசேகரன்.



சென்னை ஓய்வூதியர் சங்க புரவலர் திரு ராஜப்பா அவர்கள் JAO/DMS/Med அவர்களின் பேரன் துவாரகேஷ் திருமண புகைப்படம்



பாளையங்கோட்டை தூய சவேரியார் மேனிலைப் பள்ளி நூலகத்துக்கு ஓய்வூதியர் சங்க பொருளாளர் திரு. பாஷ்யம் அவர்கள் தலைமை ஆசிரியரிடம் புத்தகங்கள் வழங்கிய காட்சி.

சி பி எஸ் வலைத்தளம்

செய்தி வெளியீடு

பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பணி புரியும் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 2023 – 2024ம் ஆண்டிற்கான பங்களிப்பு ஓய்வூதியத் திட்டக் கணக்குத் தாட்கள் தொகுக்கப்பட்டு 01.07.2024 அன்று காலை 10 மணிக்கு அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்தால் வெளியிடப்படுகிறது. அத்துறையின் "cps.tn.gov.in/public" என்ற இணையதள முகவரியில் சந்தாதாரர்கள் தங்களின் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டக் கணக்குத் தாட்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**குடும்பப் பாதுகாப்பு நல நிதி**

ஓய்வூதியர் இயக்குநர் அலுவலகத்தில் பெறப்பட்ட விண்ணப்பங்களுக்குக் குடும்பப் பாதுகாப்பு நல நிதி 10-04-2024 வரை அனுப்பப்பட்டுள்ளன.

## சிந்தனையும், வாழ்க்கையும்

நம்மில் பலர் முதலில் நமக்கு என்ன நடக்க வேண்டும், நாம் என்ன செய்ய வேண்டும் என்று சிந்திப்பதில்லை. அடுத்தவர் என்ன செய்கிறார், அவர் எப்படி செயல்படுத்துகிறார் என்பதை கண்காணித்துக் கொண்டிருப்போம். ஆனால் வெளியே காட்டிக் கொள்ளும்பொழுது, ஒரு பரபரப்பான சூழ்நிலையில் காட்டிக் கொள்வது ரொம்ப பிசி என்று. சில வகையான மனிதர்கள் இருப்பார்கள், எப்போதும் எதையாவது தேடிக் கொண்டே இருப்பது அவர்களின் இயல்பு. 1000 புத்தகத்தைப் படித்திருப்பார்கள், 500 சொற்பொழிவுகளைக் கேட்டு இருப்பார்கள், ஆனால், இன்னும் ஏதோ ஒன்றைத் தேடிக் கொண்டே இருப்பார்கள். ஒரு 10 நிமிடம் இவங்களால் நிதானமாகப் பேசக் கூட முடியாது, நிற்காமல் தேடிக்கிட்டே இருப்பார்கள். இவர்கள் படித்த புத்தகத்தில் இருந்த செய்திகளை, இவர்கள் கேட்ட நிகழ்வுகள் பற்றி, கூட இருக்கிறவர்களின் இடத்தில், இப்படிச் செய்தால் நன்றாக இருக்கும், அப்படிச் செய்தால் நன்றாக இருக்கும், அந்த மகான் இப்படிச் சொன்னாரு, இவரு இப்படிச் சொன்னார், என எதையாவது சொல்லிக்கிட்டே இருப்பார்கள்.

இது ஒரு புறம் இருக்க... நம்மில் பலர் வாழ்க்கையில நடக்கிற செயல்களுக்கு அடுத்தவங்க மேல பழி போடுவதைப் பார்க்கின்றோம். இன்னும் சிலர் நல்ல நேரம் வரவில்லை என்று சொல்லி, அவர்களை அவர்களே ஆறுதல்படுத்திக் கொள்கின்றார்கள். உண்மையில் உலகத்தில் தலை சிறந்த ஆசிரியர் யார் ? நம் வாழ்க்கைதான் மிக சிறந்த ஆசிரியர். வாழ்க்கை கற்றுத் தராத பாடத்தையா ? மற்றவர்கள் கற்றுத் தரப் போகின்றார்கள். ? நமக்குத் தெரியுதோ, தெரியலையோ வாழ்க்கை நமக்கு எதையாவது ஒரு செய்தியைச் சொல்லிக் கொடுத்துக்கிட்டேதான் இருக்கு. நாம்தான் வாழ்க்கை சொல்லித்தரும் பலவற்றைக் கற்றுக் கொள்வதில்லை. சொல்லப் போனால், நம்ம வாழ்க்கையிலே என்ன நடந்தது, நடந்து கொண்டு இருக்கிறது, என்ன நடக்கப் போகிறது என்று கவனிப்பதே இல்லை.

அடுத்தவர்களின் வாழ்க்கையில என்ன நடக்குதுன்னு என்று பார்ப்பதற்கு நேரம் இருக்கிறது. ஆனால், நம் வாழ்க்கையிலே என்ன நடக்குதுன்னு என்று நாம் பார்ப்பதில்லை. வாழ்க்கை என்றால் என்ன ? நிகழ்வுகளின் தொகுப்புத்தான் வாழ்க்கை. அப்போ நிகழ்வுகள் ? நம்ம எடுக்கிற முடிவுகள்தான் நிகழ்வுகள் (நிகழ்ச்சிகள்). நம் வாழ்கை என்பது நம்மைச் சுற்றி நாம் எடுக்கற முடிவுகள் தான். உண்மையைச் சொன்னால் நாம்தான் நமக்குத் தலைவன், எல்லாமே நாம்தான். நீங்க எடுக்கிற ஒவ்வொரு முடிவும்தான் உங்கள் வாழ்க்கை எப்படிப் பயணிக்கிறது என்று முடிவு செய்கிறது. வாழ்க்கையில் ஒவ்வொரு தருணத்தையும் ஏன் ஒவ்வொரு வினாடியையும் நாம் நிகழக் கவனமாக கையாள்வோம். உரிய நேரத்தில் உரிய முடிவு எடுப்போம். வாழ்க்கையோட நிதர்சனமான உண்மையும் இதுதான்.

—மாநில மையம்

# முதுமையில் நீரிழிவு

ஒரு காலத்தில் பணக்காரர்களுக்கு மட்டுமே தாக்கக்கூடியது என்று கருதப்பட்ட நீரிழிவு நோய், இன்று பல்வேறு மட்டத்தில் இருக்கும் மக்களையும் தாக்கும் அளவிற்கு மிகவும் பரவலாகக் காணப்படுகிறது என்று யாவரும் அறிவர். மேலும், இந்நோயுள்ள ஒருவருக்குச் சிறுநீரகம், கண், நரம்பு, இதயம் என்று பல்வேறு உறுப்புகளும் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புகள், இந்நோயற்ற பிறரைவிடப் பன்மடங்கு அதிகம் என்பதையும் பார்க்கிறோம்.

1. ரத்தத்தில் இயல்பாக இருக்க வேண்டிய சர்க்கரையின் அளவு என்ன ?

ஒருவரது ரத்தத்தில் இயல்பாக இருக்க வேண்டிய சர்க்கரையின் அளவு 80 முதல் 120% மில்லி கிராம் ஆகும். அதாவது ஒவ்வொரு 100 மில்லி லிட்டர் ரத்தத்திலும் சர்க்கரை 80 முதல் 120 மில்லி கிராம் வரை இருக்கும். சற்றே விரிவாகக் கூற வேண்டுமென்றால், வெறும் வயிற்றில் ரத்தச் சர்க்கரையின் அளவு 100% மில்லி கிராமிற்கு மிகையாகாமலும் உணவு உண்டு 2 மணி நேரத்திற்குப் பின் 140% மில்லி கிராமிற்கு மிகையாகாமலும் இருக்க வேண்டும்.

2. ஒருவருக்கு நீரிழிவு நோய் உள்ளது என்று நாம் எப்போது கூறுகிறோம் ?

வெறும் வயிற்றில் ரத்தச் சர்க்கரையின் அளவு 126% மி.கி. அல்லது அதற்கு அதிகமாக இருந்தாலும் உணவு உண்டு 2 மணி நேரத்திற்கு பின் 200% மி.லி. அல்லது அதற்கு அதிகமாக இருந்தாலும் ஒருவருக்கு நீரிழிவு நோய் இருக்கிறது என்று பொருள். பொதுவாக, குறைந்தது இரண்டு முறையாவது ரத்தப் பரிசோதனை செய்த பின் இதனை உறுதிசெய்வது நல்லது. அதேபோல் HbA1c என்னும் ரத்தப் பரிசோதனையில் 6.5 சதவிகிதத்திற்கு அதிகமாக இருந்தாலும் நீரிழிவு நோய் உள்ளது எனலாம். மிகச் சரியாகச் சந்தேகமின்றி அறுதியிட்டுக் கூறுவதற்கு Glucose Tolerance Test எனப்படும் சர்க்கரை தாங்கு திறன் பரிசோதனை செய்யப்படுகிறது.

3. கட்டுப்பாடற்ற நீரிழிவு நோயினால் ஏற்படக்கூடிய பின்விளைவுகள் யாவை ?

நீரிழிவு நோய் நமது உடலில் ஏற்படும் வளர்சிதை மாற்றங்கள் மற்றும் ரத்தக்குழாய்கள் சார்ந்த ஒரு நோய். எனவே, அது கட்டுப்பாட்டுக்குள் இல்லாமல் போனால், கீழ்க்காணும் பின்விளைவுகளை ஏற்படுத்தக்கூடும்.

அ) வளர்சிதை மாற்றங்கள் சார்ந்த பின்விளைவுகள்

அபரிமிதமான சர்க்கரை அளவினால் டயபடிக் கீடோ அஸிடோஸிஸ் (Diabetic Keto - Acidosis) மற்றும் ஹைபர் ஆஸ்மோலார் ஸ்டேட் (Hyperosmolar State) எனும் இருவகையான உயிருக்கே ஆபத்து ஏற்படக்கூடிய பின்விளைவுகள் ஏற்படலாம். இந்த இரு பின்விளைவுகளும் ஏற்படும் ஒருவருக்கு மிக அதிகமாகத் தண்ணீர் தாகம், நா வறட்சி, அடிக்கடி சிறுநீர் கழித்தல், அதிக பசி, வயிற்றுவலி, வயிற்றுப் புரட்டல், வாந்தி, தலைச்சுற்றல், மயக்கநிலை (கோமா) போன்ற அறிகுறிகள் ஏற்படும். இப்பின்விளைவுகள் ஒரு மருத்துவம் சார்ந்த அவசர நிலை ஆகும். இவற்றுக்கான சிகிச்சையைத் தீவிரக் கண்காணிப்புப் பிரிவில் மேற்கொள்ளப்பட வேண்டி வரும்.

ஆ) சிறிய ரத்தக்குழாய்கள் சார்ந்த பின்விளைவுகள்

சிறுநீரகப் பாதிப்பு: இதற்கு நீரிழிவு சார்ந்த சிறுநீரக நோய் (Diabetic Kidney Disease) என்று பெயர். இந்நோயுள்ளவரின் சிறுநீரகங்கள் சரியான முறையில் ரத்தத்தில் உள்ள அசுத்தங்களைப் பிரித்தெடுத்துச் (வடிகட்டி) சிறுநீரில் வெளியேற்றும் தன்மையை இழப்பதால் சிறுநீரகச் செயல்திறன் இழப்பு ஏற்படுகிறது. அவ்வாறு ரத்தத்தில் அசுத்தங்கள் அதிகரிப்பதைக் குறிக்கும் பரிசோதனைகள், ரத்த யூரியா மற்றும் கிரியாடினின் என்னும் பரிசோதனைகள் ஆகும். இயல்பாக இருக்க வேண்டிய யூரியா அளவு 20 முதல் 40% மி.கி. ஆகும். அதேபோல், இயல்பாக இருக்க வேண்டிய கிரியாட்டினின் அளவு சுமார் 1 முதல் 1.1% மி.கிராமிற்குக் குறைவானது ஆகும். இவைதவிர கணிக்கப்பட்ட சிறுநீரக வடிகட்டும் திறன் எனப்படும் பரிசோதனையும் ஒருவரது சிறுநீரகத்தின் செயல்திறன் பற்றி அறிய உதவுகிறது. இதன் இயல்புநிலை நிமிடத்திற்கு 100 – 120 மி.லி. ஆகும். 60 மி.லி. க்கு குறைவாக இருந்தால் சிறுநீரகச் செயல்திறன் இழப்பு உள்ளது என்று பொருள். ஒருவரது சிறுநீரில் புரதம் வெளிப்படுவதும் சிறுநீரகம் பாதிக்கப்பட்டிருப்பதை உணர்த்துகிறது. இன்றைய காலகட்டத்தில் சிறுநீரகச் செயல்திறன் இழப்பிற்கு மிகவும் முக்கியமான காரணமாக இருப்பது நீரிழிவு நோய்தான் என்றால் மிகையாகாது, இதைச் சற்றே வலியுறுத்திக் கூற வேண்டும். ஏனென்றால், ரத்தத்தில் சர்க்கரையின் அளவை ஆரம்பம் முதலே நன்கு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதன் மூலம் சிறுநீரகப் பாதிப்பை அறவே தவிர்க்க முடியும்.

கண்கள் பாதிப்பு: இதற்கு நீரிழிவு நோய் சார்ந்த கண்கள் பாதிப்பு (Diabetic Retinopathy) என்று பெயர். இதில் கண்களின் விழித்திரை பாதிக்கப்பட்டு, விழித்திரையில் உள்ள சிறிய ரத்த நாளங்களில் இருந்து ரத்தம் கசிவதால், கண் பார்வை பாதிக்கப்படுகிறது. இது தவிர, நீரிழிவு நோயற்ற



பிறருக்கு ஏற்படும் கண் புரை மற்றும் கண்களில் ஏற்படும் உயர் அழுத்தம் (Glaucoma) போன்ற நோய்களும் பார்வைப் பாதிப்புக்கான காரணங்களாக அமையலாம்.

நரம்புகள் பாதிப்பு: இதற்கு நீரிழிவு சார்ந்த நரம்புகள் பாதிப்பு என்று பெயர். இதில் உடலின் பல்வேறு நரம்பு மண்டலங்களும் பாதிக்கப்படுவதன் மூலம் பல்வேறு அறிகுறிகளும் ஏற்படுகின்றன.

இதயத்தில் உள்ள சிறிய ரத்தக் குழாய்கள் பாதிப்பு சார்ந்த பின்விளைவுகள்: இதில், இதயத்தில் உள்ள சிறிய ரத்தக் குழாய்கள் பாதிக்கப்படுவதால் இதயச் செயல்திறன் இழப்பு ஏற்படுகிறது.

இ) பெரிய ரத்தக்குழாய்கள் பாதிப்பு சார்ந்த பின்விளைவுகள்:

இதயப் பாதிப்பு: இதில் இதயத்தின் ரத்தக்குழாய்கள் பாதிப்பு, இதய வலி, மாரடைப்பு நோய் மற்றும் இதயச் செயல்திறன் இழப்பு போன்ற பின்விளைவுகள் ஏற்படலாம். இதயத்தின் நரம்பு மண்டலம் பாதிக்கப்பட்டு, இதயத் துடிப்பு பாதிக்கப்பட்டு இதய ஓட்டத் தடங்கல் என்னும் இதய அடைப்பு ஏற்படலாம்.

மூளைப் பாதிப்பு: இதில் மூளைக்குச் செல்லும் ரத்தக்குழாய்கள் பாதிக்கப்பட்டு பக்கவாத நோய், தலைச்சுற்றல், மயக்கம் போன்ற பின்விளைவுகள் ஏற்படலாம். இதற்கு Cerebrovascular Disease என்று பெயர்.

கால்கள் பாதிப்பு: கால்களுக்குச் செல்லும் ரத்தக் குழாய்கள் பாதிக்கப்படுவதால் நடக்கும்போது கால்களில் வலி மற்றும் கால்கள் கருகுதல் (Gangrene) போன்ற பின்விளைவுகள் ஏற்படலாம். இதற்கு Peripheral Vascular Disease என்று பெயர்.

பிற பெரிய ரத்தக்குழாய்கள் பாதிப்பு: இதயத்திலிருந்து உடலின் பல்வேறு பகுதிகளுக்கு ரத்தத்தை எடுத்துச் செல்லும் மிகப்பெரிய ரத்தக்குழாயான மகாதமனி மற்றும் சிறுநீரகங்களுக்கு ரத்தத்தை எடுத்துச் செல்லும் சிறுநீரகக் குழாய்களும், கட்டுப்பாட்டுக்குள் இல்லாத நீரிழிவு நோயினால் பாதிக்கப்படலாம்.

ஈ) நுண்கிருமிகளின் தாக்கத்தால் ஏற்படும் பின்விளைவுகள்

நீரிழிவு நோய் உள்ளவர்களை நுண்கிருமிகள் தாக்குவதால் பல்வேறு பின்விளைவுகள் ஏற்படுகின்றன, அவற்றுள் முக்கியமானவை:

- கால்களில் ஏற்படும் ஆறாப் புண்ணும், அத்தகைய புண்ணினால் ஏற்படக்கூடிய நீரிழிவு நோய் கால் பாதிப்பு எனப்படும் Diabetic Foot Syndrome எனும் நோய். இப்பாதிப்பினால் ஒருவர் கால்களையே இழக்க நேரிடுவதோடு அல்லாமல் சில சமயங்களில் உயிரையே இழக்க நேரிடுகிறது.
- ராஜபிளவை எனப்படும் CARBUNCLE சீழ்கட்டி. இன்சுலினும் கிருமிகளின் தாக்கத்தை வெல்ல உதவும் ஆன்டிபயாடிக் மருந்துகளும் கண்டுபிடிப்பதற்கு முன் இத்தகைய சீழ்கட்டிகள் உயிர்கொல்லி நோயாக இருந்தன.
- காசநோய் நீரிழிவு நோயாளிகளைத் தாக்கக்கூடிய மற்றுமொரு முக்கியமான நோயாகும்.
- இன்றைய காலகட்டத்தில் சிறுநீரகம் சார்ந்த சிறுநீர்த்தொற்று எனப்படும் நுண்கிருமிகள் தாக்கமும் இந்நோயாளிகளுக்கு ஏற்படும் மற்றுமொரு முக்கியமான பின்விளைவாகும்.
- நீரிழிவு நோயின் சிகிச்சைக்காக உபயோகப்படுத்தக்கூடிய இன்சுலின் மற்றும் மாத்திரைகளைச் சரியான மேற்பார்வையின்றி அளவுக்கதிகமாக உபயோகித்தால் தாழ் சர்க்கரை நிலை (ஹைப்போகிளைசிமியா) ஏற்படலாம். இந்நிலையில் நோயாளிக்குப் படபடப்பு, வியர்வை, நடுக்கம், மயக்கநிலை, வலிப்பு மற்றும் நினைவற்ற நிலை (கோமா) ஏற்படலாம். எனவே, ஒவ்வொரு நீரிழிவு நோயாளியும் தாழ் சர்க்கரை நிலை மற்றும் அதன் அறிகுறிகளை அறிந்திருப்பதோடு அல்லாமல், அதற்கான முதலுதவி பற்றியும் அறிந்திருக்க வேண்டும். மேற்கூறிய அறிகுறிகள் ஏதும் ஏற்பட்டால் உடனே சர்க்கரை அல்லது குளுக்கோஸை சுமார் 5 டீஸ்பூன் அளவு தண்ணீரில் கரைத்துச் சாப்பிடலாம் அல்லது ஒரு சாக்லேட் சாப்பிடலாம். உடனே, மேற்கூறிய அவரின் அறிகுறிகள் நீங்கி இயல்புநிலையை அடைவார். அதற்குப் பின், மருத்துவருடன் கலந்தாலோசித்து மறுபடியும் தாழ் சர்க்கரை நிலை ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

நன்றி : முதுமை எனும் பூங்காற்று

# CHAKRA CRITICAL CARE CENTER AND HOSPITALS

**GOVERNMENT INSURANCE CLAIMABLE HOSPITAL**




## தமிழ்நாடு அரசு ஊழியர்கள் மற்றும் ஒய்வூதியர்களுக்கான

## கட்டணம் இல்லா மருத்துவம்

அரசு பணியில் அயராது உழைக்கும் மற்றும் உழைத்து களைத்த அனைத்து ஊழியர்களும் சக்ரா மருத்துவமனை வழங்கும் கட்டணமில்லா மருத்துவத்தை பயன்படுத்தி தங்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்திக்கொள்ள ஓர் அறிய வாய்ப்பு

### DR. அமுதகுமார் இராமசாமி

அவர்களின் சிறப்பான ஆலோசனைகளோடு, கூடிய சிகிச்சைகளுடன், *90* வயதிற்கும் மேல் பூரண உடல் நலத்துடன், ஆரோக்கியத்தை அரவணைத்துச் செல்ல அழைக்கிறது சக்ரா மருத்துவமனை.

### மருத்துவமனையின் சிறப்பம்சங்கள்

அனைத்து தனியார் மருத்துவ காப்பீட்டு திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனை

### திரு. தேவராஜ்

அனைவருக்கும் வணக்கம் என் பெயர் தேவராஜ் நான் கல்வி துறையில் பணிபுரிந்து ஒய்வு பெற்ற அரசு ஊழியர் எனது கண் பார்வையானது சற்று மங்கிய நிலையில் தெரிந்ததால் நான் எனது சங்கத்தில் விழாவில் சக்ரா மருத்துவமனை நடத்திய மருத்துவ முகாமில் கலந்து கொண்டேன் அதில் என்னை பரிசோதித்த மருத்துவர் எனக்கு catract அறுவை சிகிச்சை செய்து கொள்ள அறிவுறுத்தினர் மேலும் தங்களது மருத்துவமனையில் ஒய்வூதியர் மற்றும் அரசு ஊழியர்களுக்கு கட்டணமில்லா மருத்துவ சேவை உள்ளதாக கூறினார்.நானும் சக்ரா மருத்துவமனையிலே சிகிச்சை மேற்கொண்டேன் நான் இதுவரை பார்த்திராத ஒரு கவனிப்பும், கனிவான முறையில் சிகிச்சையும் எனக்கு செய்து தந்தனர். நான் எனது நண்பர்களுக்கு இந்த மருத்துவமனையை பரிந்துரைத்தேன். மேலும் அரசுப்பணியாளர்கள் நமது மருத்துவ காப்பீடு அட்டையை பயன்படுத்தி நல்ல முறையில் சக்ரா மருத்துவமனையில் சிகிச்சைப் பெற சிபாரிசு செய்கிறேன்.

எண்.68&69 , 17வது தெரு, (செந்தில் நகர் பஸ் ஸ்டாப் அருகில்) ரிங் ரோடு, கொளத்தூர், சென்னை-600099.

மருத்துவம் தொடர்பான சேவைகளுக்கு அழைக்க

**8925904275 | 8925904291**

# கருவூல அலுவலர்களுடன் சந்திப்பு


கருவூல ஆணையரின் நே.மு. உ. திருமதி பார்வதி பணி ஓய்வு


வேலூர் RJD திருமதி சாந்தி மணி பணி ஓய்வு



தாம்பரம் திரு டி. ரபிரட்சன் சந்திப்பு



கிருஷ்ணகிரி திரு ராஜன் திரு ஹரிஹரன் சந்திப்பு



தேனி திரு அருணாச்சலம் சந்திப்பு



தூத்துக்குடி கருவூல சிறப்பு கூட்டம்